# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 52 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 04, செவ்வாய்க்கிழமை 17.01.2017


## டாவோஸுக்கு பயணமானார் ரணில்

கொழும்பு, ஜன. 17
சுவிஸின் டாவோஸ் நகரில் இன்று ஆரம்பமாகும் உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக, கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சுவிஸுக்குப் பயணமாகியுள்ளார்.
உலகப் பொருளாதார மாநாடு இன்று தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் 40 க்கு மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பல தலைவர்களுடனும் இந்த மாநாட்டின் >> 25

## பேக்கரி உற்பத்திகள் விலைகள் உயரக்கூடும்

கொழும்பு, ஜன. 17
பேக்கரி உற்பத்திப்பொருள்களுக்கான உள்ளீடுகளுக்கு வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. பேக்கரிப் பொருள்களின் விலை அதிகரிக்கப்படக் கூடும் என்று பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே.ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.
பேக்கரி உற்பத்திப் பொருளுக்கான உள்ளீடுகளான மாஜரின், பாம் ஒயில், சீனி, மா என்பவற்றின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.
'பேக்கரி உற்பத்திப்பொருள்களுக்கான உள்ளீடுகளின் விலை அதிகரித்தால் உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிக்கும். எப்படியிருந்த >> 25

## காலம் கடத்தாமல் விரைவில் வரட்டும் புதிய அரசமைப்பு

*இலங்கைக்கான் ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டுங் லை மார்க் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஜன. 17
இலங்கைக்குப் புதிய அரசமைப்பு வேண்டும். இது காலம் கடத்தலின்றி விரைவாகவே வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டிருக்கின்றது.
இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டுங் லை மார்க் தெரிவித்தார். >> 25

## 40 ஆண்டுகளின் பின் மிகமோசமான வறட்சி

எதிர்கொள்ள அரசு ஆயத்தம்

கொழும்பு, ஜன. 17
40 ஆண்டுகளின் பின்னர் நாடு மோசமான வறட்சியை எதிர்கொண்டுள்ளது. இதனைச் சமாளிக்கும் வகையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு இலங்கை அரசு அறிவித்துள்ளது.
கடந்த ஆண்டு சராசரி மழையளவில் 70 வீதமே பெய்திருந்தது. நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. நீர்த்தேக்கங்களில் உள்ள நீர், இரண்டு >> 25

### முச்சந்தி முரளி



நீலச்சட்டைக் காரர்தான் கடத்தலில கெட்டிக்காரர்கள் பாத்தியளே...

வறட்சியிலிருந்து மீட்சி பெற

# ஐ.நாவின் உதவியை நாடுகிறது இலங்கை

*முகவர் அமைப்புக்களுடன் ஜனாதிபதி முக்கிய பேச்சு*

கொழும்பு, ஜனவரி 17
நாடு எதிர்கொண்டுள்ள வறட்சிப் பாதிப்புக்களைச் சமாளிப்பதற்கு ஐ.நா.வின் உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது. நிவாரணங்கள் வழங்குவது உள்ளிட்ட வறட்சிப் பாதிப்பிலிருந்து மீட்சி பெறுவதற்கு ஐ.நா. முகவர் அமைப்புக்களுடன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.
அரச தலைவரின் செயலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பில், அரச தலைவரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,
ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர், ஐ.நா. >> 25

## குடிதண்ணீர் தட்டுப்பாடா? அழையுங்கள் 117 க்கு

கொழும்பு, ஜன. 17
நாட்டில் நிலவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு தொடர்பான முறைப்பாடுகளை 117 என்ற இலக்கத்துக்கு அழைப் பதன் மூலம் தெரிவிக்க முடியும் >> 25

## பொருத்து வீடு என்ற இரும்புக் கூட்டை வழங்காது தடுத்தவர் சிவஞானசோதியே

***அங்கஜன் எம்.பி. புகழாரம்***

யாழ்ப்பாணம், ஜன. 17
வடக்கு மக்களுக்குப் பொருத்து வீடு என்ற இரும்புக் கூட்டை வழங்க முன்னெடுக்கப்பட்ட முயற்சியிலிருந்து இந்தப் பகுதி மக்களைக் காப்பாற்றியவர், மீள்குடியேற்ற அமைச்சின் முன்னாள் செயலர் வே.சிவஞானசோதியே.
இவ்வாறு கூட்டுஅரசின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவித்தார்.
தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்துக்குமான >> 25



*கொழும்பு நாரஹேன்பிட்டி டட்லி சேனநாயக்க சிங்கள வித்தியாலயத்தில் நேற்று நடந்த தைப்பொங்கல் நிகழ்வில் சகல இனத் தவரும் பங்குபற்றினர். அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.* (த-5)

தமிழ் இளைஞர் கடத்தல்

## கடற்படை உயர் அதிகாரி சி.ஐ.டியினரால் கைது

26 ஆம் திகதி வரை விளக்கமறியல்

கொழும்பு, ஜன. 17
கொழும்பில் கப்பம் கோரித் தமிழ் இளைஞனைக் கடத்திக் காணாமற்போகச் செய்த குற்றச்சாட்டில், கடற்படை உயர் அதிகாரி ஒருவரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். அவரைக் கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்படுத்தியபோது எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.
கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் 2008ஆம் ஆண்டு >> 25

## 2021 ஆம் ஆண்டே தேர்தல் மைத்திரிதான் வேட்பாளர்

*உறுதியாக உள்ளது சு.க.*

கொழும்பு, ஜன. 17
அடுத்த அரசுத் தலைவருக்கான தேர்தல் 2021 ஆம் ஆண்டே நடைபெறும். சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறி >> 25



## எல்லைநிர்ணய அறிக்கை இன்று முஸ்தபாவிடம்

கொழும்பு, ஜன. 17
சர்ச்சையையும் நீண்ட இழுபறியையும் ஏற்படுத்தியிருந்த உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய அறிக்கை, அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் >> 25

கூட்டு அரசிலிருந்து

## விலகினார் ரத்ன தேரர்

*சுயாதீனமாகச் செயற்பட முடிவு*

யாழ்ப்பாணம், ஜன. 17
கூட்டு அரசிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் நியமன நாடாளுமன்ற உறுப்பினரும், ஜாதிக ஹெலஉறுமயவின்உறுப்பினருமான அத்துரலிய ரத்ன தேரர் நேற்று விலகியுள்ளார். அரசின் உள் முரண்பாடுகள் காரணமாகவே இவர் விலகியுள்ளார் எனக் கொழும்பு அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்ட போதும், ரத்ன தேரர் அதனை மறுத்துள்ளார்.
நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படப் போவதாகத் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு முடிவு எடுத்துள்ளமை >> 25



## மனித உரிமை குறித்த தேசியத் திட்டத்துக்கு இன்று கிட்டும் அனுமதி

***யாழ்ப்பாணத்தில் நம்பிக்கை வெளியிட்டார் ஹர்ச டி சில்வா***

யாழ்ப்பாணம், ஜன. 17
மனித உரிமைகள் தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைச்சரவையின் அனுமதி இன்று கிடைக்கப் பெறும் என்று பதில் அயலுறவுத் துறை அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற நல்லிணக்க நிகழ்வுகளில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
காயங்களைக் குணப்படுத்துவதற்கு மனித உரிமைகள் மீதான அக்கறை மாத்திரம் போதாது. இந்த அக்கறை >> 25

## ஐ.நா. தீர்மானச் செயற்படுத்தலில் தங்கியுள்ளது ஜி.எஸ்.பி. பிளஸ்

மனோ கணேசனிடம் கூறினார் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜன. 17
ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தே, இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை கிடைக்கப் பெறுவது தங்கியுள்ளதாக, ஐரோப்பிய தூதுவர் >> 25



# நுகேகொடையில் மகிந்தவுடன் சில புதிய முகங்கள்

கொழும்பு, ஜன. 17
நுகேகொடையில் 27ஆம் திகதி நடத்தப்படும் கூட்டத்தில் மகிந்த ராஜபக்சவுடன் புதிய முகங்கள் சில கலந்துகொள்ளவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்:

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அந்தக் கூட்டத்தைச் சீர்குலைப்பதற்கு அரசு தற்போது சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. எமது குழுவில் சிலரைக் கைது செய்துள்ளது. எவ்வாறாயினும், கூட்டம் வெற்றிகரமாக நடத்தப்படும். இந்த அரசு நாட்டுக்கு வேண்டாதவற்றைச் செயற்படுத்தி வருகின்றது என்றார். (த-5)

## தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# யாழ். மருத்துவபீடத்தின் மாணவர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 17
தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 36ஆவது அணி மாணவர்கள் ஒரு வாரகால உணவு ஒறுத்தல் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீட மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

'நான்கு கோரிக்கைளை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நடைமுறைப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும் வரை தனியார் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களை உள்வாங்குதல் நிறுத்தப்பட வேண்டும், மருத்துவக்கல்வி, மருத்துவத்துறை மற்றும் நோயாளர் பராமரிப்புச் சேவை என்பவற்றின் தரத்தை உறுதிப்படுத்தவும் அவை சார்ந்த விடயங்களைக் கையாள்வதற்கும் இலங்கை மருத்துவ சபை மாத்திரம் எந்தவித அரசியல் தலையீடுகளும் இன்றி சுயாதீனமாக செயற்படவேண்டும்,

இதுவரை சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களின் எதிர்கால நலன் கருதி இலங்கை மருத்துவ சபையால் சுயாதீனமாக அவர்களுக்குப் பொருத்தமான தீர்வு வழங்கப்படவேண்டும், தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் நிவில் பெர்ணான்டோ வைத்தியசாலை முற்று முழுதாக அரசமயமாக்கப்படுவதுடன் இலங்கை மருத்துவ சபையால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு அரச மருத்துவ பீடமாக்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை அரசுக்கு முன்வைத்தும் சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

தனியார் மருத்துவக் கல்லூரியால் நாட்டின் சாதாரண மக்களுக்கும் சுகாதாரத் துறைக்கும் ஏற்படப் போகும் பாதிப்பு தொடர்பாக மக்களுக்கும் ஏனைய தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் எமது போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம்.

சைட்டம் என்ற தனியார் மருத்துவ கல்லூரியை அரச உடமையாக மாற்றி அவற்றின் ஊடாகவும் இலவசமாக அதிகளவான மருத்துவ மாணவர்களை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை மருத்துவ அமைப்பை இழிவுபடுத்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் குறித்த தனியார் மருத்துவக் கல்லூரியின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். இதற்கான அழுத்தத்தை அரசு கொடுக்க வேண்டும்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர். (வ-4,8)

# மாணவியின் உயிரை எடுத்தது செல்பி



மட்டக்களப்பு, ஜன.17
திருகோணமலை - வெருகல் கடற்கரையில், கல்லடிக்கரைக்கல் என்னுமிடத்தில் கல்லின்மேல் நின்று செல்பி எடுத்துக் கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர் தவறி கடலில் விழுந்து உயிரிழந்தார். இந்தச் சம்பவம் பொங்கல் தினத்தன்று இடம்பெற்றுள்ளதாகச் சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

வெருகல் - வாழைத்தோட்டம் கிராமத்தைச் சேர்ந்த செல்வசிங்கம் பிரதீபா (வயது-20) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

சம்பவதினம் தனது தோழிகளுடன் கடற்கரைக்கு சென்ற இவர் கல்லடிக் கரைக்கல் எனும் குன்றில் ஏறி நின்றவாறு செல்பி எடுக்க முயன்றபோது, எதிர்பாராத விதமாகக் கால் தவறிக் கடலில் விழுந்து அலையில் அள்ளுண்டு காணாமற்போனார். காணாமற்போன அவரை அங்கிருந்த மீனவர்களும்கிராம மக்களுமாகச் சேர்ந்து தேடி பின்னர் சடலமாக மீட்டுள்ளனர்.

சடலம், மூதூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

வாழைத்தோட்டம் எனும் பின்தங்கிய அந்தக் கிராமத்திலிருந்து இந்த மாணவியே முதன்முதலாகப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவானார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாணவி முதன்முறையாகப் பல்கலைக்கழகத்துக்கு செல்லவேண்டிய தினத்தில் அவரது சடலம் வீட்டுக்கு வந்ததையிட்டு முழுக் கிராமமுமே சோகத்தில் மூழ்கியுள்ளது.

சேருநுவர பொலிஸார் சம்பவம் பற்றிய விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (த-ய-46-45-40)

# வறட்சியை எதிர்கொள்ள அமைச்சுகள் கைகோர்ப்பு

கொழும்பு, ஜன 17
நாட்டில் ஏற்படவுள்ள கடும் வறட்சி நிலைக்கு முகங்கொடுக்க ஐந்து அமைச்சுகள் ஒன்றிணைந்த நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

விவசாய, நீர்ப்பாசன, இடர்முகாமைத்துவ, மின்சக்தி மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சுகள் ஒன்றிணைந்து செயற்படவுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஒன்றிணைந்து சமகால நிலை மற்றும் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (த)

# சம்பந்தனும்ஹக்கீமும் தீர்வுக்காக ஒன்றுபட்டு உறுதியுடன் உழைப்பு

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன 17
தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் ஒன்றுபட்டு, இரு சமூகங்களும் எவ்வளவு கூடிய அதிகாரங்களைப் பெற முடியுமோ, அந்தளவுக்குப் பெறவேண்டும் என்பதில் உறுதியாகச் செயற்படுகின்றனர். இரு தலைமைகளும் மனந்திறந்து பேச்சு நடத்தி பிரச்சினைகளுக்குத்தீர்வுகாணவேண்டும். இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

காணிப் பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பான நடமாடும் சேவை, ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ், முஸ்லிம் மக்கள் இன முரண்பாடுகள் இல்லாமல் எவ்வாறு ஒற்றுமையாக வாழ்ந்தார்களோ, அந்த நிலமை மீண்டும் உருவாகவேண்டும் என்பது எனக்குத் தனிப்பட்ட ஆசையாக உள்ளது. இதற்காக என்ன விலை கொடுக்கவும் தயாராக உள்ளோம்.

கடந்த காலப் போர்ச் சூழ்நிலையின் போது, சகல இருப்புகளையும் இழந்த சமூகங்களாக வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள் காணப்படுகின்றார்கள்.

சிறுபான்மையினரின்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை ஜனாதிபதியும் தலைமை அமைச்சரும்பெற்றுத்தருவார்கள் என்ற நம்பிக்கை இன்னும் எமக்கு உள்ளது. சிறுபான்மைச் சமூகங்களுக்கு எந்தவிதத் தீர்வும் கிடைக்கக் கூடாது, அவர்கள் நசுக்கப்படவேண்டும் என்ற நிலையில் கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்கள் தற்போதும் தீர்வு விடயத்தில் முட்டுக்கட்டையாக உள்ளனர்.

இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல பேச்சுக்கள் நடைபெற்று, அவை வெறுமனே பேச்சுக்களாக மாத்திரமே இருந்தன. தற்போது நடைபெறும் பேச்சுக்களும் அப்படி இருக்கக்கூடாது.

எமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல விட்டுக்கொடுப்புகளைச் செய்யத்தயாரகஉள்ளோம். ஆனால், விட்டுக்கொடுப்புகள் என்ற போர்வையில் சிறுபான்மைச் சமூகத்தினுடைய ஒட்டுமொத்தமான அரசியல் உரிமைகளை முடக்கும் செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு இடமளிக்கப் போவதில்லை-என்றார். (த)



# இன ஒடுக்குமுறைச் சட்டம்; இலங்கை- ஆஸி. ஆராய்வு

இனஒடுக்குமுறைச் சட்டம் தொடர்பில் ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜூலியன் ஹில்லுக்கும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.,

ஆஸ்திரேலியாவில் இன ஒடுக்குமுறைச் சட்டம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது, பொருளாதார அபிவிருத்தி, கல்வி மற்றும் இன ஒடுக்குமுறைகளைத் தவிர்த்தல் போன்ற விடயங்கள் குறித்தும் இதில் கலந்துரையாடப்பட்டது.

பல்லின மக்கள் வாழ்ந்து வரும் நாடுகளில் இவ்வாறான சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அனைத்து இன மக்களினதும் உரிமைகளை உறுதி செய்ய வழியமைக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹில், ஊடகங்களும் இன ரீதியில் ஒடுக்குமுறைகளை மேற்கொள்ள அனுமதிக்கக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

கருத்துச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் அதேவேளை, இன்னுமொரு இனத்தை ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதை அனுமதிக்க முடியாது. இதற்காக ஆஸ்திரேலியாவில் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இன ஒடுக்குமுறையைத் தடுப்பதற்குத் தனியான சட்டம் உருவாக்கும் யோசனை வரவேற்கப்படவேண்டியது. இது நல்ல பயனை வழங்கும். இன ஒடுக்குமுறைகள் குறித்து அவதானிக்கத் தனியான ஓர் பிரிவு இலங்கையிலும் உருவாக்கப்படுவது காத்திரமானதாக அமையும் என்று அமைச்சர் சுவாமிநாதன் இதன்போது நம்பிக்கை வெளியிட்டார். (த-5)

## சேனாதிபதி வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு, ஜன 17
அவன்கார்ட் தலைவர் நிஸங்க சேனாதிபதி, ரக்ன ஆராக்ச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோருக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
கொழும்பு பிரதான நீதிவான் லால் பண்டாரவால் இந்த உத்தரவு நேற்றுக் காலை பிறப்பிக்கப்பட்டது.
அவன்கார்ட் நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பிலான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
இதன்போதே, இருவரினதும் கடவுச் சீட்டுக்களைத் தடுத்து வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டார்.
இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கிழக்குப் பல்கலையில் மாணவர் ஆர்ப்பாட்டம்

## விடுதி வசதிகள் ஏற்படுத்தக் கோரி

செங்கலடி, ஜன.17
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கு விடுதிவசதி ஏற்படுத்தித்தருமாறு கோரி நேற்று மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வந்தாறுமூலை வளாக முன்றிலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சகல பீடங்களையும் சேர்ந்த மூவின மாணவர்களும் கலந்துகொண்டனர்.
கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு வெளிமாவட்டங்களிலிருந்து வரும் மாணவர்கள் வெளியிடங்களில் தங்குவதால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் தெரிவித்தனர்.
பல்கலைக்கழகத்திலிருந்து 3000 ரூபா மாத்திரமே கிடைக்கிறது. வெளியிடங்களில் வாடகைக்குத் தங்குவதால் 5000 ரூபா வாடகை கொடுக்கவேண்டும்.
இது தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் உரிய நடவடிக்கையெடுத்து விடுதி வசதி ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
இது தொடர்பாகப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேட்டபோது, இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கு விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் போதுமான விடுதிகள் இல்லை. முதலாம் வருட மாணவர்களுக்கு முழுமையான விடுதி வசதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-ய-47)





## இரு வாரங்களில் மட்டும் 1311 டெங்கு நோயாளர்

கொழும்பு, ஜன 17
கடந்த 15 நாள்களுக்குள் 1311 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டிருப்பதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
கொழும்பு மாவட்ட பகுதியில் மட்டும் 342 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயால் 126 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 84 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது. (இ)

## கடலில் மூழ்கி இளைஞர் சாவு

மூதூர், ஜன.17
திருகோணமலை – கிண்ணியாமாபிள் கடலில் நீராடிய இளைஞர் ஒருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.
கிண்ணியா மகரூப் கிராமத்தைச் சேர்ந்த ரகுமத்துல்லா ரஜாய் (வயது – 19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.
நீராடிக்கொண்டிருந்த இந்த இளைஞர் கடலில் பெரும் அலை ஏற்பட்டதைத் தொடர்ந்து காணாமற்போனார்.
இதன் பின்னர், கடற்படையினரின் உதவியுடன் அவர் கண்டுபிடிக்கப்பட் டார்.
இவரைக் கிண்ணியா ஆதார வைத்தியசாலையில் சேர்த்தபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் கூறினார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (த-ய-40)

# புல்மோட்டை மீனவர் நேற்று கவனவீர்ப்பு

## கட்டுவலைத் தொழிலை நிறுத்தியமையைக் கண்டித்து

திருமலை, ஜன.17
திருகோணமலை – புல்மோட்டை கொக்கிளாய் களப்புச் சிறுகடல் மீனவர்கள் நேற்றுப் பிற்பகல் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



சுமார் 60 வருட காலமாகத் தொழிலாகச்செய்துவந்த கட்டுவலைத் தொழிலை நிறுத்தியமையைக் கண்டித்தே மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
புல்மோட்டை–கொக்கிளாய் சந்தியில் ஆரம்பித்த பேரணி கனியமணல் கூட்டுத்தாபனத்திற்குச் சென்று மீண்டும் சந்தியை அடைந்தது.
இந்தப் போராட்டத்தில் புல்மோட்டைப் பிரதேசத்தின் 21 சங்கங்களைச் சேர்ந்த 2500க்கும் மேற்பட்ட மூவின மீனவர்களும் கலந்துகொண்டனர்.
அகில இலங்கை மீனவர் சங்கத்தின் அமைப்பாளரும், மக்கள் விடுதலை முன்னணியின் தென் மாகாணசபை உறுப்பினருமான ரத்னகமகே உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர்.
இதன்போது மீனவர்களால் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.
இந்த மனுவில், திருகோணமலை மாவட்டத்துக்கு உரித்தான புல்மோட்டை கொக்கிளாய் களப்பில் மீனவ மக்கள் இதுவரை உபயோகித்த வலைகளைச் சட்டவிரோதமானதென அறிவித்துள்ளனர்.
எனவே இது தொடர்பாக அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (த-ய-45)

## ஈரானிடமிருந்து கனியவளம் பெற இலங்கை விருப்பம்

கொழும்பு, ஜன 17
கனியவளத்தையும் அது சார்ந்த உற்பத்திகளையும் ஈரானிடமிருந்து கொள்வனவுசெய்வதற்குஇலங்கை தொடர்ந்தும் ஆவலுடன் இருப்பதாக விஞ்ஞான, தொழினுட்ப மற்றும் ஆய்வு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.
ஈரான் அரசின் அழைப்பின் பேரில் தெஹ்ரானுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமைச்சர், ஈரானின் வெளிவிவகார அமைச்சர் மொஹமட் ஜவாட் சரீப்பை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இலங்கை–ஈரான் இடையே நீண்டகால நல்லுறவு நிலவுவதாக ஈரான் அமைச்சர் குறிப்பிட்டதாக ஈரான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.
பன்னாட்டுக் கொள்கையின் அடிப்படையில் இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளுடன் நட்புறவை விரிவுபடுத்துவதற்கு ஈரான் எதிர்பார்ப்பதாக மொஹமட் ஜவாட் இதன்போது கூறியுள்ளார். (இ)



## வறட்சியினால் வெளியே தெரியும் மஸ்கெலியா பழைய நகர ஆலயம்

கொழும்பு, ஜன 17
மலையகத்தில் தொடர்ந்து நிலவி வரும் வறட்சியான காலநிலையால் மவுஸாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளது.
நீர்மட்டம் குறைந்துள்ளமையால் நீர்த்தேக்கத்தில் மூழ்கியிருந்த மஸ்கெலியா பழைய நகர ஆலயம், பௌத்த விகாரை மற்றும் பள்ளி வாசல் ஆகியன முழுமையாக வெளியே தெரிகின்றன. இதனை மக்கள் ஆவலுடன் பார்வையிட்டு வருகின்றனர். (இ)



இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் மூன்றுக்குத் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 230 உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்றுக் கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர். (த–ய)

# ஈழத் தமிழ் இளைஞர்களின் மனநிலை மாற வேண்டும்

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன. 17

ஈழத்து தமிழ் இளைஞர்கள் மன நிலையில் மாற்றம் ஏற்படாது விட்டால் இலங்கையில் தமிழர்கள் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள். இதையே அண்மைய புள்ளி விவரத் தகவல்கள் வெளிக் காட்டுகின்றன.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, தண்டுவான் கிராமத்தில் உள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நீண்ட காலமாக தற்காலிக கொட்டிலில் இயங்கியது. வடக்கு மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட ஐந்து வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகனால் திறக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நகரப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதை விட கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பித்தால் தான் ஆசிரியர்கள் பலதைச் சாதிக்க முடியும். அவர்கள் இறுதிக்காலத்தில் மாணவர்களால் மதிக்கப்படுவார்கள். ஆசிரியர்கள் கிராமப் புற பாடசாலைகளில் கற்பிப்பதை சிறந்த சந்தர்ப்பமாகக் கருத வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் எல்லோரும் அரச வேலைக்கு ஆசைப்படுகின்றனர். என்னிடமும் பலர் வந்திருக்கின்றார்கள். என்ன வேலை செய்வதென்று ஓர் எண்ணப்பாடு இல்லாது இருக்கின்றார்கள். 55 வயதிலே கிடைக்கும் ஓய்வூதியத்துக்காக அவர்கள் வாழ்க்கையை வீணடிக்கின்றார்கள். இளைஞர்கள் தங்கள் எண்ணங்களை மாற்ற வேண்டும். கிடைக்கும் வளங்களைக் கொண்டு மெல்ல மெல்ல முன்னேற வேண்டும். அதை விடுத்து ஒரே தடவையில் வெற்றி அடைந்து விடலாம் என்பது முடியாது. படிப்படியாக முன்னேற வேண்டும்.

பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு சமூகத்துக்குள் வரும் 84 வீதமான மாணவர்கள் புலம்பெயர்ந்து செல்வதற்கே விரும்புகின்றார்கள். 10 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் புலம்பெயர்ந்த தேசங்களில் வாழ்கின்றார்கள். 3 லட்சம் மக்கள் இந்தியாவில் வாழ்கின்றார்கள். 2040ஆம் ஆண்டு ஈழத்தமிழர்கள் நாட்டில் மூன்றாம் நிலைச் சிறுபான்மை இனத்தவர்களாக மாறி விடுவார்கள் என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மதிப்பிட்டு அடிப்படையில் இன்று ஈழத் தமிழ் இனம் தன்னைத்தக்கவைத்துக்கொள்ளாத நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றது. கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் இந்தச் சிந்தனையில் இருந்து மாறவேண்டும். -என்றார்.

பாடசாலை அதிபர் நிகழ்வில் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

எல்லைப்புறப் பாடசாலைகளை வலுப்படுத்தும்போதுதான் வெளியிடங்களில் குடியேறியுள்ள மக்கள் மீள்குடியமர்வார்கள். கடந்த ஆண்டு வெளிமாவட்ட ஆசிரியர்கள் வருவதற்காக ஒரு பேருந்து சேவை ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. தற்போது அந்த சேவை நிறுத்தப்பட்டு விட்டது. பாடசாலைக்கு வரும் வெளிமாவட்ட ஆசியர்கள் நெடுங்கேணி சந்தியில் இறங்கி இங்கு வருவதற்கு மிகுந்த சிரமங்களை எதிர் கொள்கின்றனர். பாடசாலைக்கு ஒரு கேட்போர் கூடம் தேவையாகவுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட ஒருங் கிணைப்புக் குழு இணைத் தலைவரும், வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் சி. சிவமோகன் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.- என்றார்.

நிகழ்வில் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர், துணுக்காய் வல்யக்கல்வி உதவிப்பணிப்பாளர், அயற்பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், பழையமாணவாகள் கலந்து கொண்டனர். (ற-21,7)

## காரைக்காலில் இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,ஜன. 17

கோண்டாவில் காரைக் கால் சிறி விசாலாட்சி அம்பாள் ஆலய வருடாந்த திருவிழா இன்று காலை 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## நிமலின் திடீர் முடிவு

அரசியலில் இருந்து விரைவில் ஓய்வு பெறப் போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் சொந்த ஊரான பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் இந்தப் பதவிகளிலும் அரசியலிலும் தொங்கிக் கொண்டிருக்கும் உத்தேசம் தனக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் சதானந்தன்



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சதானந்தன் 16.01.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற ஞானசுந்தரம்-சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகனும் சாந்தகுமாரியின் அன்புக்கணவரும் நிசாந்தினி (கனடா), தமிழினி (அமெரிக்கா), கார்த்திகாயினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முகுந்தன் (கனடா), லக்ஷ்மன் (அமெரிக்கா),சதீஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அகரன், அகர்ணா, அபிவர்ணா, அபிஷயன், அஸ்வின், அக்ஷன் ஆகியோரின் பேரனும் சத்தியநாதன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சத்தியானந்தன் மற்றும் சற்குணநாதன், சதானந்தனேஸ்வரி, சத்தியானந்தனேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும் நவரட்ணம் (இலங்கை மின்சாரசபை), இராசதுரை, கஜா (ஜேர்மனி), சாந்தி (கொழும்பு), நந்தா (ஆசிரியர் அராலி வடக்கு), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் பாலசுந்தரம், சாந்தரூபி, சிவரூபி (மானிப்பாய் பிரதேச சபை), வசந்தரூபி (லண்டன்), சந்திரகுமார்(ஜேர்மனி), ஞானேஸ்வரி, மகிழ்மலர், சீவரட்ணம் (பத்திராபதி யாழ்ப்பாணம்), தவயோகராஜா (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்), கலாமோகன் (லண்டன்), சாதனா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரியதர்ஷன், ஹேமப்பிரியா, பிரதீபன் (கனடா), கஜலக்ஷன், கிஷோ, ரிஷிக்கா, பிரவிகா, அனுசன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் பாலரமணன் (ஆசிரியர், D.S.சேனநாயக்கா), தர்சிகா, ஜெகனிவாசன் (கனடா), கஜபானுஜன், பிரவின், சர்வின் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2017) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மானிப்பாய் வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கடினமான சூழலிலேயே நல்லிணக்க முயற்சிகள்

## அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

கடினமான அரசியல் சூழலில் நல்லிணக்க முயற்சிகளை நாம் மேற்கொள்கின்றோம் என்று தெரிவித்தார் பதில் அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வா.

நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளுடன் தமிழ் அரசியல் கட்சியை இணைத்து நல்லிணக்கப் பொறிமுறையில் ஈடுபட்டு வருகிறோம். பல்வேறு இனத்தவர்களுக்கும் பல்வேறு கட்சிகள் உண்டு. இனம், மொழி, மதம், கட்சிகள் அனைத்தையும் கடந்து நாம் இலங்கையர்கள் என உணரவேண்டும். சில வருடங்களுக்கு முன்னர் மோசமான நாள்களைக் கழித்து விட்டோம். கடந்த 6 வருடங்களில் நல்லிணக்கத்துக்கான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. தற்போதைய அரசு மேற்கொள்ளும் நல்லிணக்கப் பொறிமுறை பாராட்டுதலுக்குரியது. நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரான இரா.சம்பந்தனை நான் சந்தித்த போது நல்லிணக்கப்பொறிமுறையை அவர் பாராட்டினார். 1949 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், தற்போது தான் நாட்டில் நல்லிணக்க பொறிமுறைகள் இடம்பெறுகின்றன. நாடாளுமன்ற அமைச்சரவையில் அனைத்துத் தரப்பினரின் ஆதரவுடன் நல்லிணக்க முயற்சிகள் வெற்றி அளிக்க வேண்டும் என்பது எமது ஆவல். ஒவ்வொரு தரப்பிற்கிடையிலும் பல்வேறு கருத்துகள் இருக்கலாம். அனைவரையும் ஒரு கருத்தின் கீழ் கொண்டு வந்து சேர்ப்பது மிகக் கடுமையான பணியாகும். - என்றார். (ற-எ)

# முகமாலையில் ராணுவத்தால் மீள்குடியமர முடியாத நிலமை

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜன.17

கிளிநொச்சி முகமாலை பகுதியில் மீண்டுமொரு நில ஆளுகையை மேற்கொள்ள இராணுவம்முயல்கின்றது என்று முகமாலையில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் மீள்குடியமர முடியாதநிலையில்உள்ள மக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

போர்ச் சூழல் காரணமாக சுமார்20வருடங்களுக்கு முன்னர் முகமாலையைச் சேர்ந்த மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அந்தப் பகுதி மீள்குடியமர்வுக்காகக்கிளிநொச்சிமாவட்ட செயலாளர் மூலம் மக்களிடம் கையளிக்கப்பட்டது. ஏ-9 வீதி கரையோரமாக உள்ள காணியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரே அந்தப் பகுதியில் அகற்றப்படும் வெடிபொருள்களை வெடிக்கச் செய்யும் பிரிவுக்குரியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் 8குடும்பங்களினுடையவை. இராணுவத்தினர் அவர்களுடைய வேலியை சற்று உள்ளே நகர்த்தினாலேயே தற்காலிக வீடுகளை அமைத்து காணிகளில் குடியமர முடியும்எனக்கூறியிருந்தனர். இராணுவத்தை உடனடியாக வெளியேற வேண்டும் என்று கூறவில்லை. முகாமில் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரி தனக்கு அதற்கான அதிகாரம் இல்லை. மேல் அதிகாரிக்கு அறிவிக்கின்றேன் என்று தெரிவித்தார். சுமார் 5 அதிகாரிகள் வந்து மக்களைச் சந்தித்து வேலிகளை உள்ளே நகர்த்துவோம் என்று கூறிச்சென்றனர். ஆயினும் மீண்டும் வேலிகள் மக்கள் இருக்கும் பகுதிக்கு அண்மையாகக்கொண்டு வந்து போடப்பட்டுள்ளன. தற்போது மக்களுக்கான தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் அதை அமைக்கமுடியாத ஒரு குறுகிய நிலமே மக்களிடம்உள்ளது.இதுதொடர்பாக கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலாளர்கள் நேரடியாகச் சென்று தெரிவித்த போதும் இது வரை பயனேதுமின்றிக் காணப்படுகின்றது. இது தொடர்பாக பிரதேசசெயலாளர் ஊடாக மாவட்ட செயலாளருக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. சுமார் 20 வருடங்களின் பின்னரும்கூட எமது சொந்த நிலத்தில் வாழமுடியாத நிலைகாணப்படுகின்றது. மாவட்ட செயலாளர் மற்றும் ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இராணுவத்தினர் அந்தப் பகுதியில் சிற்றுண்டிச் சாலை ஒன்று அமைத்து வியாபாரம் செய்வதாலேயே அவர்கள்வேலியை அகற்ற மறுக்கின்றனர். எங்கள் நிலத்தில் நாங்கள் பயிர் செய்ய வேண்டிய நிலையில் இராணுவத்தினர் பயிர் செய்துள்ளனர்- என்றனர்.(ற-21,6)

# அதிகாரத்தை வட மாகாணம் சரியாகக் கையாள்வதில்லை

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

வவுனியா, ஜன.17
அதிகமாக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கின்ற வடக்கு மாகாண சபை கிடைக்கின்ற அதிகாரங்களை சரியாகப் பயன்படுத்துவதில்லை. அது அவர்களிடம் இருக்கும் குறைபாடு. இவ்வாறு மத்திய போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.



வவுனியா - யாழ் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பேருந்து நிலையத் திறப்பு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒரு காலத்தில் விடுதலைப்புலிகள்-இராணுவத்தினர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். இன்று அது முடிவுற்று தனியார் அரச பேருந்து சாரதிகள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நாட்டில் இடம்பெற்ற போர் முடிவுற்று விட்டது. தனியார் அரச பேருந்துச் சாரதிகளின் சண்டையும் முடிவுறும் காலம் நெருங்கிவிட்டது. கடந்த காலங்களிலே பலர் வீதிகளில் சண்டையிட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். தேசிய ரீதியில் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்தியது போல போக்குவரத்திலும் நாங்கள் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

இன்று (நேற்று) வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தில் தனியார் மற்றும் அரச பேருந்துகளுக்கு தனியான ஒழுக்க விதிமுறைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் தாங்கள் நினைத்தது போல செயற்படமுடியாது. ஒன்றிணைந்த போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டும். இதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியம்.

வடக்கு மாகாணசபையின் ஒத்துழைப்பு அவசியம். தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் ஒத்துழைப்பு அவசியம். நான் வட மாகாண சபையில் ஒரு குறையைப் பார்க்கின்றேன். நீங்கள் அதிகமாக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கின்றீர்கள். அது நியாயமானது தான். உங்களுக்குக் கிடைக்கின்ற அதிகாரங்களைக் கூட நீங்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை.

தற்போது ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலே பல ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படுகின்றன. விடுவிக்கப்படுகின்ற காணிகளில் என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்றீர்கள்?. நாங்கள் பாலைத் தருகின்றோம். அதை வாயில் வைத்துக்கொண்டு குடிக்கின்றார்கள் இல்லை.

மைத்திரிபால சிறிசேனவின் அரசு சிறுபான்மையின மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று செயற்படுகின்ற அரசு. இரண்டரை மில்லியன் ரூபா நிதியில் வீடு அமைப்பதற்கு நிதி ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

உங்களுடைய பகுதிகளிலுள்ள பிரச்சினைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளுங்கள். பல மில்லியன் ரூபா செலவில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சட்ட திட்டங்களை சரியான முறையில் நடைமுறைப் படுத்திக்கொள்ளுங்கள். வீதிப் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்தினால் 2 இலட்சம் ரூபா தண்டப்பணம் அறிவிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். இது நாளை அல்லது நாளை மறுதினம் நடைமுறைக்கு வரும். சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும். தனியார் பேருந்தில் ஏறுமாறு பயணிகளுக்கு அறிவுறுத்த முடியாது. அரச பேருந்தில் ஏறுமாறும் பயணிகளை வற்புறுத்தக்கூடாது. மக்கள் விருப்பத்துக்கு ஏற்ப செயற்பட அனுமதிக்க வேண்டும். இணைந்த நேர அட்டவணையில் செயற்படவேண்டும்.

மதுபானம், வெற்றிலை அற்ற பிரதேசமாக இந்தப் பிரதேசத்தை அறிவித்திருக்கின்றோம். இங்கு வெற்றிலை விற்பனையும் அல்லது வெளியிலே வெற்றிலை வாங்கி இங்கு துப்புகின்ற நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம். பொது மக்கள் உண்ணக்கூடிய தரத்தில் உணவுகள் இருக்கவேண்டும். பழுதடைந்த உணவுகளை விற்பனை செய்ய வேண்டாம். பல பேருந்து நிலையங்கள் விலங்குகள், மிருகங்களின் வசிப்பிடமாகக் காட்சியளிக்கின்றன. அதையும் நாங்கள் மாற்ற வேண்டும். -என்றார். (ற-21)




உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு நேற்று வந்த அமைதி மேம்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான முதல் நிலை செயலாளர் பௌல்றினும், அரசியல் அலுவலகர் யோவிதாவும் தற்போதைய அரசியல் நிலமைகள் தொடர்பாக உதயன் பத்திரிகை ஆசிரியருடன் கலந்துரையாடினர். (ற-21)

## ஆரம்ப பாடசாலை திறப்பு விழா

மன்னார், ஜன.17
மீள் குடியமர்வுக் கிராமமான மடு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட 2 ஆம் கட்டை பூமலர்ந்தான் கிராமத்தில் அமைக்கப்பட்ட 'பூமலர்ந்தான் ஆரம்ப பாடசாலை' நேற்று திங்கட்கிழமை வைபவரீதியாகத் திறக்கப்பட்டது.

பூமலர்ந்தான் ஆரம்ப பாடசாலையின் அதிபர் எம்.விக்ரர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும், சிறப்பு விருந்தினர்களாக மடு பிரதேசச் செயலாளர் எப்.சி.சத்தியசோதி, மடு வலயக்கல்விப்பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் கியோர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை வளாகத்தில் பயன் தரும் மரங்கள் நடப்பட்டன. ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ற-56)

**பணியாளர் தேவை**
சுத்திகரிப்பாளர்
(ROOM CLEANER)
மூர்த்தி கெஸ்ற் கவுஸ்
62/20,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 224 7428

**மருத்துவ உதவியாளர் தேவை**
மந்திகை, புலோலியில் மருத்துவ நிலையம் ஒன்றிற்கு பெண் மருத்துவ உதவியாளர் தேவை. அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 728 4100

**தவறிவிட்டது**
செல்வராசா கிருசன் ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை இரண்டும் யாழ். போதனா வைத்தியசாலை வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. இதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
077 159 2458

**வீடு வாடகைக்கு**
திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.
021 321 9915

**பெயர்மாற்றம்**
கொக்குவிலைச் சேர்ந்த தருமலிங்கம் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **தருமரட்ணம்** எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
தருமரட்ணம்.

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு பில் கிளாக் தேவை.
தங்குமிடம், உணவு இலவசம்.
077 325 8492

# Dr. SAM EDUCATION CENTRE VACANCIES

Dr. Sam Education Centre is a charitable organisation is seeking to appoint a competent and versatile administrator who will be responsible for the long term and day to day running of the centre.

The adiministrator should be able to manage all aspects of the centre including financial management. The administrator Should be able to communicate to the board of directors in English. Preference will be given to those who are competent in all three languages in Sri lanka. the centre also wishes to appoint qualified and experienced tutors to teach English, IT, Science, Maths to teach Children from grade 1 to 11 and a security guard. The tutors shall report to the Administrator and submit their full teaching plan as well as lesson plans to the centre Adiministrator and he/she will pass them to the directors and other interested parties. Lesson plans should have learning objectives, methods of delivery and assessments.

The selection procedure will involve interviews by a panel, a written assessment and finally a teaching demonstration. The candidates selected should submit a lesson plan for the demonstration lesson. Candidates should also submit the following.

A covering letter addressed to the interview panel to explain how they view the position of delivering lessons in a tutory, A detailed CV, A personal declaration that they have had no criminal convections Three references, one from their current manager, one from a friend but strictly not related to the candidate, one from their present or previous Students.

**Please send all the relevant information to Mrs. Indrany Jegarajah by Email (jindrany48@hotmail.com) on or before 31st Jauary 2017**

# அன்னை திரேசா நினைவுகூரல் கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜன.17

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகமும் யாழ். மறை மாவட்ட கத்தோலிக்கத் திருச்சபையும் இலங்கைத் திருச்சபை உதவித் தலைமைப்பீடமும் இணைந்து 'அன்னை திரேசா இன்று கல்கத்தாவின் புனித திரேசா' என்னும் பொருளில் கலந்துரையாடல் நிகழ்வை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஏ9 முதன்மைச் சாலையிலுள்ள பாதுகாவலன் மண்டபத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நிகழ்வு இடம்பெறும். அமெரிக்கா மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழக இரசாயன எந்தரவியல் துணைப் பேராசிரியர் கலா நிதி துஷ்யந்தி ஹூல் தலைமை தாங்குவார்.

முதன்மைப் பேச்சாளராக அன்னை தெரேசாவின் உத்தியோகபூர்வ நூலின் ஆசிரியரும் இந்தியாவின் முன்னாள் முதன்மைத் தேர்தல் ஆணையாளருமான நவீன் சௌலா கலந்துகொள்வார்.

முதன்மை அதிதிகளாக யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, எதிர்க் கட்சித்தலைவர் இரா.சம்பந்தன், இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராஜன் யாழ்.பல்கலைக்கழக வேந்தர் சி.பத்மநாதன், இலங் கைத் திருச்சபை யாழ்.குரு முதல்வர் சாமுவேல் பொன்னையா அடிகள் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-135)

## இராணுவம் அறிவிப்பு

# கோப்பாபிலவுக் கிராமத்தின் ஒரு பகுதியே விடுவிக்கப்படும்

## முகாமிட்டுள்ள காணிகளுக்கு மாற்றுக் காணிகள்

முல்லைத்தீவு, ஜன. 17

முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராமத்தின் ஒரு பகுதியை எதிர்வரும் 25ஆம் திகதி காணி உரிமையாளர்களிடம் கையளிப்பதாக கேப்பாபிலவு கிராம அபிவிருத்தி சங்கத்தினரை அழைத்து இராணுவத்தினர் அறிவித்தனர். படை முகாம் அமைந்துள்ள காணிகளுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கேப்பாபிலவு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், செயலாளர் உட்பட்ட கேப்பாபிலவு கிராமத்தைச் சேர்ந்த 10 பேரை நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இராணுவத்தினர் முகாமுக்குள் அழைத்து காணி விடுவிப்பு தொடர்பாக கலந்துரையாடல் நடத்தினர்.

கோப்பாபிலவு கிரமத்தின் ஒரு பகுதி விடுவிக்கப்படும், நந்திக்கடல் பகுதியை படைத் தேவைக்காக விடுவிக்கப்படமாட்டாது. படைத் தேவைகளுக்கு சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு மாற்றுக் காணிகள் வழங்கப்படும். படைமுகாமை விட்டு வெளியேறும் சந்தர்ப்பத்தில் அந்தக் காணியும் உரியவர்களுக்கு வழங்கப்படும் என்று கலந்துரையாடலின்போது இராணுவத்தினர் கூறினர் என்று அதில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

தற்போது வருகை தந்தவர்களில் அந்த பகுதிக்கு உரியவர்கள் இல்லை. அவர்களுடைய காணி தொடர்பாக அந்தக் காணிகளுக்கு உரியவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும் என்று இராணுவத்தினரிடம் கேப்பாபிலவு கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்தனர்.

காணி விடுவிப்பது, சுவீகரிப்பது தொடர்பில் இன்று செவ்வாய்க்கிழமையும் இராணுவத்தினர் பொதுமக்களை அழைத்துக் கலந்துரையாடல் நடத்தவுள்ளனர் என்று கேப்பாபிலவு அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்தனர். (வ-4,7)

## சில பகுதிகளுக்கு இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஜன.17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை யும் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ். பிரதேசத்தில் பாரதி வீதி, பத்தமேனி, தம்பாலை, இடைக் காடு, வளலாய் ஆகிய இடங்களி லும் –

கிளிநொச்சி பிரதேசத்தில் புதுக்குடியிருப்பு, கோம்பாவில், இரணைப்பாலை, மூங்கிலாறு, உடையார்கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், தேராவில், 68ஆவது பிரிவு இராணுவ முகாம், 683ஆவது இராணுவ முகாம், ஆடைத் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவு னியா பிரதேசத்தில் தெற்கிலுப் பைக்குளம் கிராமத்திலும்–

மன்னார் பிரதேசத்தில் தலைமன்னார் கிராமம், படப்பாடி, பேசாலை ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் தெரிவித்தார். (வ-10)

## கலைஞர்களிடம் விண்ணப்பங்கோரல்

கொழும்புத்துறை, ஜன.17

தமிழக முன்னாள் முதலமைச்சர் அமரர் எம்.ஜி.ஆரின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பும், யாழ்.மாவட்ட தேசோதய சபையும் இணைந்து கலைஞர் கௌரவிப்பு நிகழ்வை நடத்துவதாக அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.சர்வோதய மண்டபத்தில் நிகழ்வு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கௌரவிப்புச் சான்றிதழ்களைப் பெற விரும்பும் கலைஞர்கள் துறைசார்ந்த சுய விவரங்களுடன் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர், யாழ்ப்பாணம் – கண்டி சாலை, நெடுங்குளம் சந்தியில் உள்ள தலைமைக்காரியாலயத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு விழாக்குழுவினர் கேட்டுள்ளனர். (வ-135)

## வைரவிழா இன்று

கரணவாய் ஜன 17

பொலிகண்டி இந்துத் தமிழ் கலவன் பாடசாலையின் வைரவிழா நிகழ்வு இன்று செவ்வாய்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாலாவி அரங்கில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் வீ.இந்திரலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமாரும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம், கிழக்குப் பல்கலைக்கழக மொழியியற்றுறைப் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் ஆகியோரும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (108)



## வள்ளுவரின் உருவச்சிலை புதுக்குடியிருப்பில் திறப்பு

முல்லைத்தீவு, ஜன. 17

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் புதுக்குடியிருப்பு பகுதியில் நிறுவப்பட்ட திருவள்ளளுவரின் சிலை நேற்று மாலை 4 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு கலாசாரப் பேரவை தலைவர் சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மருத்துவர் சி. சிவமோகன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் கமலேஸ்வரன், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். சிலை வடிவமைத்த கோபிக்கு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. (வ-7)

## 2 சைக்கிள்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

பருத்தித்துறை நீதிவான் மன்றில் பருத்தித்துறைப் பொலிஸாரினால் அநாதரவான நிலையில் இலக்கம் தெளிவற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு லுமாலா துவிச்சக்கரவண்டிகள் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்குரிய உரிமையாளர்கள் யாராவது இருப்பின் மன்றின் அலுவலகத்தில் உரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின் 6 மாதங்களுக்குப்பின் அரசுடமை ஆக்கப்படும்என்று பருத்தித்துறை நீதிவான் மன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (வ-ரி)

## ராணுவச் சிப்பாய்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியில் இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கப் பெறவில்லை. குற்றஞ்சாட்டப்பட்ட 14 இராணுவத்தினரதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புத்தூர் பகுதியில் இருவர் காணாமல் ஆக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அக்காலப்பகுதியில் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய 14 இராணுவத்தினர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்றினால் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நேற்றைய தினம் குறித்த வழக்கு அழைக்கப்பட்ட வேளை இராணுவத்தினர் பொலிஸாரின் சிறப்புப் பாதுகாப்புடன் அனுராதபுரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். (வ-4)

## சுவாமி விவேகானந்தரின் 155ஆவது ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம்.ஜன.17

சுவாமி விவேகானந்தரின் 155ஆவது ஜெயந்தி விழா நாளைமறுதினம் வியாழக்கிழமை பி.ப. 4மணிக்கு இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சுக்களின் செயலாளர் திருமதி விஜலக்ஷ்மி கேதீஸ்வரன் கலந்து கொள்வார். நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகளும் வில்லிசை நிகழ்வும் ஓய்வுநிலை அதிபர் கவிமணி ஆனந்தராஜாவின் அன்னையை அறிவோம் என்ற தலைப்பிலான இசைச்சொற்பொழிவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-ரி)

## தென்னைச் செய்கையாளர்களுக்கு மானியக் கொடுப்பனவு வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 17

தென்னைச் செய்கையாளர்களுக்கான மானியக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வானது 2016ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் வேலைத்திட்டங்களை மேற்கொண்டவர்களை ஊக்குவிக்கும் வகையில் மானியக் கொடுப்பனவாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக கடந்த வருடம் பயனடைந்த பயனாளிகளுக்கு தென்னைச் செய்கைச் சபையால் தென்னைச் செய்கையை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தென்னை மண் ஈரப்பதன் பேணல், தென்னை மரங்களுக்கான டொலமைற் பிரயோகம், ஊடு பயிர்ச் செய்கை மற்றும் தென்னை மட்டைக் குழி அமைத்தல் போன்ற திட்டங்களைச் செயற்படுத்தியவர்களுக்காக மானியக் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)



வவுனியா ஓமந்தை கள்ளிக்குளம் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 18 குடும்பங்களுக்கு மலசலகூடவசதிகள் அமைக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. வவுனியா வன்னிப் பட்டறை அமைப்பிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய குறித்த குடும்பங்களுக்கு முதற் கட்டமாக மலசலகூடம் அமைக்கும் பணி நேற்று முற்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (வ-4)

### அரச உத்தியோகத்தரால்

## துவாரகேஸ்வரன் என்ற முகநூல் கணக்குக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 17

தியாகராஜா துவாரகேஸ்வரன் என்ற முகநூல் கணக்குக்கு எதிராக, ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு நேற்றுச் செய்யப்பட்டுள்ளது. காரைநகர் பிரதேச செயலக அரச உத்தியோகத்தர் ஒருவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

முகநூல் ஊடாக அவதூறு ஏற்படுத்தியமை தொடர்பிலேயே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தரான தன்னை அரசியல் கட்சி ஒன்றுடன் தொடர்புபடுத்தி முகநூலில் பதிவிட்டுள்ளார் என்று, முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும், உயிர் பாதுகாப்பு வழங்குமாறும், தியாகராஜா துவாரகேஸ்வரன் என்ற முகநூலுக்குரிய நபரை விசாரணை செய்யுமாறும், அரச உத்தியோகத்தர் தனது முறைப்பாட்டில் கோரியுள்ளார்.

(வ-5)

### இடர் முகாமைத்துவ அமைச்சு மீது குற்றச்சாட்டு

# வன்னியின் வறட்சிப் பாதிப்பு விவரங்களைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 17

வடக்கின் 5 மாவட்டங்களுமே வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இடர்முகாமைத்துவ அமைச்சின் தகவல் வெளியீட்டில், யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களின் பாதிப்பு விவரங்கள் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்டது.

இடர் முகாமைத்துவ அமைச்சின் இணையத் தளத்தில் ஆறு மணி நேரத்துக்கு ஒரு தடவை, நாடு முழுவதும் உள்ள நிலைமை அறிக்கை வெளியிடப்படும்.

நேற்று இரவு 6 மணிக்கு வெளியிடப்பட்ட அறிக்கையில், வடக்கு மாகாணத்தில் வறட்சியால் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்கள் மாத்திரமே பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 27 ஆயிரத்து 162 குடும்பங்களைச் சேர்ந்த 93 ஆயிரத்து 917 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 348 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின், மாவட்டச் செயலகத் தகவல்களின் அடிப் படையில் மூன்று மாவட்டங்களிலும் வறட்சியினால் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் இந்த மூன்று மாவட்டங்களினதும் தரவுகள், இடர்முகாமைத்துவ அமைச்சின் தகவல் வெளியீட்டில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

(வ-5)

## சாலையை மறித்து நின்ற யானை குடும்பத் தலைவர் மீது தாக்குதல்

வவுனியா, ஜன. 17

வவுனியா நித்தியநகர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் மாலை யானை தாக்கியதில் குடும்பத் தலைவர் படுகாயம் அடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நித்தியநகர் கிராமத்தைச் சேர்ந்த எஸ்.விஜயகுமார் (வயது - 46) என்பவரே யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்து வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வவுனியா நித்தியநகர் கிராமத்திலிருந்து நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் அயல் கிராமமான கந்தசாமி நகர் நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது சாலையின் குறுக்காக வழி மறித்து நின்ற யானையின் தாக்குதலுக்கு உள்ளானார். அவலக்குரல் கேட்ட கிராமத்தவர்கள் யானையை வெடி போட்டு விரட்டினர். பின்னர் குடும்பத் தலைவரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

நித்தியநகர் கிராமத்தில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட காலம் தொடக்கம் யானைத் தாக்குதல் தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. யானைத் தாக்குதலின் காரணமாக கடந்த காலங்களில் விவசாய நிலங்களும் களஞ்சியப்படுத்தப்பட்ட தானியங்களும் அழிவுக்குள்ளாகி வந்தன. யானைகளின் அட்டகாசம் தொடர்பாக கிராம மக்கள் வனத்துறை அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமும் முறையிட்டிருந்தனர். 2015ஆம் ஆண்டு குறித்த கிராமத்துக்கு மின்சாரவேலி அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிவித்திருந்த போதும் அவ்வாறு மின்சார வேலி அமைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-4)

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், ஜன.17

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இணைத்தலைவர்களில் வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரதிநிதியாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஜங்கரநேசன் கலந்து கொள்வார். ஏனை மூன்று இணைத்தலைவர்களின் தலைமையில் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக இந்தக் கூட்டம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-6)

## காணாமற்போயிருந்த அரச உத்தியோகத்தர் 2 வாரங்களுக்குப் பின் நேற்று அதிகாலை மீட்பு

*கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பஸ் தரிப்பிடத்தில் அவர் விடப்பட்டிருந்தார்*

யாழ்ப்பாணம், ஜன. 17

காணாமற்போயிருந்த அரச உத்தியோகத்தர் இரண்டு வாரங்களின் பின்னர் கை, கால்கள் கட்டப்பட்டு, வாயில் பிளாஸ்ர் ஒட்டப்பட்டு மயக்கமடைந்த நிலையில் நேற்று அதிகாலை மீட்கப்பட்டார் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஏ-9 சாலையில் ஓமந்தை மாணிக்க வளவுப் பகுதியில் உள்ள பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து அவர் மீட்கப்பட்டார்.

சாலையால் சென்ற பொதுமகன் ஓமந்தை பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவரை மீட்டனர். ஏ- 9, வீதி குறிசுட்டகுளம் கனகராயன்குளம் பகுதியில் வசிக்கும் தனபாலசிங்கம் நிசாந்தன் (வயது -33) என்பவர் கடந்த 2 ஆம் திகதி பணிக்காகச் சென்றிருந்தபோது காணாமற்போயிருந்தார். அவர் மன்னார் மாவட்ட செயலகத்தில் பணியாற்றுகிறார். இரண்டு பிள்ளைகளின் தந்தை.

'கடந்த மாதம் 30ஆம் திகதி அவரது மனைவி அலைபேசியில் உரையாடியுள்ளார். மகன் மன்னார் மாவட்டச் செயலகத்துக்குச் சென்றிருந்தார். அன்று மன்னாரில் தங்கி மறுநாள் வேலையை முடித்து வவுனியாவுக்குத் திரும்பிய நிலையில் காணமற்போயுள்ளார் என்ற விடயம் தெரியவந்தது. கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. கடந்த 2 ஆம் திகதி காலை மன்னாருக்கு வேலைக்காகப் பேருந்தில் பயணித்துள்ள போதும் அவர் மன்னாருக்குச் செல்லவில்லை என்பது தெரியவந்தது.' என்று மீட்கப்பட்டவரின் தந்தை தெரிவித்தார்.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,101)

## கிராம அலுவலர் விருது வழங்கல் விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.17

மாவட்ட மட்டத்தில் சிறந்த கிராம அலுவலருக்கான ஹேமலதா ஞாபகார்த்த விருது வழங்கல் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறும் எனத் தீர்மானிக்கப்பட்ட விருது வழங்கலே எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-ரி)

## முதியோர் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜன.17

தென்மராட்சி பிரதேச முதியோர்களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் (தலா ஆயிரத்து 900 ரூபா) அந்தந்த அஞ்சல் அலுவல கங்களுக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அஞ்சல் அதிபர்கள் அறிவித்தனர். (வ-9)



*நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு மருதங்கேணி பிரதேச செயலக ஊழியர்களும் இராணுவத்தினரும் இணைந்து சிரமதானப் பணியில் நேற்று திங்கட்கிழமை ஈடுபட்டனர். கொழும்பு அரசினால் நேற்றுத் திங்கட்கிழமை முதல் இந்த வாரம் முழுவதையும் நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனடிப்படையில் மருதங்கேணி பிரதேச செயலக ஊழியர்கள் 50 பேரும் செம்பியன்பற்று இராணுவத்தினர் 50 பேருமாக இணைந்து மருதங்கேணி சந்தியிலிருந்து தாளையடிப் பாடசாலை வரைக்குமான 400 மீற்றர் தூரமுள்ள சாலை மற்றும் தாளையடி வைத்தியசாலை என்பன சிரமதானம் செய்யப்பட்டன. (வ-422)*

## சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர் ஒட்டுசுட்டானில் கைது

முல்லைத்தீவு, ஜன. 17

ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேராற்றுப் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒட்டசுட்டான் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேராற்றுப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் அனுமதிப்பதிரத்துக்கு முரணாக ஆற்று மணலை உழவு இயந்திர பிளேட் போட்டு வாரி எடுத்து ஏற்றப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரால் இந்தச் சட்டவிரோத செயற்பாடு தடுக்கப்பட்டது.

இந்த சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டவர் கைது செய்யப்பட்டதுடன் உழவுயந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-7)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன.13
ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகின.
பாடசாலை ரீதியாகக் கிடைத்த பெறுபேறுகளின் விவரம் வருமாறு:

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**
**கணிதப் பிரிவு**
ப.டிலக்க்ஷிகா 2ஏபி, சௌ.கஜாலன் ஏ2பி, தி.வேணுராஜ் ஏ2பி, ச.கௌசி ஏபிசி, தி.அனோஜன் ஏ2சி.

**உயிரியல் பிரிவு**
இ.கார்த்திகாயினி பி2சி, பா.மிதுஷா பி2சி, ச.சாமினி ஏசிஎஸ்.

**வர்த்தகப் பிரிவு**
சு.சுதர்ஷினி 3ஏ, வ.வனிதா 3ஏ, சி.சேந்தன் 3ஏ, க.சயந்தன் ஏ2பி, சி.மஜிந்தா ஏபிசி, செ.சிவரஞ்சினி ஏபிசி, சி.சிவானந்தி ஏபிசி.

**கலைப் பிரிவு**
வி.தர்ஷினி 3ஏ, து.சுதர்ஷன் ஏ2பி, பா.சிந்துயா ஏபிசி.

**வைத்தீஸ்வராக் கல்லூரி**
**வர்த்தகப் பிரிவு**
க.சாரங்கன் ஏ2சி, பாத்திமா றுசைக்கா நிஜாமுதீன் 3பி, இ.விதுசன் 2பிசி, பா.கிஷாந் 2பிசி, ஸ்ரீ.கஜீவன் 2ஏசி.

**உயிரியல் பிரிவு**
பி.பிரவின் சி2எஸ், ச.தனுஜா 2சிஎஸ்.

**கலைப்பிரிவு**
நூறுல் சிவா ஜபீர் 3ஏ, ர.பவித்திரா ஏசிஎஸ், சா.சரணியா ஏசிஎஸ், தி.திலக்சன் 2பிசி, வி.மேரிஸ்ரெலா பி2சி, ப.சிவசாந்தன் பி2சி, க.விஜிகரன் பிசிஎஸ், கு. மதுமதி பிசிஎஸ், த.றொசாந்தன் ஏசிஎஸ்.

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**
**கணிதப் பிரிவு**
ஆர்.லக்ஷிகா ஏபிசி, ஏ.அனுஷினி ஏ2சி, எஸ்.நிலோஜினி பி2சி, எம்.சுபிர்ணா பி2சி, எம்.மோகனரூபி பி2சி, ஏ.விதுர்ஷா பிசி.

**விஞ்ஞானப் பிரிவு**
வி.நிவேதா 2ஏபி, எஸ்.சுபவாசினி ஏபிசி, எஸ்.கோபிகா ஏபிசி, ஜே.தனுஜா 2பிசி, எஸ்.ஊர்மிலா 2பிஎஸ், ஏ.ரி.ரொன்ஜா பி2சி, ஆர்.தக்ஷலா பிசிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**
எஸ்.மிதுஜா ஏ2பி, எஸ்.சர்மிஷா ஏ2பி, கே.நிலக்ஷனா 2பிசி, கே.சுபஹரி பி2சி, ஜீ.சொரூபினி பி2சி, எம்.சுகிர்தா பி2சி.

**கலைப் பிரிவு**
ஜே.அபிநயா 2ஏபி, பி.சஜீபா 2ஏபி, எஸ்.கென்ஷிகா 2ஏபி, எஸ்.துமிலுஷா ஏ2பி, பி.பிரியங்கா ஏ2பி, எஸ்.பாமதி ஏபிசி, என்.காயத்திரி ஏ2சி, கே.தர்சனா 3சி.

**சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி**
**வர்த்தகப்பிரிவு**
கே.சர்மிளா 3ஏ, ஆர்.கிருத்திகா 3ஏ, ம.நிவேனிகா 3பி, பி.டான்சிகா 3சி, எஸ்.கவிந்திகா 3சி.

**கலைப்பிரிவு**
என்.கபில்ராஜ் ஏபிஎஸ், ரி.விஜிதா 2பிசி, என்.சங்கீர்த்தனா பி2சி, ரி.சயந்தினி 2பிஎஸ், கே.சங்கீதன் பிசிஎஸ், எஸ்.டனு சன் பிசிஎஸ், கே.நிறோசினி பிசிஎஸ், ரி.சாரங்கன் பிசிஎஸ், பி.சதுசன் பிசிஎஸ், ஜி.சுபாசினி பிசிஎஸ், ரி.கேதினி பிசிஎஸ், பி.கபில்தேவ் பி2எஸ்.

**சென் பற்றிக்ஸ் கல்லூரி**
**கணிதப்பிரிவு**
எம்.மதுசன் 3ஏ, வி.பெனற்சுஜீவன் 2ஏபி, ஜி.நிலக்சன் 2ஏபி, ஜே.ஜெனோசன்ஏ2பி, என்.பிறின்ஸ்ரன் ஏ2பி, கே.ஹரோத்துர் ஏபிசி, எம்.லக்ஸ்மன் ஏபிசி, சி.ஏ.அன்ரன் கொலின்ஸ் ஏபிஎஸ், வி.விவேக் ஏபிசி, எவ்.ஆர்.ஜே.மைக்கல் வினுசன் ஏ2சி.

**உயிரியல்பிரிவு**
எஸ்.தேவதர்சன் 2ஏபி, ஜே.கனிஸ்ரன் ஏபிசி, ஆர்.ஆர்.ஹிருசாந்தன் ஏபிஎஸ், பி.அம்புஜா 2பிசி, இ.டொனால்ட்சன் 2பிசி.

**வணிகப்பிரிவு**
ஜி.ஜீன் லக்ஸ்மன் 3ஏ, டபிள்யு. பி.றிணுகாந் 3ஏ, ஏ.எம்.ஜனுமக்ஸிமாஸ் 3ஏ, யு.சுபோதரன் ஏபிசி, எல்.கஜீத் ஏ2சி, யி.டி.ஜோர்ஜ் ஜெனிஸ்ரன் ஏபிஎஸ், வை.பகீரதன் 2பிஎஸ்.

**கலைப்பிரிவு**
பி.அன்ரனி நிராஜ் ஏ2பி, எல்.றொக் பஸ்ரியன் ஏபிசி, பி.யுகந்தன் ஏபிசி, ஆர்.எம்.தபூசன் ஏபிசி, ஜே.ஜோன் எமில்ரன் ஏ2சி, ஜே.சாம்சன் ஏ2சி, ஆர்.டி.அன்ரனி அஸிஸி ஏ2சி, ஜே.ஆர்.றெனோல்ட் ஏசிஎஸ், சி.ஜி.றொகான் ஏசிஎஸ், கியூ.ஏ.எஸ்.சஞ்சீவ் குமார் ஏசிஎஸ், ஜே.ஜெஸ்ரின் ஏசிஎஸ், ஜே.பிரணவன் 3பி. (ஐ)

**3ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



**திருமதி சரஸ்வதி (பேபி அன்ரி) சிதம்பரநாதன்**
(முன்னாள் பொதுமுகாமைத்துவ உதவியாளர் – தேர்தல்கள் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்)
பிறப்பு:- 24.03.1960 இறப்பு:-22.01.2014
திதி:அமரபக்க சஷ்டி (17.01.2017)

அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
மூன்றாண்டுகள் ஆயிற்றோ
நீர் எம்மைவிட்டுப் பிரிந்து
சொந்தபந்தங்கள் வாழ்வாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே
என்றும் உங்களை நினைந்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.
077 556 6581
என்றும் அன்புடன் நினைவிருக்கும்
குடும்பத்தினர்.

**நெஞ்சை விட்டகலாத**
**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் **சின்னத்தம்பி பாலேந்திரநாதன்**
(ஓய்வுபெற்ற முகாமையாளர் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)
திதி: 17.01.2017
தோற்றம் 07.06.1946
மறைவு 29.01.2016

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோரினதும் மனங்களிலும் அகலாது நிற்கின்றதே ஐயா!
நீங்கள் இல்லாத எங்கள் இல்லங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றது எங்கள்
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்றுவிட்டது ஐயா
சொந்த பந்தங்களின் உணர்வுகள் உறைந்துவிட்டது
உற்றார், உறவினர்கள் உங்களைத் தேடுகிறார்கள்
மனைவியின் இதயம் இயங்கவில்லை ஐயா
உங்களது நெறிமுறை தவறாத வாழ்வின் பயனாக
நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனிடம் சங்கமிக்கும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

செட்டியார் வளவு,
சுன்னாகம்.
மனைவி.

# கொடுப்பனவுகளை வழங்கக் கோரி பரிசாரகர்கள் பணிப்புறக்கணிப்பு

அளவெட்டி, ஜன.15
யாழ். மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் பரிசாரகர்கள் மற்றும் சுகாதாரப் பணி உதவியாளர்கள் தங்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கும் வரை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.
அவர்கள் தெரிவித்ததாவது-
சுழற்சி முறையில் இரவு பகலாக கடமையாற்றும் பரிசாரகர்கள், சுகாதாரப் பணி உதவியாளர்களின் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு கடந்த ஆறுமாதங்களாக வழங்கப்படவில்லை. ஊழியர்கள் மன உளைச்சலுடனும், வேதனையுடனும் தொடர்ந்து மேலதிக வேலைநேரத்தில் கடமைக்கு ஒத்துழைக்கப் பின்னிற்கிறார்கள்.
ஆறுமாதகால மேலதிக நேரக் கொடுப்பனவை 17ஆம் திகதிக்குமுன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வழங்கப்படாதபட்சத்தில் 17 ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவு வழங்கும் வரை வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று வடக்கு மாகாண ஆளுநர், வடமாகாண சுகாதார அமைச்சு, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ஆகியோருக்கு கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தியுள்ளோம்.
பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இடம் பெறுவதற்கு முன் கொடுப்பனவுகளை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கவும்.-என்றனர். (ற-21,36)

# எம்.ஜி.ஆர். பிறந்த தின நிகழ்வும் மாணவர் கௌரவிப்பும்

வவுனியா, ஜன.17
புரட்சித் தலைவரும், முன்னாள் தமிழக முதலமைச்சருமான எம்.ஜி. இராமச்சந்திரனின் 100 ஆவது பிறந்த தின நிகழ்வும், உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் வவுனியாவில் நடைபெறவுள்ளன.
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் பி.ப2.30 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நினைவாக தமிழ் மணி அகளங்கன் சிறப்புரை வழங்கவுள்ளார். வவுனியா மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களுக்கான பண வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வும், 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் மாவட்டத்தில் சிறப்புச் சித்திகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், கடந்த பல வருடங்களாக சமூக சேவை ஆற்றி வரும் சமூக சேவையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டுக்குழு தெரிவித்தது.
(ற-402)

# இராமநாதபுரத்தில் 2016இல் 369 வழக்குகள்

யாழ்ப்பாணம், ஜன.17
கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் 2016ஆம் ஆண்டு குற்றச்செயல்கள் தொடர்பாக 369 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று இராமநாதபுரம் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சுபேசன் தெரிவித்தார்.
185 போக்குவரத்துத் தொடர்பான வழக்குகளும், சிறு குற்றங்கள் தொடர்பாக 111 வழக்குகளும், போதைப்பொருள் தொடர்பாக 73 வழக்குகளும், அவற்றில் கசிப்பு தொடர்பாக 55 வழக்குகளும், கஞ்சா தொடர்பாக ஒரு வழக்கும், கோடா தொடர்பாக மூன்று வழக்குகளும் மணல் கடத்தல் தொடர்பாக 11 வழக்குகளும், மரம் கடத்தல் தொடர்பாக 2 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ற-6)

# முன்னேற வழியற்ற 14,000 குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜன.17
யாழ்ப்பாண மாவட்டத்தில் 14 ஆயிரம் குடும்பங்கள் மிகவும் வறுமையாக – முன்னேற வழியற்ற நிலையில் வாழ்கின்றனர். யாழ்ப்பாணத்தில் சுத்தமான குடிதண்ணீர் முதல் வேலைவாய்ப்பு எனப் பல தரப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளன.

இவ்வாறு யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் உலக வங்கியின் மூலோபாய சமூக மதிப்பீட்டு கலந்துரையாடல் கருத்தரங்கு நேற்று மாவட் டச் செயலகத்தில், மாவட்ட செயலாளர் தலைமையில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போதே மாவட்டச் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த எண்ணிக்கையை விடவும் அதிகமாகவே வறுமைப்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். அவர்களின் நிலைமை மிக மோசமானது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீள் குடியமர்வு முழுமை பெறவில்லை. கடந்த காலத்தில் 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. இன்னமும் 3 ஆயிரத்து 72 பேர் முகாம்களில் உள்ளனர் . 7 ஆயிரம் குடும்பம் மீள்குடியமரத் தயாராகவுள்ளனர். அவர்கள் உள்ளிட்ட குடாநாட்டு மக்களுக்கு வீடு மற்றும் சுகாதார வசதிகளின் தேவை அதிகமாகவுள்ளது.

மிக முக்கியமாக சுத்தமான குடிதண்ணீர் தேவை என்பது பெரும் பிரச்சினையாகவே உள்ளது. அது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியும் உள்ளது. வடி காலமைப்பு வசதிகளையும் மேம்படுத்த வேண்டியுள்ளது.

கல்வி, போக்குவரத்து தேவைப்பாடுகளும் முழுமை செய்யப்படவேண்டிய நிலையிலேயே காணப்படுகின்றன. கல்விக்காக வேறு இடம் செல்லும் நிலையும் உண்டு.

மீனவர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படாதுள்ளன. முக்கியமாக இந்திய மீனவரால் ஏற்படும் பிரச்சினை. கமத் தொழிலைப் பொறுத்த வரையில் அவர்களுக்கான சந்தைப்படுத்தும், விலை நிர்ணயப் பிரச்சினை காணப்படுகின்றது. வறட்சியும் அவர்களைப் பாதிக்கின்றது.

சிறுவர்கள் மற்றும் குடும்ப வன்முறை தொடர்பில் சுமார் 6 ஆயிரம் பேர் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கான ஆற்றுப்படுத்தலுடன் கூடிய வாழ்வாதாரம் வேண்டும். வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் குறைந்தபட்சம் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தினாலே இளைஞர், யுவதிகளின் வேலை வாய்ப்பு பிரச்சினையை ஓரளவு நிறைவுபெறும். இந்த எண்ணிக்கையே தற்போது நிறைவு செய்யாத நிலையில், பின்னால் வரப்போகும் பட்டதாரிகளும் காத்திருக்கின்றனர். இவையே இன்று யாழ். குடா நாட்டில் உள்ள நிலவரம் -என்றார்.

நிகழ்வில் உலக வங்கியின் பிரதிநிதி அடாடொனல்ட் அம்மையார் உரையாற்றியபோது-

சமூக மட்டத்திலான பிரச்சினைகளை அவர்களிடம் இருந்தே இனங்கண்டு, அவற்றின் ஆய்வில் பெறும் தகவல் தொடர்பிலும் அரசுடனும் பேசலாம். இது ஓர் பயிற்சியாகவே இருக்கும். சமூக மட்ட பிரச்சினைகளை இனங்கண்டு உதவவேண்டும். பிரச்சினைகளால் எவருக்கும், சவால் உண்டு எனவும் ஆராயவேண்டும். ஆய்வின் அடிப்படையில் பெறும் தகவலைக் கொண்டும் அரசுடன் பேசலாம். இவற்றுக்கெல்லாம் முதலில் சரியான தகவலைப் பெறவேண்டும். பின்னரே தீர்வு எது என அடையாளமிட முடியும் – என்று அவர் குறிப்பிட்டார்.

(ற-21,101)



பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பொங்கல் விழா நேற்று தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் இரா. நடராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் க. தர்மலிங்கமும், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணியும் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகள், பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. (ற-21)

## நட்டஈட்டை வழங்க முடியாவிட்டால் விவசாய அமைச்சு தேவையில்லை

### மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜன.17
மாகாணவிவசாயஅமைச்சு
வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுக்க முடியாது போனால், எமக்கு விவசாய அமைச்சோ, அமைச்சரோ தேவையில்லை.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.பசுபதிப்பிள்ளை.

இரணைமடுக் குளம் விவசாயத்துக்கு திறந்து விடப்பட்டு 97 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு நேற்றுமுந்தினம் கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் பெரும் பொங்கல் விழா நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே வடக்கு மாகாண சபை உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மழை பொய்த்துப்போனதால் விவசாயிகளும் அதனோடு இணைந்த தொழிலாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உடனடியாக வறட்சி நிவாரணங்களை வழங்குவதற்கு இடர் நிவாரண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபையால் ஐந்து மாவட்டங்களிலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாகாண விவசாய அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. அவ்வாறு நட்ட ஈட்டைப்பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால்,எமக்குவிவசாய அமைச்சோ,அமைச்சரோ தேவையில்லை. கிளிநொச்சியில் 95 வீதமான விவசாயிகள் கையறு நிலையில்உள்ளனர். இது தேசியரீதியிலான பாதிப்பு என்பதால்–அரசு, சிங்களவர்களுக்கு நிவாரணங்களை வழங்கும். அப்போது எமக்கும் கிடைக்கும்–என்றார். (ற-21,6)

## “வாழ்வோம் வளம் பெறுவோம்” செயற்றிட்டத்தின் 8ஆம் கட்டம்



முல்லைத்தீவு, ஜன.17
வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனால் முன்னெடுக்கப்படும் 'வாழ்வோம்- வளம் பெறுவோம்" செயற்றிட்டத்தின் 8ஆம் கட்டம், கடந்த 13ஆம் திகதி அவரது முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்றது.

புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டத்தின் 50 உறவுகள் உள்ளீர்க்கப்பட்டனர்.

தற்காலிக வாழ்வுடைமை ஊக்குவிப்பை நோக்காகக்கொண்டு, நாளாந்த உணவுத் தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்காக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. புலம்பெயர்ந்து வாழும் ஈழ மக்களின் நிதிப் பங்களிப்பில் 2014ஆம் ஆண்டு 51 உறவுகள் உள்ளீர்க்கப்பட்டு, இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 8ஆம் கட்ட செயற்றிட்டத்துடன் 265 பயனாளிகள் உள்ளீர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

8ஆம் கட்டத்துக்கான பங்களிப்பானது புலம்பெயர் தமிழர்களான தர்சனா–அமேசா, விக்கினாகரன்–சுஜிதா, குபேரன்–சைலேந்திரி ஆகியோரால் வழங்கப்பட்டது. மொத்தமாக 750 கிலோ அரிசி வழங்கப்பட்டது – என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். (ற-21)

## உள்ளூராட்சி சபை மதிப்பீடுகளை அனுப்ப அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.17
2017ஆம் ஆண்டுக்கான மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளூராட்சி சபை நிதிகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை உடன் அனுப்பி வைக்க வேண்டும் என்று மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எச்.ரி.கமல் பத்மசிறி, உள்ளூராட்சி சபைகளின் செயலாளர், ஆணையாளர்களை கோரியுள்ளார். 2017 ஆம் ஆண்டு வரவு – செலவு திட்டத்தில் மூலதன செலவுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள், மாகாண அரசு நிதிகளால் ஒதுக்கப்பட்ட மூலதன செலவு விவரம், மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட மூலதன செலவு விவரம் உள்ளிட்ட மதிப்பீடுகள், செலவினங்களை உடன் அனுப்பி வைக்க வேண்டும். வரவு – செலவு 2017 திட்டமானது வருமான தலைப்பு அடிப்படையாக இருக்க வேண்டும்– என்று அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-50)

### கிளி. சிவநகர் அ.த.க. பாடசாலையில்

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கக் கோரி கவனவீர்ப்பு



கிளிநொச்சி, ஜன.17
கிளிநொச்சி–சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. கடமையில் உள்ள அதிபரையும் இடமாற்றம் செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்து, பாடசாலை மாணவர்களும், பெற்றோர்களும் நேற்று பாடசாலை வாயிலை மூடி கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

எங்களுக்கு கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்க ளுக்கு ஆசிரியர்கள் இல்லை. உடற் கல்வி ஆசிரியரும் மாற்றல் பெற்று சென்று ஒருவருடம் கடந்த போதும், இதுவரை நியமிக்கப்படவில்லை. இவற்றுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படும் வரை அதிபரை இடமாற்றம் செய்யக்கூடாது. எமது பாடசாலை தேசிய மட்டம் வரை சென்று சாதித்த பாடசாலை. ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் – என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

எங்களுடைய பாடசாலையை உலக மட்டத்துக்கு தெரியப்படுத்திய பெருமை இந்த அதிபரையும், மாற்றம் பெற்ற உடற் கல்வி ஆசிரியரையுமே சாரும். முக்கியமான பாடங்களுக்கு இங்கு ஆசிரியர்கள் இல்லை. எதற்காக இடமாற்றம் செய்கிறார்கள் எனத் தெரியவில்லை.

அதிபரின் இடமாற்றம் தொடர்பாக கதைக்க முடியாது. ஏழுவருடங்கள் கடமையாற்றியுள்ளார். மிகவிரைவில் ஆசிரியர்கள் நியமிக்க வேண்டும் – என்று போராட்டத்தில் கலந்துகொண்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

காலை பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தில் ஆரம்பமான மாணவர்களது போராட்டம் சிறிது நேரத்தின் பின்னர் வழமைக்கு திரும்பியது. மாணவர்கள் தங்களது எதிர்ப்பை தெரிவித்ததன் பின்னர் வகுப்புகளுக்குச் சென்றனர்.

அதிபரின் இடமாற்றம் வழமையானது. ஏழு வருடங்கள் கடமையாற்றிய பின்னர் மாற்றம் வழங்கப்படும். மேலதிகமாக ஒரு வருடம் வழங்கப்பட்டு, 8 வருடங்களாகக் கடமையாற்றுகின்றார்.

ஆசிரியர் பற்றாக்குறை என்பது மாவட்டத்தில் கூடுதலான பாடசாலைகளில் காணப்படுகின்றது. இந்தப் பாடசாலைக்கு விரைவில் கணிதபாட ஆசிரியரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது – என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேல் தெரிவித்தார். (ற-21,6-35)

# கிராமங்களிடையே பகையை வளர்க்க முயல்கின்றது அரசு

## வலி. வடக்கு மீள் குடியேற்றக் குழு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.17
இரு இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றோம் என்று கூறும் அரசு ஒரே இனத்துக்குள் பகை உருவாக்கியதே ஊறணி இறங்குதுறை விடுவிப்பு.
இவ்வாறு வலி. வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் குணபாலசிங்கம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஊறணி, மயிலிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 27 வருடங்களாககடற்றொழில் செய்ய முடியாதிருந்தனர். இதுவரை கடற்றொழில் செய்யாதவர்களுக்கே அரசு இறங்குதுறையை வழங்கியுள்ளது.
நல்லிணக்கபுரத்தில் வாழும் குடும்பங்களுக்கு கீரிமலை புனித பிரதேசத்தை அண்டி மீன்பிடித்துறை வழங்க முற்பட்டபோது எதிர்ப்புக் கிளம்பியது. அதையடுத்து தற்போது வழங் கப்பட்டுள்ள ஊறணிப் பகுதியில்ஓர்இறங்குதுறையை வழங்க ஊறணி மற்றும் மயிலிட்டி மக்கள் எமது சம்மதத்தைத் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஊடாக வழங்கியிருந்தோம்.
எமது பிரதேசமும் விடுவிக்கப்படும். நாம் மட்டும் தொழில் புரிய அயல் கிராமத்தவர் பட்டினியில் வாழக்கூடாது என எண்ணியே அந்த இடத்தை வழங்கச் சம்மதித்தோம். தற்போது எமது ஒரு துறையைக்கூட விடுவிக்காது அயல் கிராமத்துக்கு மட்டும் ஒரு துறையை வழங்கியமை அரசின் வஞ்சகத்தைக் காட்டுகின்றது.
இது இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் என்னும் பெயரில் கிராமங்களுக் கிடையே பகையை வளர்க்க மேற்கொள்ளும் சதியாகவே நாம் பார்க்கின்றோம். ஊறணி, மயிலிட்டி மக்கள் மாவட்ட அரச அதிபரை நேரில் சந்தித்து முறையிடவுள்ளோம். எமக்கான ஓர் ஏற்பாடு கிடைக்காத பட்சத்தில் அடுத்து மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விரைவில் முடிவு செய்வோம்.
இதுவரை காலம் பொறுத்திருந்தோம். இனியும் நம்பி ஏமாறத் தயார் இல்லை. அரசின் சூழ்ச்சியை பொங்கல் தினத்தில் துறை விடுவிப்பு நிகழ்வு மேடையில் வைத்தே எம்மால் மாவட்டச் செயலர், இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் செயலாளர் சிவஞானசோதி முன்பாகத் தெளிவாகக் கூறியுள்ளோம் –என்றார். (ற-10)

# நல்லிணக்க வாரத்தில் படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பு

## மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு





வடமராட்சி, ஜன.17
தேசிய ஒருங்கிணைப்பு வாரத்தில் அரச படையினர் வசமுள்ள தனியார் காணிகள் விடுக்கப்படும். முன்னாள்போராளிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் பலதிட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.
இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் சிவசோதி தெரிவித்தார்.
தேசிய நல்லிணக்க விழா நேற்று யாழ்ப்பாணத்தில் இரு இடங்களில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்து கல்லூரியிலும், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பொது நோக்கு மண்டபத்திலும் இடம்பெற்ற நிகழ்வுகள் கல்லூரி அதிபர்களின் தலைமையில் நடைபெற்றன.
நிகழ்வுகளில் தேசிய மொழி களுக்கான இராஜாங்க அமைச்சர் எச்.எம். பௌசி, பதில் வெளிநாட்டு அமைச்சர் ஹர்சன் சில்வா, மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் சிவசோதி, பிரதேச செயலர் ஜெயசீலன், கல்விசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர். நல்லிணக்கத்துக்கான உறுதிமொழிகள் எடுக்கப்பட்டன.
நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது–
ஜனாதிபதி மைத்திரிபால தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான வாரமொன்றை பிரகடனப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். கடந்த 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை நல்லிணக்க வாரமாக அமைச்சரவை பிரகடனப்படுத்தியது.
அரச ஒருமைப்பாடு, தேசிய ஒருங்கிணைப்பு, அமைதி, நல்லிணக்கம், சமாதானம், முரண்பாடுகளற்ற சமூக கட்டமைப்பு, சகோதரத்துவம், இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, மதங்களுக்கு இடையிலான ஒற்றுமை, கலாசாரங்களுக்கிடை யிலான புரிந்துணர்வு என்பவற்றை அனைவருக்கும் அறியப்படுத்துவதே இதன் நோக்கம்.
நாட்டில் மதவாதம், இனவாதம், மொழி வேறுபாடுகள், குலவாதம், பிரதேசவாதம், பிரிவினைவாதம் என்பன சமாதானத்துக்கான சவால்களாக உள்ளன. தேசிய நல்லிணக்க விழாவை பாடசாலைகளில் நடத்துவதன் ஊடாக பாடசாலை மாண வர்களை விழிப்புணர் வடைய செய்வதே இதன் நோக்கம்.
3ஆயிரம் அலகு மழை நீர்சேமிக்கும் திட்டத்துக்கான ஒப்பந்தத்தில் இந்திய அரசின் நன் கொடை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கையயழுத்திடுவதன் ஊடாக யாழ். மாவட்டத்தில் அதை நடைமுறைப்படுத்துதல், ஊடகங்கள் மூலம் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க நிகழ்வுகளை விழிப்புணர்வு ஏற்படுத்தல், அச்சு இயந்திரத்தில் சமூக ஊடகம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஞாபகார்த்த முத்திரை வெளியிடல், வடக்கு, தெற்கு உரையாடல்கள் மற்றும் பரஸ்பர பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை மேற்கொள்ளுதல் போன்றவையும் நல்லிணக்க வாரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும். தேசிய ஒருங்கிணைப்பு வாரத்தில் வாழ்வாதாரத் திட்டம், மலசலகூடவசதிகள், வேலை வாய்ப்புக்கள், அரச படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவித்தல், இந்தியாவில் உள்ள அகதிகளை இலங்கையில் மீள்குடியமர்த்தல், காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு நியாயமான தீர்வை முன்வைத்தல், விசாரணையின்றி சந்தேகத்தின் பேரில் தடுத்துவைக்கப்பட்ட கைதிகளின் விசாரணைகளை துரிதப்படுத்துதல், முன்னாள் போராளிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் திட்டங்களை முன்னெடுத்தல்போன்றன முன்னெடுக்கப்பட வுள்ளன.– என்றார். (ற-21,26)

# எம்.ஜி.ஆர் பிறந்த தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.17
தமிழக முன்னால் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 100ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இன்று யாழ்ப்பாணம் எம்.ஜி.ஆர். நற்பணி மன்றம் நடத்தும் நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு கல்வியங்காடு சந்தியில் அமைந்துள்ளஎம்.ஜி.ஆர். திருவுருவச் சிலை அமைவிடத்தில் கோப்பாய் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருத்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜனும், சிறப்பு விருந்தினராக யாழ்.இந்திய துணைத் தூதுவராலயத்தின் ஆலோசகர்.ஆர்.செல்வமும், வடக்கு மாகாண சபை உறுப்பினர்.எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ற-23)

# கசிப்பு வைத்திருந்த இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.17
கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பொங்கல் தினத்தன்று 3 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இராமநாதபுரம் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி சுபேசன் தெரிவித்தார்.
பொங்கல் தினத்தன்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மாயவனூரில் ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்தவர் கைது செய்யப்பட்டார். கசிப்பு கடத்தப்படுகின்றது என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் சேரன் வீதியில் வாளி ஒன்றில் 2 லீற்றர் கசிப்புக்கொண்டுசென்ற மற்றொரு நபரும் கைது செய்யப்பட்டார். அவர்கள் விசாரணைக்காகவும், நீதிமன்ற நடவடிக்கைக்காகவும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-6)

# ஏழைகளுக்கு கைகொடுப்போராக மாறவேண்டும் அரச அதிகாரிகள்

## அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு

மன்னார், ஜன.17
எதிர் நீச்சல் போட முடியாது தத்தளிக்கின்ற ஏழைகளுக்கு கைகொடுப்பவர்களாக அரச அதிகாரிகள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.
இலங்கை அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலையின் ஏற்பாட்டில் கடந்த 12 ஆம் திகதி அரச திணைக்களங்களுக்கிடையான விளையாட்டு நிகழ்வுகளின் இறுதி நாள் நிகழ்வுகள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. அதில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அரச அதிகாரிகளிடம் மக்கள் தமது தேவைகளுக்காக வருகின்றபோது அவர்களை மனிதாபிமானத்தோடும், இரக்க சிந்தனையோடும் நோக்குகின்ற மனப்பக்குவம் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நிச்சயமாகத் தேவை. அரச உத்தியோகத்தர்கள் ஒரு பிரதேசத்திலே ஒரு சிலர் தான் இருக்கின் றார்கள். ஆனால் அதிகமான மக்கள் தமது தேவைகளுக்காக அரச அதிகாரிகளிடம் வருகின்றார்கள். வருகின்றவர்களுக்கான பணிகளைச் செய்வதற்காகத்தான் அரச அதிகாரிகளுக்கு, அரசியல்வாதிகளுக்கு உரிய சம்பளம் கொடுக்கப்படுகின்றது. மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு அரச அதிகாரிகள் இதய சுத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும்.– என்றார். (ற-21,56)

# மாற்றுவலுவுள்ளோரை நிமிர்த்தும் பெரும்பணி எம்முன்னே உள்ளது

## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

மன்னார், ஜன.17
போரின் அடையாளமாக வும் அர்ப்பணிப்பின் அடையாளமாகவும் நம்மத்தியில் பல்வேறு இன்னல்கள், வலிகளுக்கு மத்தியில் வாழும் மாற்று வலுவுள்ள வர்களை கைதூக்கி விட முடியாதபடியே காலம் செல்கின்றது.
இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.
கிளிநொச்சியைச் சேர்ந்த 125 மாற்று வலுவுள்ளோருக்கு சிவன் அறக்கட்டளை அமைப்பினர் பொங்கல் பொருள்கள் வழங்கினர். அந்த நிகழ்வில் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மாற்று வலுவுள்ளவர்களுக்கான பணி என்பது மிகப் பெரியது. மாற்று வலு என்பது பல்வேறு தன்மைகளில் உள்ளது. முதற்கட்டம் அடுத்த கட்டம் என மாற்று வலுவுள் ளவர் களுக்கான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டி யுள்ளன. அந்தப் பணிகள் சரியாக முன் னெடுக்கப்படாததும் அதற்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதும் தற்போதும் மாற்று வலுவுள்ளவர்கள் மீள முடியாத நிலமைக்குக் காரணம்.
வறுமையில் இருந்து எமது சமுதாயத்தை முதலில் விடுதலை செய்யவேண்டி இருக்கின்றது. தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியுள்ளது. இளைய சமுதாயத்தை உழைப்பு, பொருளாதாரம் என்ற திசை யில்பயணிக்கவைக்க வேண்டி யுள்ளது. எமது இனம், மொழி, பண்பாட்டின் வழி கொண்டுசெல்லவேண்டியுள்ளது –என்றார். (ற-21,56)

# ரணிலுக்கு கட்டுப்பாடு போட்டார் மைத்திரி

## உரிய அமைச்சுக்கள் ஊடாகவே அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கவேண்டும் என அறிவுறுத்தல்

கொழும்பு,ஜன.17



அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சரவைக்குப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் போது, குறித்த அபிவிருத்தி சார்ந்துள்ள அமைச்சின் ஊடாகச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளார் என அறிய முடிகிறது.

அண்மைக்காலமாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள் இருக்கும்போது, அந்த அமைச்சு சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை பிரதமரும், அவரின் கீழ் இருந்த பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான அமைச்சரவை உபகுழுவும் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தன. இதில் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியே ஜனாதிபதி பிரதமருக்கு இந்த அறிவித்தலை விடுத்துள்ளார் என அரச உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் குறித்த அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளனர். இதனை மையப்படுத்தியே ஜனாதிபதி பிரதமருக்கு இதனை அறிவித்துள்ளார். அதன்படி எதிர்வரும் நாள்களில் வழமையான அணுகுமுறை பின்பற்றப்பட்டு அந்தந்த விடய அமைச்சர்கள், அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப் பிப்பர் எனவும் அந்தத் தகவல்கள் சுட்டிக்காட்டின. (த-ஐ)

# தெற்கு அதிவேக வீதியில் இரவில் காட்டுப் பன்றிகள்

## விபத்துகளுக்கான வாய்ப்புகள் உள்ளதாக எச்சரிக்கை

கொழும்பு, ஜன 17

தெற்கு அதிவேகப் பாதையில் இரவு நேரத்தில் காட்டுப் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதால் விபத்துகளுக்கான வாய்ப்புகள் காணப்படுவதாக வீதி அபிவிருத்திச் சபை எச்சரிக்கை செய்துள்ளது.

பாதையின் இரு பக்கங்களிலும் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலிகளை உடைத்துக் கொண்டு இந்தக் காட்டுப் பன்றிகள் பாதைக்கு வருவதால் பாதுகாப்பு வேலிகளை மேலும் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர் எஸ்.ஒப்பநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பாதையில் பின்னதூவைக்கு அப்பாலுள்ள பகுதியிலேயே இவற்றின் நடமாட்டம் அதிகமாக இருப்பதால் சாரதிகள் இயன்றவரை விழிப்பாக இருக்கவேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)

# எவ்.சி.ஐ.டியின் புதிய பணிப்பாளர் தம்மிக

கொழும்பு, ஜன 17

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் (எவ்.சி.ஐ.டி) புதிய பணிப்பாளராக மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தம்மிக பிரியந்த நியமிக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

2001ஆம் ஆண்டு உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியேற்ற அவர் யாழ்ப்பாணத்திலும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவிலும் குறிப்பிட்ட காலம் பணியாற்றிய பின்னர் புலனாய்வுப் பொலிஸ் பிரிவில் ஒன்பது வருட காலம் பிரதிப் பணிப்பாளராக சேவையாற்றினார். அதன்பின் அம்பாறை பிரதேசத்துக்கான மூத்த பொலிஸ் அத்தியட்சகராகப் பதவியுயர்வு பெற்று பணி புரிந்த போது பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவின் புதிய பணிப்பாளராக நியமிக்கப் பட்டிருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் ஆரம்பப் பட்டக் கல்வியைப் பயின்ற இவர், அதே பல்கலைக்கழத்தின் குற்றச் செயல் தொடர்பான பட்டத்தைப் பெற்றார்.

எவ்.சி.ஐ.டியின் முன்னைய பணிப்பாளரான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அருண பிரேமாந்த மொனராகலை மாவட்டத்தின் பிரதிப்பொலிஸ்மா அதிபராகப் பதவியுயர்வு பெற்று மாற்றலாகிச் சென்ற பின்னர் அவரது இடத்துக்கு தம்மிக பிரியந்த நியமிக்கப்பட்டுள்ளார். (த)

# கரிகாற்சோழன் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில்

யாழ்ப்பாணம். ஜன. 17

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகமும் எம்.ஏ. முஸ்தபா அறக்கட்டளையும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்தும் கரிகாற்சோழன் விருது வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 21ஆம்திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் முஸ்தபா அறக்கட்டளை நிறுவுநர் எம்.ஏ. முஸ்தபா தலைமையில் நடைபெறும்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தமிழ் வாழ்த்தை இசை ஆசிரிய ஆலோசகர் வி.கணேசலிங்கம் வழங்க வரவேற்புரையை பேராசிரியர் வ.மகேஸ்வரன் மற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் தம்பு சிவசுப்பிரமணியமும், சிறப்புரையை இந்தியா தந்தி தொலைக்காட்சியைச் சேர்ந்த ரங்கராஜ் பாண்டேயும் வாழ்த்துரையினை பேராசிரியர்களான சி.தில்லைநாதன் சபா ஜெயராசா மற்றும் சி.சிவலிங்கராசா ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

தஞ்சாவூர் பல்கலைக்கழகத் துணைவேந்தரான பேராசிரியர் ச.பாஸ்கரன் விருதுகளை வழங்குவார். சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், ஆய்வாளருக்கான விருதுகள் கடந்த காலங்களில் வழங்கப்பட்டன. இம்முறை இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் இந்த விருது வழங்கப்படவுள்ளமை சிறப்பம்சமாகும். இந்நிகழ்ச்சியில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கொழும்புத்தமிழ்ச்சங்கப் பொதுச் செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (ரி)

# 25 பிரபல பாடசாலைகளின் தரம் 1 அனுமதியில் முறைகேடு

கொழும்பு, ஜன 17

நாடெங்குமுள்ள பிரபல அரச பாடசாலைகளில் முதலாம் ஆண்டு அனுமதியின் போது நடந்துள்ள ஏராளமான முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தகைய பிரபல பாடசாலைகளில் இவ்வருட முதலாம் ஆண்டு அனுமதியில் ஏராளமான ஊழல்களும், முறைகேடுகளும் நடந்திருப்பதாக கல்வியமைச்சுக்குக் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணை நடத்துமாறு கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதையடுத்து அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வியமைச்சு அதிகாரிகள் குழு விசாரணைகளை மேற்கொண்டது.

கொழும்பு றோயல் கல்லூரியில் மாத்திரம் 31 மாணவர்கள் சட்டவிரோதமாக முதலாம் தரத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும், அனைத்துப்பாடசாலைகளிலும் மாணவர்கள் தொடர்பான போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வாறானவர்களின் அனுமதிகள் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் கல்வியமைச்சு கூறியது.

போலி வீட்டுரிமைப் பத்திரம் உட்பட பல்வேறு போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் வாகனத் தரிப்பிடங்கள், காவல் கூடுகள், பள்ளிவாசல்கள், வியாபார நிலையங்கள், தூதராலயங்கள், கட்டப்பட்டுவரும் கட்டடங்கள், வடக்கு மாகாண சபை முதலமைச்சரின் வீடு உள்ளிட்ட பல்வேறு போலி முகவரிகள் றோயல் கல்லூரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், இத்தகைய முறைகேடான அனுமதிகள் அனைத்தும் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் கல்வியமைச்சர் தெரிவித்தார். (த)

# காணிப் பிணக்குகளுக்கு சரியான நியாயம் தேவை

## கிழக்கு விவசாய அமைச்சர் வலியுறுத்தல்

ஏறாவூர்,ஜன.17

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் காணிப் பிணக்குகளுக்கு சட்டத்தால் மாத்திரம் தீர்வு வழங்க முடியாது. பிரச்சினைகள் எனக் கண்டறியப்படும் விடயங்களுக்குச் சரியான நியாயம் கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும் என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைக் கட்டடத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற காணிப் பிணக்குகளைத் தீர்ப்பது தொடர்பான நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு–கிழக்கு மாகாணங்களில் அதிகளவான காணிப் பிணக்குகள் காணப்படுகின்றன. காணிப் பிணக்குகள் சிலவற்றுக்குச் சட்டம் தீர்வு தராது. இவ்வாறான விடயங்களுக்கு நியாயம் தேடி அறியப்படவேண்டும்.

காணி தொடர்பாக இயற்றப்படுகின்ற சட்டங்களைத்துஷ்பிரயோகம் செய்யும் பலர் சட்டத்தின் ஓட்டைகளுக்குள் நுழைந்து தாங்கள் உரித்துடையவர்கள் என்று கூறுகிறார்கள். இவ்வாறான நிலமைகளில்சரியான முறையில்ஆராய்ந்து பரிகாரம் வழங்க வேண்டும்.

எமது பிரதேசங்களைப் பொறுத்தவரை தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீடுகள் வழங்கப்பட்டு காணி உறுதி வழங்கப்படாமல் உள்ளன. ஏற்கனவே மேய்ச்சல் தரையாக இருந்த இடங்கள் குடியிருப்புகளாக மாறியுள்ளன. இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளன. மேய்ச்சல் தரையாகத் தீர்மானிக்கப்பட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்றுக்காணி வழங்கவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஆகக்குறைந்தது 25 சதவீதம் காடுகள் தேவை. ஆனால் தற்போது 14 சதவீதமான காடுகள் மாத்திரமே காணப்படுகின்றன. காடுகளை அழித்துப் புதிதாக இடங்களை நாங்கள் உருவாக்க முடியாது. இருக்கின்ற காணிகளுக்குள்ளே நாங்கள் தீர்வு காணவேண்டும். காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்க வேண்டும் என்பது சட்டம்.- என்றார். (த-ஐ)

# முஸ்லிம் காங்கிரஸை அழிக்க சிலர் முயற்சி

## கிழக்கு மாகாண முதலமைச்சர் குற்றச்சாட்டு



அம்பாறை,ஜன.17
சிலர் வெளிநாடுகளின் சக்தியைப் பயன்படுத்தி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை இல்லாதொழிக்க முயற்சிப்பதாகக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் குற்றம் சுமத்தினார்.
அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பேரினவாத மற்றும் வெளிநாட்டுச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலுக்கு உள்வாங்க முற்பட்டு தோற்றுப்போன சிலர், போலியான ஆவணங்களை முன்வைத்து கட்சிக்கு எதிரான சக்திகளுடன் இணைந்து இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு உள்ளே இருக்கும் சிலர் இவ்வாறான நயவஞ்சகத்தனமான செயற்பாடுகளை முன்னெடுப்பது ஏமாற்றமளிக்கிறது.
குரோத நோக்கில் வீண் பழி சுமத்துபவர்களின் பொய்யை நம்பி ஏமாறுவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அங்கத்தவர்கள் ஒரு போதும் தயாரில்லை.
சிறுபான்மை சமூகங்கள் ஒற்றுமைப்படுவதன்மூலம் மாத்திரமே இரு சமூகங்களுக்கும் நிரந்தரமான அரசியல் தீர்வு கிட்டும்என்பதில் நம்பிக்கை கொண்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட்டு வருகிறது - என்றார். (ஐ)

# தங்கப் பாளங்களுடன் இந்தியக் குடிமகன் கைது

கொழும்பு,ஜன.17
சட்ட விரோதமாக இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு கொண்டு செல்ல முற்பட்ட 16 லட்சம் ரூபா பெறுமதியானதங்கப்பாளங்களுடன், இந்தியக் குடிமகன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.
கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை சென்னை நோக்கிப் பயணிக்கவிருந்த போதே சுங்கப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.
26 வயதான குறித்த இளைஞரிடம் இருந்து 300 கிராம் பெறுமதியான 3 தங்கப் பாளங்கள் கைப்பற்றப்பட்டன. (ஐ)

# உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம்; நால்வர் கைது

கொழும்பு,ஜன.17
அம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில சீன - இலங்கை கைத்தொழில் வலயத்தின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்ற தினத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.
அம்பாந்தோட்டை பிரதேசத்திற்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அதிகாரியொருவரே இதனைத் தெரிவித்தார்.
அம்பலந்தொட்ட மற்றும் வீரக்கெட்டிய பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, குறித்த சம்பவம் இடம்பெற்ற மறு நாள் கைது செய்யப்பட்ட 51 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


# இந்த வருடத்தில் 19 நாள்கள் மதுபான நிலையங்களுக்கு விடுமுறை



கொழும்பு,ஜன.17
இந்த வருடம் 19 சிறப்பு நாள்களில் மதுபானவிற்பனைக்குத் தடை செய்யப்படுவதாக மதுவரித் திணைக்களம் அறிவித்தது.
இந்த நடைமுறை நாடு முழுவதும் பின்பற்றப்படும் அதே வேளை அனைத்து வித மதுபான விற்பனைத் தளங்களும் மூடப்படும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டது.
இதற்கமைய, போயா தினங்கள், தேசிய சுதந்திர தினம், சிங்களத்தமிழ்புத்தாண்டின் இரண்டு நாள்கள், வெசாக் தினம், வெசாக் தினத்துக்கு மறுதினம், ரம்ழான் பண்டிகை, உலக போதைப் பொருள் தடுப்பு தினம் மற்றும் நத்தார் தினம் ஆகிய தினங்களில் மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளன.
இதில் தைத்திருநாள், மற்றும் தீபாவளி தினங்கள் உள்வாங்கப்படவில்லை.
அத்துடன் அரசின் குறுகிய கால அவகாசத்தின் படி மேலதிக மதுபானக்கடைகள் மூடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# கூரிய ஆயுதத்தால் இருவர் மீது தாக்குதல்

கொழும்பு,ஜன.17
போதைப்பொருள் பாவனைக்காக பணம் தருமாறு கோரிய நிலையில் அதனைத் தர மறுத்ததால் கோபமடைந்த நபரொருவர், கலேவெல பிரதேச வர்த்தகர் ஒருவரையும் மேலுமொரு நபரையும் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.
நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த சம்பவம் இடம்பெற்றது.
காயமடைந்த நபர்கள் கலேவெல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக பின்னர் தம்புள்ளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. (ஐ)



# இனந்தெரியாத ஈ வகையால் இரத்மலானை மக்கள் பாதிப்பு

கொழும்பு,ஜன.17
இரத்மலானையிலுள்ள வீட்டுப் பூந்தோட்டம், கடற்கரை மற்றும் வீடுகளில் மிக வேகமாகப் பரவி வரும் ஒருவகையான ஈக்கள் காரணமாக, குறித்த பகுதியிலுள்ள மக்கள், சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.
இது, பொதுமக்களின் சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிக்கும் ஈ வகை என்று, தெகிவளை, கல்கிஸை மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.
இந்தக் ஈக்கள், கடற்கரையோரங்களில் உள்ள புற்களுக்கு அடியில் இருப்பதாகவும், அவ்வழியே நடந்து செல்வோரைக் கொடுக்கினால் கொட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வீட்டிலுள்ள யன்னல், கதவு, கண்ணாடி, தளபாடங்கள் போன்ற அனைத்து இடங்களிலும் இந்த ஈ இருப்பதாகவும், இந்த ஈயின் தாக்குதலினால் பாதிப்புக்குள்ளான சிறிய பிள்ளைகள், களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
இந்த ஈக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப் புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# உயிராபத்தான கிருமிநாசினி இலங்கையில் விற்பனை

கொழும்பு,ஜன.17
சிறுநீரக நோய்பாதிப்பினால் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள 'க்லைபொஸ்பேட்' என்ற இரசாயன கிருமிநாசினி வேறொரு பெயரில் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் சன்ன ஜெயசுமன இதனைக் குறிப்பிட்டார்.
இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் இருந்து கடல் மார்க்கமாக இந்தக் கிருமிநாசினி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகிறது.
இவ்வாறான கிருமிநாசினி பாவனை மற்றும் இன்னும் பல காரணங்களால் நாளாந்தம் நான்கு தொடக்கம் ஆறு பேர் வரையில் உயிரிழப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# மத்திய மாகாணத்தில் தமிழ்க் கல்வி தரமுயர்வு

## முதலமைச்சர் பாராட்டு



கொழும்பு,ஜன.17
மத்திய மாகாணத்தில் 20 வீதமாக இருந்த பாடசாலைத் தமிழ் கல்வியின் தரம் தற்போது 90 வீதமாக உயர்ந்துள்ளது என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா தெரிவித்தார்.
தலவாக்கலையில் நடைபெற்ற மத்திய மாகாண தைப்பொங்கல் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தலவாக்கலை 90 வீத தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாகும். தைப்பொங்கல், திருநாள் தெய்வங்கள் தொடர்பாகவும், விவசாயிகள் மற்றும் பாரம்பரிய கலாசாரத் தைப் பேணிப் பாதுகாக்கும்வகையிலும் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் ஓர் உன்னத விழாவாகும்.
இந்த விழாவை நாட்டில் உள்ள அனைத்து இனமக்களும் கொண்டாடுகின்ற கலாசாரம் நமது நாட்டில் உருவாகியுள்ளது. இது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.
மத்திய மாகாண கல்வி அமைச்சின் ஊடாக சென்றவருடம் தைப்பொங்கலை முன்னிட்டு ராஜகிரிய ரணவிரு சிங்கள வித்தியாலய மாணவர்கள் 2 ஆயிரம் பேரை அழைத்து வந்து தைப்பொங்கல் தொடர்பிலும், அதன் கலாசார கோட்பாடுகள் தொடர்பிலும் கண்டறியச் செய்தோம்.
ஆனால், இன்று இன வேறுபாடுகள் இல்லாமல் நாடளாவிய ரீதியில் கொண்டாடும் நிலை உருவாகியுள்ளது.
இனங்களுக்கிடையே கலாசாரத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் மத்திய மாகாணத்தினூடாக நாம் செயலாற்றுகின்றோம்.
இதனால் ஒரு தாய், பிள்ளைகளைப்போல இந்தத் தைத் திருநாளை மத்திய மாகாணத்தில் அனைவரும் கொண்டாடுகின்றோம் - என்றார். (ஐ)

# 22 கிலோ கஞ்சா மொனராகலையில் மீட்பு

கொழும்பு,ஜன.17
மொனராகலை - தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ பிரதேசங்களில் கடந்த இரண்டு நாள்கள் மேற்கொண்ட சிறப்புச் சோதனை நடவடிக்கைகளின் போது, 4 கோடி ரூபா பெறுமதியான உலர் கஞ்சா 22 கிலோகிராம் கைப்பற்றப்பட்டது. மேலும் இதனுடன் 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.
இந்த இரண்டு நாள்களில் 9 கஞ்சாச் சேனைகள் முற்றுகையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த பிரதேசத்தில் போக்குவரத்துச் சிரமம் காரணமாக குறித்த கஞ்சாத் தொகை தீ வைத்து அழிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## முன்னாள் போராளிகளுக்கு உதவித் திட்டம்



வவுனியா, ஜன.17

புனர்வாழ்வு வழங்கப்பட்ட போராளிகள், போரால் இறந்த போராளிகளின் குடும்பங்கள், தடுப்பில் உள்ள அரசியல் கைதிகளின் குடும்பங்கள், போராட்டக் குழுக்களில் இருந்து இறந்தவர்களது குடும்பங்கள் போன்றோரின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கோடு வவுனியாவில் 22 பயனாளிகளுக்கான உதவிப்பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

2014ஆம்ஆண்டுவடக்குமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் கொண்டுவரப்பட்ட கொள்கை பிரகடனத்துக்கு அமைய ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 50ஆயிரம் பெறுமதியான வாழ்வாதார உள்ளீடுகளை வழங்கும் உதவித் திட்டத்தினூடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்டத்தில் ஏற்கனவே 78 குடும்பங்களுக்கு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் 22பயனாளிகளுக்கே நேற்று உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்திஅமைச்சர்பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் க.கமலேஸ்வரன், மாகாணசபை உறுப்பினர் ஜி.டி.லிங்கநாதன், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ஜெ.ஜெ.சி.பெலிசியன், வவுனியா மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான வாழ்வாதார உள்ளீடுகளை வழங்கினர்.

(ற-21)

# முல்லைத்தீவின் வறுமைக்கு அரச நிர்வாகமே முழுக் காரணம்

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.17

வடக்கு மாகாணத்தில் அதிக நிலப் பரப்புடைய மாவட்டம் முல்லைத்தீவு மாவட் டம். இலங்கையிலேயே மிகவும் வறுமையான மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டம் தான். அதற்கான காரணம் அரச நிர்வாகமே.

இவ்வாறு பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் உலக வங்கியின் மூலோபாய சமூக மதிப்பீட்டு கலந்துரையாடல் கருத்தரங்கு நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்ட செயலாளர் தலைமையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாவட்ட நிலப்பரப்பு பெரியதேயன்றி அந்த நிலங்கள் அங்கு வாழும் மக்களுக்கு சொந்தம் கிடையாது. அவ்வாறாணால் எவ்வாறு மாவட்டம் அபிவிருத்தியடைய முடியும்?. இந்த மாவட்டத்தின் நிலப் பரப்புக்கள் மக்களுக்குத்தான் சொந்தமில்லையென்றால் அடுத்தபடியாக மக்களோடு நேரடித் தொடர்பான அரச நிர்வாகமான பிரதேச செயலகத்திடமேனும் கிடையாது. மக்களால் எந்த வகையிலும் நேரடித் தொடர்பைப் பேணாத வனவளத் திணைக்களத்திடம் அவை அகப்பட்டுள்ளன. அங்கு நிலம் தொடர்பாக மாவட்டச் செயலாளரோ அல்லது ஒருங்கிணைப்புக் குழுக்களோ முடிவுகளை எட்ட முடிவதில்லை. இது அந்த மாவட்டத்தின் அபிவிருத்திக்குப் பெரும் தடையாக உள்ளது - என்றார்.

நிகழ்வில் யாழ். மாவட்ட மாதர் சங்கப் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

போரால் பாதிப்படைந்த பெண்கள் தற்போது குடும்பங்களை நடத்த வேண்டிய நிலையில் உள்ளனர். அவர்களுக்கான தொழில் வாய்ப்புகள் இல்லை. அரச உதவிகளும் கிடைப்பதில்லை. இங்குள்ள நிதி நிறுவனங்கள் பெண்களையே இன்னல்களுக்கு உள்ளாக்குகின்றன. பலரும் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். அதன் உச்சக் கட்டமாக அண்மையில் ஓர் பெண்மணி நிதி நிறுவனங்களின் கொடுமையால் சாவடைந்தார்.- என்றார்.

மன்னார் மாவட்ட பிரதிநிதியும் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது மாவட்டத்தில் சரியான வழியில் ஆராய்ந்து உரிய தீர்வுகள் முன்வைக்கப்படுவதில்லை. இது தொடர்ந்தால் விரைவில் அதிர்ச்சியான செய்திகளே வெளிவரும். மீனவர் சமூகத்தில் இருந்து உயிரை மாய்க்கும் செய்திகள் வெளிவரும். இந்திய மீனவர் அத்துமீறல் ஒருபுறம்

தென்னிலங்கை மீனவர் அட்டூழியம் மறுபுறம் எனப் பாதிப்பை மீனவர்கள் எதிர்கொள்ளும் அதேநேரம் வர்த்தகத்திலும் மாவட்ட வர்த்தகர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

தென்னிலங்கை வர்த்தகர்கள் வகை தொகையின்றி படையெடுக்கின்றனர். மாவட்ட வர்த்தகர்கள் வர்த்தகத்தைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் - என்றார்.

(ற-101)






# புதிய பேருந்துத் தரிப்பிடம் நேற்று வவுனியாவில் திறப்பு

வவுனியா, ஜன.17

வவுனியா - யாழ் வீதியில் அமைக்கப்பட்ட வவுனியா மாவட்டத்துக்கான புதிய மத்திய பேருந்து நிலையம் மத்திய போக்குவரத்து துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் நேற்று திறக்கப்பட்டது.

உள்ளூர்மற்றும்மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தை மேற்கொள்கின்ற பேருந்துக்களுக்கான பிரதான தரிப்பிடமான இந்த பேருந்து நிலையம் கொழும்பு அரசால் 195 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டது.

13 பேருந்துகள் மாகாணங்களுக்கிடையிலான சேவையிலும், 21பேருந்துகள் உள்ளூர் சேவையிலும் ஈடுபடத்தக்க வகையில் ஏ-9 வீதியில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் நாளாந்தம் 100 பேருந்துகள் வந்து செல்லத்தக்க வகையில் நவீன முறையில் இந்த பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் அபயசிங்க தலைமையில் நடைபெற்ற திறப்புவிழாவில், கொழும்பு, போக்குவத்து துறை அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா, பிரதி போக்குவரத்து அமைச்சர் அபேக்க அபேயசிங்க, வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், கே.கே.மஸ்தான், வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான கமலநாதன், ஜி.ரி.லிங்கநாதன், ம.ஜெயதிலக, மாவட்ட செயலாளர் ரோஹண புஸ்பகுமார, தனியார் பேருந்து சங்கத் தலைவர் மற்றும் அதன் உரிமையாளர்கள், இலங்கை போக்குவரத்துச் சபையினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ற-21)

# திறப்பு விழாவில் பங்கேற்ற வடக்கு மாகாண சபையினர்




வவுனியா, ஜன.17

வவுனியாவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையத் திறப்பு விழாவை வடக்கு மாகாண சபை புறக்கணிக்க வேண்டும் என்று மாகாண சபைஉறுப்பினர்கள் சிலர் கோரியிருந்த நிலையில் நேற்று நடைபெற்ற திறப்பு விழாவில் வடக்கு பேக்குவரத்து அமைச்சர் உட்பட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கொழும்பு அரசின் நிதியில் வவுனியாவில் அமைக்கப்பட்ட பேருந்து நிலைய திறப்பு விழாவுக்கு வடக்கு மாகாண சபைக்கு அழைப்பு விடுக்கவில்லை என தெரிவித்த மாகாண சபைஉறுப்பினர்கள் சிலர் திறப்புவிழாவை மாகாணசபை புறக்கணிக்க வேண்டும் எனத் தெரிவித்து கடந்த அமர்வில் வலியுறுத்தினர். வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் திறப்பு விழாவை புறக்கணிக்க வேண்டும் என்று ஊடக அறிக்கையும் வெளியிட்டிருந்தார்.

எனினும் திறப்புவிழாவில் மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ் வரன் உட்பட உறுப்பினர்களான கமலநாதன், ஜி.ரி. லிங்கநாதன், ம.ஜெயதிலக ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-21)

# இலத்திரனியல் நூலகங்களாக மாறும் வடக்கின் 16 நூலகங்கள்

தென்மராட்சி, ஜன.17

வடக்கு மாகாணத்தில் இயங்கும் 16 பொது நூல் நிலையங்கள் இலத்திரனியல் நூலகங்களாக மாற்றப்படவுள்ளன.

மாகாண சபைகளும் மற்றும் உள்ளூராட்சி அமைச்சும் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆஸ்திரேலிய அரசு மற்றும் உலக வங்கியின் உதவியுடன் திட்டத்தைநடைமுறைப்படுத்தவுள்ளது. உள்ளூராட்சி சபைகளின் பொது நூலகங்களை இலத்திரனியல் நூலகங்களாக மாற்றுவதற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று மு.ப.9.30 மணிக்கு கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா உபகரணங்களை வழங்கவுள்ளார்.

உபகரணங்கள் பெறுவதற்கு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களும் பொது நூலக நூலகர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இலத்திரனியல் பொது நூலகங்களாக மாறவுள்ள பொது நூலகங்களின் விவரம் வடக்கு மாகணத்தில் மாவட்ட ரீதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார்மாவட்டத்தில், மன்னார் நகரசபை பொது நூலகம், மன்னார் பிரதேச சபை பொது நூலகம், மாந்தை கிழக்கு பிரதேச சபை பொது நூலகமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை பொது நூலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை பொதுநூலகமும், வவுனியா மாவட்டத்தில், வவுனியா நகர சபை பொது நுலகம், வவுனியா வடக்கு பிரதேசசபை பொது நூலகம், வவுனியா தெற்கு பிரதேச சபை பொதுநூலகமும், கிளிநொச்சி மாவட்டத்தில், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பொதுநூலகம், கரைச்சி பிரதேச சபை பொது நூலகமும், யாழ்ப்பாணத்தில், யாழ். மாநகர சபை பொது நூலகம், சாவகச்சேரி நகரசபை பொதுநூலகம், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை வதிரி பொது நூலகம்,வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம் பொதுநூலகம், வலிகாமம் மேற்கு பிரதேசசபை சங்கானை பொதுநூலகம், நல்லூர் பிரதேசசபை - கொக்குவில் பொது நூலகமும் இலத்திரனியவ் நூலகங்களாக மாற்றப்பட்டுள்ளன.

(ற-9)

## விபத்தில் 9 பேர் படுகாயம்

களுவாஞ்சிகுடி, ஜன.17
மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் 9 பேர் படுகாயடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
மட்டக்களப்பு தாளங்குடாவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்று கொண்டிருந்த பட்டா ரக வாகனத்தின் சக்கரத்தில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக வாகனம் தடம் புரண்டதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. தைப்பொங்கல் கொண்டாட்டத்துக்காக உறவினர்களின் வீட்டுக்குச் சென்று திரும்பியவர்களே இவ்வாறு விபத்துக் குள்ளாகியுள்ளனர்.
இதில் படுகாயமடைந்தவர்கள் பெரியகல்லாறு மாவட்ட வைத்தியசாலை மற்றும் களுவாஞ்சிக் குடி ஆதார வைத்தியசாலை ஆகியவற்றில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-ய)



## லொத்தர் சீட்டு விற்பனையாளர்கள் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பு

நுவரெலியா, ஜன.17
ஹற்றன் பிரதேசத்தில் நேற்றும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
இந்த வருடம் முதல் லொத்தர் சீட்டு ஒன்றின் விலை 30 ரூபாவாக அறவிடப்படும் என அரசு முன்மொழிந்திருந்தது.
குறித்த முன்மொழிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே லொத்தர் சீட்டு விற்பனையாளர்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.
10 ரூபாவால் விலை அதிகரிப்பு செய்யப்படுவதனால் லொத்தர் தொழில் துறையை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விற்பனையாளர் கள் தெரிவிக்கின்றனர். (ஐ-ய-43)

## 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு கடந்த ஆண்டு அரச தொழில்

கொழும்பு,ஜன.17
கடந்த வருடத்துக்குள், பட்டதாரிகள் 10 ஆயிரம் பேருக்கு அரச தொழில்வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.
அதனடிப்படையில் இந்நாட்டில் 16 பேருக்கு ஒருவர், அரச ஊழியராக இருக்கிறார் என, தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.
இந்த நிலமையை வலய நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், உயர்மதிப்பாகும்.
அதனூடாக பொருளாதாரம், சீரற்ற மைற்கல்லுக்கு வந்துள்ளது என்றும் அவ்வமைச்சு அறிவித்துள்ளது.
வரிப்பணத்தால் உருவாக்கப்படும் பட்டதாரிகளை, அரச தொழில்வாய்ப்புக்காக மட்டுமே, உள்ளீர்த்துக் கொள்ளுமாறு குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படும் சங்கங்கள் முயல்கின்றன.
ஆகையால், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் இதனூடாக எதிர்காலத்தில் நாட்டுக்குள் உருவாகும் பொருளாதார முதலீடுகளின் ஊடாக, உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளுக்கு பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் அவ்வமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# திருமலை-கொழும்பு வீதியை மறித்து பெற்றோர், மாணவர் ஆர்ப்பாட்டம்

திருமலை,ஜன.17
திருகோணமலை சர்தாபுர ஸ்ரீ தர்மராஜ வித்தியாலய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து திருகோணமலை- கொழும்பு வீதியைப் பகுதியளவில் மறித்து நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.
பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்து தரும்படி கோரியே மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
சுமார் 105 மாணவர்கள் கல்வி பயிலும் குறித்த பாடசாலையில் 7 ஆசிரியர்கள் மட் டுமே பணியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
குறிப்பாக ஆங்கிலம் , பௌத்த சமயம் மற்றும் கணிதம் கற்பிக்கும் 3 ஆசிரியர்கள் மட்டும், தரம் 1முதல் 11வரை அனைத்து வகுப்புக்களுக்கும் கற்பிக்க வேண்டியுள்ள தாகச் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.
நீண்ட நாள்களாக நிலவும் மேற்படி பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தரும்படி மாகாண கல்வி அமைச்சுக்குப் பல தடவை அறிவித்துள்ள போதிலும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.
இதனையடுத்தே பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## சுற்றுலா வலயமாக மாற்றப்படும் மலையகத்தில் இரு நகரங்கள்

கொழும்பு,ஜன.17
நுவரெலியா மற்றும் தலவாக்கலை ஆகிய இரு பகுதிகளையும் பிரதான சுற்றுலா வலயமாக மாற்றுவதற்குத் தீர்மா னித்துள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நுவரெலியாவில் மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய பொங்கல் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
குறித்த இரு பிரதேசங்களிலும் உல்லாச பிரயாண துறையை அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது.
இது தொடர்பில் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம மற்றும் அமைச்சர் நவீன் திஸாநாயக்க ஆகியோரிடம் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## முதுமையடைவோரின் வேகம் இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு,ஜன.17
ஆசிய வலயத்தைப் பார்க்கின்றபோது, மிக விரைவாக முதுமையடை யும் நபர்கள் இலங்கையிலேயே வாழ்கின்றனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.
'ஆசியாவிலேயே இலங்கைச் சனத்தொகையில் தான் மிக விரைவாக முதுமையடைவோர் வாழ்கின்றனர். 60 வருடங்களுக்கு மேலான சதவீதம், தற்போது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஆயுள் எதிர்பார்ப்பு அதிகம் என்பதனால், 80 வருடங்கள் என்ற சதவீதம் இன்னும் அதிகரிக்கும்' என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.
இந்த நிலமையைக் கவனத்தில் கொண்டு, முதியோரின் சுகாதார நிலமையை மேம்படுத்துவது தொடர்பில், கூடுதல் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
இந்த விவகாரம் தொடர்பில் சுகாதார அமைச்சரின், இளைஞர், முதியோர் மற்றும் அங்கவீனமடைந்தோர் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் ஆனந்த ஜயலால் மேலும் தெரிவித்ததாவது:
மேற்படி அறிக்கையின் பிரகாரம், சுகாதார வசதிகளை மேம்படுத்தும் முறைமையில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டார்.
2050ஆம் ஆண்டில், உலகில் வாழுகின்ற முதியோரின் எண்ணிக்கை 1.5 பில்லியனாகும் என்று நம்பப்படுகின்றது. அது மொத்த சனத்தொகையில் 16 சதவீதமாக இருக்கும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ஐ)

## கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த அரசு புதிய திட்டம்

கொழும்பு,ஜன.17
கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தவதற்கு இலங்கை அரசு திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.
கொழும்பு நகரம் மற்றும் நாடாளுமன்றத்தை அண்டிய பகுதிகளில் அண்மையில் அதிகரித்துள்ள ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளால், வாகனப் போக்குவரத்துகள் பாதிக்கப்படுகின்றன.
இந்த நிலையிலேயே, இத்தகைய போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக, ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான இரண்டு இடங்களை வர்த்தமானி மூலம் அறிவிக்க சட்டம் ஒழுங்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.
இந்த வர்த்தமானி அறிவிப்பை உடனடியாக வெளியிடுமாறு, அமைச்சர் சாகல ரத்நாயக்க, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலர் ஜெகத் ஜெயவீரவுக்கு உத்தரவிட்டுள்ளார்.
இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான பின்னர், குறிப்பிட்ட இடங்களில் மாத்திரமே எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# கடமைக்குத் திரும்பாதுள்ள படை விட்டோடிகள் 42,000

### உடன் கைது செய்ய உத்தரவு

கொழும்பு,ஜன.17
இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்ற நிலையில், பொது மன்னிப்புக் காலத்தில் சரணடையாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.
இதற்கமைய, குறித்த இராணுவ வீரர்களைக் கைது செய்வதற்கான அதிகாரம் காவல்துறையிடமும், குடிவரவு குடியகல்வுத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
சுமார் 42 ஆயிரத்து 500 இராணுவ வீரர்கள், பொதுமன்னிப்புக் காலத்தில் இராணுவத்தில் முன்னிலையாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.
எனினும் அறிவிக்கப்பட்ட பொதுமன்னிப்புக் காலத்தில் சரணடையாது இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் களுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.(ஐ)

நுட்பம்



# அன்ரோயிட் 2.0 அதிதிறன் கைக்கடிகாரம் அறிமுகம்

**கூகுள் நிறுவனத்தின் தயாரிப்பாக வெளிவரவுள்ளது**

கூகுள் நிறுவனத்தின் அன்ரோயிட் 2.0 அதிதிறன் கைக்கடிகாரம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் சந்தையில் அறிமுகம் பெறவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கூகுள் நிறுவனம் அன்ரோயிட் 2.0 பதிப்புகளுக்கு ஏற்ப தங்களின் செயலிகளை புதிய தொழில்நுட்ப கூறுகளுடன் மேம்படுத்தி, அதிதிறன் கைக்கடிகாரத்தை சந்தையில் அறிமுகப்படுத்தவுள்ளது. இவை அன்ரோயிட் வியர் 2.0 தனி செயலிகளுக்கும் இயங்குநிலை பெறும் எனவும் அதிதிறன்பேசிகள் இல்லாமலும் இந்த செயலிகளைப் பயன்படுத்த முடிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலே சில தினங்களுக்கு முன்பதாக அன்ரோயிட் 2.0 செயலியைக் கொண்டமைந்த கசியோ டபிள்யு.எஸ்.டி (WSD) எவ்-20 அதிதிறன் கைக்கடிகாரம் வெளிவரவுள்ளதான தகவல் அறிவிக்கப்பட்டிருந்தது. இவை அன்ரோயிட் 2.0 இல் மேம்படுத்தப்பட்ட பயனர் உள் வருகை, ஸ்டாண்ட் அலோன் செயலிகள், ஜெஸ்ட்யூர் தனித்துவ விசைப் பலகை மற்றும் இன்னும் சில புதியதான அம்சங்களைக் கொண்டுள்ளது.

இதற்கு முன்னதாக சம்சங் நிறுவனம் தனது கியர் எஸ் வகை அதிதிறன் கைக்கடிகாரம் மற்றும் ஐ.ஓ.எஸ் இயங்குதளத்துடன் இணைந்து பொருத்தமுற வேலை செய்யக்கூடியதான செயலிகளை அறிமுகம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘கூட்டாண்மை சமூக பொறுப்பு’ திட்டத்தின் கீழ் உபகரணங்கள் கையளிப்பு

*பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி வழங்கி வைத்தது*

கூட்டாண்மை சமூக பொறுப்புத் திட்டத்தின் கீழாக நாட்டின் முழுமையுமாக தெரிவு செய்யப்பட்ட 15 அரச வைத்தியசாலைகளின் சத்திர சிகிச்சை பிரிவுகளுக்கென 24.3 மில்லியன் ரூபாய் தொகை மதிப்புடையதான சத்திர சிகிச்சை உபகரணங்களை பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி அன்பளிப்பாக வழங்கி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 20 வருட சேவை நிறைவைக் கொண்டாடும் விதமாக மேற்படி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான சத்திர சிகிச்சை உபகரணங்கள் கடந்த வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.





வணிகம்

# கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை



“2030ஆம் ஆண்டளவில் இலங்கையை அதிக தனிநபர் வருமானம் ஈட்டும் நாடாக மாற்றுவதே அரசின் நோக்கம்.”



## தேசிய மற்றும் பன்னாட்டு முதலீடுகள் அதிகரிக்கப்படும்

*பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு*

கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்திப் பாதையில் சிறந்த நடைமுறைகளினூடு மேம்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றை அரசு ஆரம்பித்துள்ளதாகவும், அதன்வழியே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி மாறுதலற்ற நிலைபேண்தகு தன்மையை ஏற்படுத்தவுள்ளதான தகவலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


இதன்படி ஜனாதிபதியின் ஆலோசனையுடன், நாட்டை அபிவிருத்திப் பாதையில் பயணிக்கச் செய்வதற்கு அரசு புதிய உத்வேகத்தோடு செயற்படவுள்ளதான தகவலும் அவரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் புதிதாக இணைப்புச் செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வில் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும்,

“தேசிய மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்து அதனூடாக பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசு அடிப்படையான அடித்தளங்களை இட்டுள்ளது. தேசிய கொள்கையின் அடிப்படையில் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான அனைத்து வேலைத் திட்டங்களும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.” எனவும் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

“

பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் சந்தைகள் இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன் திருகோணமலை துறைமுகத்தை இந்தியா மற்றும் ஜப்பானுடன் இணைந்து அவற்றின் அதிக நிதிப்பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



# நினிவேயில் அடிவைத்தது ஈராக் படை

பக்தாத், ஜன. 17
ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூலின் பெரும் பகுதி மீட்கப்பட்ட நிலையில், நினிவே மாகாணத்துக்குள் ஈராக் இராணுவம் துரிதமாக முன்னேறி வருகிறது என்று ஈராக் இராணுவத்தரப்பு தெரிவித்தது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் இருந்தது. கடந்த ஒக்ரோபர் மாதம் நகரை மீட்கும் போரில் அமெரிக்காவின் ஆதரவுடன் களமிறங்கியது ஈராக் அரசு. போர் ஆரம்பித்து சில வாரங்களிலேயே குவையாராப் பெரும்கிராமம், பழைமைகளை உள்ளடக்கிய நிம்ரூட் கிராமம் ஆகியன மீட்கப்பட்டிருந்தன. சில தினங்களுக்கு முன்னர் தைகிரீஸ் நதிக் கரை, மோசூலின் பிறிதொரு அடையாளமான பல்கலை, ஆளுநர் மாளிகை ஆகியன கைப்பற்றப்பட்டன. தற்போது ஈராக் அரச படை நினிவே நகரை மீட்பதற்காக துரிதமாக முன்னேறிச் செல்கிறது என்றும்–நினிவேயின் சில பகுதிகள் மீண்டும் அரச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன என்றும் ஈராக் இராணுவத் தரப்பு தெரிவித்தது. இன்னும் சில நாள்களில் நினிவே மீட்கப்படும் என்ற நம்பிக்கையும் விடுக்கப்பட்டது. (ம–எ)

# ஜெருசலேமில் வேண்டாம் அமெரிக்கத் தூத

ஜெருசலேம், ஜன. 17
இஸ்ரேலில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தை இஸ்ரேலின் தலைநகரான டெல் அவிவில் இருந்து மாற்றி, ஜெருசலேமுக்குக் கொண்டு வருவேன் என்று அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ள நிலையில், இது மிகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்தார் பிரான்ஸ் அயலுறவுத்துறை அமைச்சர் மார்க் ஜெரால்ட்.
பலஸ்தீனத்திடமிருந்து கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்துள்ளது. குறித்த பகுதிகளில் பலஸ்தீனத்தின் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் குடியிருப்புக்களையும் கட்டி வந்தது.
ஆனால், இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு எதிராகவும், பலஸ்தீனத்துக்கு நெருக்கமாகக் கட்டப்படும் குடியிருப்புக்களைக் கண்டித்தும், அதை நிறுத்தவேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்கா காலாகாலமாக இஸ்ரேலுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகிறது. ஆனால், அண்மையில் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தில் நடுநிலைமையைப் பேணியது. அமெரிக்க தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.
ட்ரம்ப்பின் கருத்து கண்டுகொள்ளப்படாமையை அடுத்து, அவர் ஒபாமா அரசுக்கு தனது கண்டனத்தைத்

# நான்கே வயதில் ஆயிரம் புத்தகம்

## சிறுமி நூலகரான கதை

வோஷிங்ரன், ஜன.17
அமெரிக்காவைச் சேர்ந்த டலியா மரி அரானா என்ற 4 வயதுச் சிறுமி ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களை வாசித்து அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளார். இதனையடுத்து அவரை வோஷிங்ரனின் முக்கிய நூலகமொன்று, ஒருநாள் நூலகராக நியமித்து கௌரவப்படுத்தியது.
டலியாவின் தயார் கர்ப்பகாலங்களில் புத்தகங்களை வாசித்தார். இதுவே சிறுமிக்கு வாசிப்பில் அதித ஆர்வம் வர முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. சிறுமியின் இந்த விநோத செயற்பாட்டை அவதானித்த பெற்றோர், சமூக வலைத்தளத்தில் புகைப்படங்கள், காணொலிகளைப் பதிவேற்றியுள்ளனர். இதனையடுத்தே டலியா வெளியுலகுக்கு அறியப்பட்டார். (ம-எ)





மக்கதோனியா நாட்டில் வருடாந்த புனிதர் தினம் க
ஆடைகளை அணிந்து ஏராளமான மக்கள் ஊர்வ

# பிரேஸில் சிறை உயிரிழப்பு 3



ரியோ டி ஜெனிரோ, ஜன.17
பிரேஸில் சிறையில் இடம்பெற்ற கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்தது.
பிரேசிலின் இரண்டாவது பெரிய நகரான ரியோவில் உள்ள மிகப்பெரும் சிறைச்சாலையான நடாலில், நேற்றுமுன்தினம் கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட கலவரத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்வடைந்தது. நேற்றையதினம் 10 கைதிகள் தலைதுண்டித்து உயிரிழந்தனர் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், 20 கைதிகளின் உடல்கள் மீட்கப்பட்டன. உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் கோடிட்டுக் காட்டின. (ம–எ)

# தீபாவின் அறிவிப்பு இன்று

சென்னை, ஜன. 17
எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழா ஆரம்பமாகும் இன்றைய தினம், தனது அரசியல் பயணமும் ஆரம்பமாகும் என்று ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா அறிவித்துள்ள நிலையில், தமிழ்நாட்டு அரசியல் சூழ்நிலை இன்று பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது.
அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளரும், தமிழ்நாட்டின் முதலமைச்சருமாக இருந்த ஜெயலலிதா கடந்த மாதம் உயிரிழந்தார். அவரது சாவை அடுத்து முதலமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் செயற்பட்டு வருகிறார். பொதுச் செயலாளராக ஜெயாவின் நண்பியான சசிகலா பொறுப்பேற்றுள்ளார். ஆனால், சசிகலாவின் தலைமையை அ.தி.மு. கழகத் தொண்டர்கள் சிலர் ஏற்கவில்லை. அவ்வாறு எதிர்க்கருத்தை உடையவர்கள் தீபாவை அரசியலுக்கு வரும்படி, அவரது வீட்டுக்கு முன்பாகத் திரண்டு கோசமிட்டு வருகின்றனர். தீபாவும் அரசியலுக்கு வர முடிவெடுத்தார். இது தொடர்பான முக்கிய அறிவிப்புக்களை இன்று வெளியிடுவேன் என்று அவர் அறிவித்தார். இதனால் இன்றையதினம் பலரதும் பார்வை தீபாவின் பக்கம் சென்றுள்ளது. (ம–எ)



# தென்சீனக் கடல்

வொஷிங்டன், ஜன. 17
தென்சீனக்கடல்பகுதியில் முறுகல்தன்மை முற்றுகின்ற நிலையில் உள்ளது. இவ்வாறிருக்க, சம்பந்தப்பட்ட நாடுகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்தது அமெரிக்கா. தென்சீனக் கடல் பகுதியை சீனா உரிமை கோரி வருகிறது. பிலிப்பைன்ஸ், வியட்நாம், ஜப்பான், மலேசியா, தைவான்,
புரூனே பே
பகுதிக்கு செ
பிலிப்பைன்
ஆதரவாக
வருகிறது. இ
சீனாவுக்கும்
கள் உள்
தென்சீனக்

# ...தூதரகம்; பிரான்ஸ் அயலுறவுத்துறை அமைச்சரின் கருத்து

...க்கு
...து.
...ாடு
...தில்
...து.
...அதி
...மா
...ண்
...ந்

...ாப்
...மா
...த்



தெரிவித்தார். 20 ஆம் திகதிக்குப் பின்னர் (ட்ரம்ப் பதவியேற்றதன் பின்னர்) காட்சிகள் மாறும், ஜெருசலேமில் அமெரிக்கத் தூதரகம் அமைக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே அங்கு தூதரகம் அமைக்கக்கூடாது என்று ஜெரால்ட் கருத்துப் பகிர்ந்தார்.

டொனால்ட் ட்ரம்ப்பின் இந்த முடிவு மோசமான விளைவுகளை உருவாக்கும். ட்ரம்பின் இந்த பிடிவாதமான முடிவை அவர் நிறைவேற்ற முடியாது என்பதை உணரவேண்டும். இஸ்ரேல்- பலஸ்தீனம் இடையே ஏற்கனவே உள்ள பிரச்சினையைத் தீர்க்க 70 நாடுகள் முன்வந்துள்ளன. அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ள உங்களால், இந்தப் பிரச்சினையில் பிடிவாதமாக ஒருதலைப்பட்சத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. இஸ்ரேல்- பலஸ்தீனம் இடையே அமைதியை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் என ஜெரால்ட் மேலும் தெரிவித்தார். (ம)



...னம் கடந்த வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. பயங்கரமான தோற்றமுடைய ... ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (ம-எ)


## வீழ்ந்து நொறுங்கியது விமானம் 30 பேர் உடல் சிதறி உயிரிழப்பு

அங்காரா, ஜன. 17

துருக்கிக்குச் சொந்தமான பலசரக்கு விமானம், கிரிகிஸ்தான் எல்லையில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்தனர். துருக்கியில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் கிரிகிஸ்தானின் மனஸ் விமான நிலையத்தில் தரையிறக்க முற்பட்ட வேளையில் இந்த விபத்து இடம்பெற்றது. மூடுபனியே விபத்துக்குக் காரணம் என்று முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திலேயே 30 பேர் உடல்சிதறி உயிரிழந்தனர். படுகாயங்களுடன் பலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)



# ...றையில் கலவரம்; ...30ஆக உயர்வு





## உலகின் பாதியளவு மக்களின் சொத்துக்கள் 8 செல்வந்தர்களிடம் குவிந்துள்ளன

வொஷிங்ரன், ஜன. 17

உலகின் பாதியளவு சனத் தொகையான 3.6 பில்லியன் மக்களின் சொத்துக்களை விட அதிகமான சொத்துக்களை 8 செல்வந்தர்கள் கொண்டுள்ளனர் என்று ஒக்ஸ்பேம் என்ற நிறுவனத்தின் ஆய்வில் வெளிப்பட்டது. பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார் பில்கேட்ஸ். அவர், 75 பில்லியன் டொலர் சொத்துக்களைக் கொண்டுள்ளார். ஏனைய ஏழ்வரில் அமெசன் இணைய உரிமையாளர் ஜெப் பெசோஸ், முகநூல் உரிமையாளர் மார்க் சுகர்பேக் ஆகியோர் உள்ளடங்குவர்.

சமத்துவமற்ற பொருளாதாரத்துடன் மில்லியன் கணக்கான மக்கள் ஏழ்மையில் வாழ்ந்து வருகின்றமை ஜனநாயகத் துக்கு முரணானது என்று ஆய்வு நடத்திய நிறுவனம் தெரிவித்தது. (ம-எ)

# ...ல் விவகாரச் சர்ச்சை: பேச்சுக்கு அமெ. அழைப்பு

...ன போன்ற நாடுகளும் குறித்த ...கு சொந்தம் கொண்டாடுகின்றன. ...பைன்ஸ், ஜப்பான் இரண்டுக்கும் ...வாக அமெரிக்கா குரல் கொடுத்து ...றது. இதனால் அமெரிக்காவுக்கும், ...வுக்கும் இடையில் கருத்து மோதல் ...உள்ளன. இந்த நிலையில் ...சீனக் கடல் பகுதியில் சுத்தமான எரிசக்தியை உருவாக்கும் பொருட்டு 5 ஆண்டுகள் திட்டம் முன்னெடுக்கவுள்ளதாக சீனா கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தது. முன்னதாக டிசெம்பர் மாதம் இறுதிப் பகுதியில், லியோனிங் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் மற்றும் 5 போர்க் கப்பல்களைத் தென்சீன கடல் பகுதிக்கு சீனா அனுப்பி



போர்ப் பயிற்சி மேற்கொண்டது. இவை அந்தப் பகுதியில் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ள நிலையில், சம்பந்தப்பட்ட நாடுகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது ஒபாமாதலைமையிலான அமெரிக்க அரசு. ஒபாமாவின் ஆட்சிக் காலம் நாளைமறுதினம் முடிவடையவுள்ளது. இதனால் பேச்சுவார்த்தையென்பது சாத்தியமற்றது என்றே பொதுவான கருத்துக்கணிப்பு நிலவுகிறது. (ம-எ)



## ட்ரம்புக்கு எதிர்ப்பலை

லண்டன், ஜன. 17

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பதவியேற்கவுள்ள நிலையில், அன்றைய தினம் அவருக்கு எதிராக 370 இடங்களில் பேரணிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டன. லண்டனின் கிறஸ்வெள்னர் 14 ஆயிரம் பெண்களின் பங்குபற்றலுடன் பேரணி ஒன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் 370 இடங்களில் பேரணிகள் நடத்தப்படவுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ம-எ)

## கடற்கொள்ளை... கொல்லப்படுவர்

### டுடேர்தே முழக்கம்

மனிலா, ஜன. 17

கடற்கொள்ளையர்களை கு... வைத்துகொல்ல உத்தரவிட்டு... என்று தெரிவித்தார் பிலிப் பைன்ஸ் ஜனாதிபதி றொட்றிக்கோ டுடேர்தே. பிலிப்பைன்ஸ் கடற்பரப்பில் கொள்ளைச் சம்பவங்களும், ஆள்கடத்தல்களும் மிகவும் அதிகரித்துச் செல்கின்றன. பிணையக் கைதிகளாகப் பிடித்துச்செல்வதும், மக்கள்கடலுக்குள் சுட்டுக் கொல்லப்படுவதும், அவ்வப்போது நடப்பவையாயிற்று. இந்த நிலையிலேயே டுடேர்தே இவ்வாறு தெரிவித்தார்.

கடற்கொள்ளையர்களின் அட்டகாசம் பிலிப்பைன்ஸ் கடற் பரப்புக்குள் அதிகரித்து வருகிறது. அவர்களின் திட்டத்துக்கு இலக்காக வேண்டாம். கடற்கொள்ளை, ஆள்கடத்தல் ஆகியவற்றில்ஈடுபடுபவர்கள் இரக்கமின்றி கொல்லப்படுவர் என டுடேர்தே மேலும் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் அரசுக்கு கடந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் மாத்திரம் 7.3 மில்லியன் டொலர் அளவுக்கு பிணைத் தொகை செலுத்துமாறு மிரட்டல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

## 35 இடங்களில் சீறிப் பாய்ந்தன காளைகள்

ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தபோதிலும், கடந்த மூன்று நாள்களில் 35 இடங்களில் ஜல்லிக்கட்டு இடம்பெற்றது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்திய மத்திய அரசு தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை தடை செய்துள்ளது. தடையை நீக்க வலியுறுத்தி தமிழ்நாடெங்கம் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. பொங்கல் திருநாளில் ஜல்லிக்கட்டு நடத்தப்படலா... என்றும்–அதைத் தடுப்பதற்காகவு... பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனாலும், சில அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் சில இடங்களில் ஜல்லிக்கட்டுக்கள் நடந்தன. இதன்படி பொங்கலுக்கு முதல் நாள், பொங்கலன்று, பொங்கலுக்கு ... என்று மூன்று நாள்க... 35 இற்கு மேற்பட்ட இடங்க... ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது ... ...யானபோட்டி ... ...ம் என்று இந்திய ஊட... ...வெளியிட்டன. (ம-எ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வறட்சியை எதிர்கொள்ளத் தயாராவோம் அனைவரும்

கடும் வறட்சி 40 வருடங்களின் பின்னர் இலங்கையைத் தாக்கியிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாகத் திடீரென அதிகம் பெய்த மழையால் பாதிக்கப்பட்டிருந்த நிலை மாறி, இப்போது வறட்சியின் கொடுமையால் பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

இயற்கையுடன் மனிதன் ஆடிய விளையாட்டின் விளைவை இப்போது அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறோம். சுற்றுச்சூழல் அக்கறையற்று சுயநலத்துடன் நடந்துகொண்டதன் விளைவு அது. இந்தப் பருவநிலைப் பாதிப்புகளுக்கு எல் நினோ, லா நினாதான் காரணம் என்று வளிமண்டலவியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். பசுபிக் பெருங்கடலில் வெப்பநிலை கூடிக்குறையும்போது, அது வானிலையில் பெரும் மாற்றங்களை உண்டாக்குகிறது. அதுவே பருவநிலை மாறுதல்களுக்கு வழிவகுக்கிறது.

கடந்த வருடம் கடும் மழை வீழ்ச்சியை எதிர்கொண்டதன் பின்னர், இந்த வருடத்தில் கடும் வறட்சியைச் சந்திக்கவேண்டி வரும் என்று சுற்றுச் சூழலியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். குறிப்பாக, 2015 டிசெம்பர் மாதம் சென்னையைக் கடுமையான வெள்ளம் தாக்கியதன் பின்னர் தெற்காசிய நாடுகளின் காலநிலை குறித்து எதிர்வுகூறிய ஆய்வாளர்கள் இந்த வருடத்தில் வறட்சி தாக்கும் அபாயம் குறித்து எச்சரித்திருந்தனர்.

எனினும், நாடும், அரசும், மக்கள் தரப்பும் அதனை எதிர்கொள்வதற்கு எந்தவகையில் தயார்ப்படுத்திக்கொண்டன என்பதன் லட்சணம் இப்போது தெரிகின்றது. ஏற்கனவே மூன்றிலொரு பகுதி நெல்வயல்கள் கருகி நாசமாகிவிட்டன. எஞ்சியிருக்கும் பயிரைக் காப்பாற்றுவதற்காக நிலத்தடி நீரை உறிஞ்சி இழுக்கும் கைங்கரியத்தை இப்போது ஆற்றி வருகின்றோம். இன்னும் சில வாரங்களுக்கு வறட்சி நீடித்தால், அனேகமாக மானாவாரிப் பயிர்கள் அனைத்தும் அழிந்துவிடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்டதொரு நிலையில், நிலத்தடி நீரை உறிஞ்சி வயல்களுக்குப் பாய்ச்சுவது சரியான நடவடிக்கைதானா என்கிற கேள்வி ஒருபுறமிருக்க, மீண்டும் மீண்டும் சுற்றுச்சூழல் அக்கறையற்ற செயற்பாடுகளிலேயே நாம் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருப்பது நல்லதல்ல என்கிற எச்சரிக்கை உணர்வும் உந்துகிறது.

வடக்கில் உள்ள குளங்களையும், ஏரிகளையும், குட்டைகளையும், தூர்வாரி ஆழமாக்கித் தண்ணீரைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற காட்டுக்கத்தல் எவர் காதிலும் ஏறியதில்லை. அவற்றை ஆழமாக்கியிருந்தால், இன்னும் சில வாரங்களுக்கு வறட்சியைத் தாக்குப் பிடித்திருக்கலாம். ஆனால் செய்யத் தவறிவிட்டார்கள். வடக்கு மாகாணத்துக்கு அரசு ஒன்று கிடைத்த பின்னரும்கூட, விவசாய அமைச்சு ஒன்று இருக்கின்றபோதும்கூட, சுற்றுச்சூழலில் அக்கறை கொண்ட ஒருவர் அதன் அமைச்சராக இருக்கின்றபோதும்கூட இந்த விடயத்தில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டதாகச் சொல்லிவிட முடியாது. ஒரு சில குளங்கள் மறுசீரமைக்கப்பட்டன.

பெரும்பாலான குளங்கள் மாகாண சபைக்குக் கீழே வருவதில்லை. அவை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், தங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை என்று காரணம் கூறப்படுகிறது. ஆனால், வடக்கில், மத்தி மற்றும் மாகாண அரசுகள் எதுவாகினும், இருக்கும் அதிகாரிகளில் மிகப் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த விடயத்தில் மக்கள் நலன் கருதிச் செயற்பட்டிருக்க முடியும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

அதிகாரிகளை மட்டும் குறைகூறிப் பயனில்லை. மக்களாகிய நாமும் அப்படித்தான். குளத்தைக்கண்டால் குப்பையைக் கொட்டுவதிலேயே குறியாக நாம் இருக்கும்வரை, வறட்சியையும், வெள்ளப் பெருக்கையும் தாங்கித்தான் ஆகவேண்டும்.

இனியாவது விழித்துக்கொள்வோமாக இருந்தால், கொஞ்சமாகவது வறட்சிப் பாதிப்பிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். எதுவுமே செய்யாமல் இருப்பதைவிட, தாமதமாகச் செய்வதாவது நல்லது என்ற அளவில், இப்போதாவது வறட்சியை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையில் அனைவரும் ஒன்றுபட்டு ஈடுபடுவது அவசியம். இழப்பீடுகளால் மட்டும் எல்லாமும் சரியாகிவிடாது.

மின்பாவனையை இயலுமான வரை குறைப்பது, அவசியம் இல்லாமல் தண்ணீரைப் பயன்படுத்தாதிருப்பது, தேவைக்கதிகமாக பொருள்களை வாங்கிப் பதுக்கித் தட்டுப்பாட்டை ஏற்படுத்தா திருப்பது என்று ஒவ்வொருவருமே வறட்சியை எதிர்கொள்வதற்குப் பங்களிக்க முடியும். அதனைச் செய்ய முன்வருவோமே!

# உறுதிகளின் மீதான முத்திரை வரியும் வடக்கு மாகாண சபையும்

ந.சதாசிவ ஐயர்

வடக்கு மாகாண சபையானது, உறுதிகளின் மீதான மாகாண சபைகளுக்கான முத்திரை வரியை, நியாயமான முறையில் அறவிட நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது தொடர்பான விளக்கமளிக்கும் கருத்தரங்கும் அண்மையில் நடைபெற்றது. இது ஒரு புதிய நடைமுறை. இதன் மூலம் மாகாண சபை பெரும் வருமானத்தை ஈட்டுகிறது. உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிறைவான நிதி கிடைக்கின்றது. பாதைகள் போடலாம், பாலம் கட்டலாம் எனச் சொல்லப்படுகிறது. ஆனால் இது பலவருடங்களுக்கு முன்பிருந்தே நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இந்த வருமானத்தை, உள்ளூராட்சிச் சபைகள் 1988 முதல் பெற்று வருகின்றன. இடையிடையே சில இடர்கள். அதற்கும் நாம் தான் காரணம் என்பதை யாவர்க்கும் தெளிவுபடுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

> வடக்கு மாகாண சபை உருவாகிய பின்னர் அது தனக்கென நிறைவேற்றிய நியதிச் சட்டத்துக்கமைய 2015 ஜூலை முதல் வடக்கு மாகாண சபைக்கென மக்கள் வங்கியில் இதற்கெனத் திறக்கப்பட்ட கணக்கின் மூலம் முத்திரைவரி சீராக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், 1979 முதல் மாநகர மற்றும் நகர சபைகளும், 1988 முதல் பிரதேச சபைகளும் முத்திரை வரியைப் பெற்றே வந்துள்ளன. முதலாவதாக 2002 முதல் 2006 வரைமுத்திரைவரியை உள்ளூராட்சி சபைகள் இழந்துள்ளன. இரண்டாவதாக 2010 முதல் 2015 ஜூன் வரை முத்திரை வரி அறவிடப்பட்டபோதும், உள்ளூராட்சிச் சபைகளுக்கு மீளளிக்கப்படவில்லை.

### சகல உள்ளூராட்சி சபைகளும் முத்திரை வரிக்கு உரித்துடையவையே

உறுதிகள் எழுதப்படும்போது அதில் குறிப்பிடப்படும் கிரயம் மற்றும் பெறுமதிக்கமைவாக மத்திய அரசால் நியமிக்கப்பட்டவாறு முத்திரைவரி செலுத்தப்படல் வேண்டும். இந்த முத்திரை வரியானது, ஆரம்பத்தில் அரச வருமானமாக (திறைசேரிக்கு) அரச நிதிக்கு வரவு வைக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாநகரசபை மற்றும் நகரசபை எல்லைகளுக்குள்ளான காணிகள் தொடர்பில் எழுதப்படும் உறுதிகள் தொடர்பிலான முத்திரை வரி, பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் தயாரிக்கப்படும் பட்டியல்களுக்கமைவாக அந்தந்த மாநகர சபைகளுக்கும், நகர சபைகளுக்கும் திறைசேரியால் மீளளிக்கப்பட்டு வந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்த சபைகளும், இதனைப்பெற்று வந்தன.

பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பிரதேச சபைகள் சட்டத்தின்படி, இந்த முத்திரை வரியானது பிரதேச சபைகளுக்கும் உரித்தானது. அது முதல் இலங்கையின் ஏனைய பிரதேசசபைகள்போல் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பிரதேச சபைகளும் அவற்றைப் பெற்று வந்தன.

இந்தச் செயற்பாட்டின்படி, முத்திரைத்தீர்வையை நடுவண் அரசே தீர்மானிக்கின்றது. நடுவண் அரசைச் சேர்ந்த பதிவாளர் நாயகம் திணைக்கள ஆவணங்கள் மீதே, முத்திரை வரி செலுத்தப்படுகிறது. பதிவாளர் நாயகம் திணைக்களமே அதனை மேற்பார்வை செய்து பட்டியல் தயாரித்துக் கொடுப்பனவுக்காக ஆவன செய்கிறது.

ஆயினும் மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட பின்னர், அவை உருவாக்கும் நியதிச் சட்டத்துக்கமைய இந்த முத்திரைக்கட்டணம் நேரடியாக மாகாண சபையால் மக்கள் வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இதற்கான தனியான கணக்குக்கு வரவுவைக்கப்படும். ஆயினும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படும் பட்டியலுக்கு அமைவாகவே அந்தந்தப் பிரதேசசபைகளுக்கு மீளளிக்கப்படும். இதுவே சகல மாகாணங்

களினதும் பொதுவான நடைமுறையாகும். தவிர முத்திரைக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் அதிகாரமேதும் மாகாணசபைகளுக்கு இல்லை. காணிமாற்றம் தவிர்ந்த ஈடு, ஒற்றி, வாடகை போன்ற ஏனைய முத்திரைக் கட்டணங்கள் மத்திய அரசுக்கு உரியதாகும்.

வடக்கில் மாகாண சபை ஆரம்பிக்கப்படாத முன்னைய காலங்களில், உள்ளூராட்சி சபைகளுக்கு திறைசேரியிலிருந்து பதிவாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்படும் பட்டியலுக்கமைவாக நேரடியாக மீளளிப்பு நடைபெற்றே வந்தது. ஆனால், 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது, இலங்கையில் மாகாணசபை அமைக்கப்படாத வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உள்ளன என்பதை மத்திய அரசு கவனத்தில் கொள்ளத்தவறியதால், வடக்கு கிழக்கைப்பற்றி முடிவேதும் செய்யாததால், வடக்கு, கிழக்கில் உறுதிகள் மீதான முத்திரைவரி கேள்விக்குள்ளாகி, செலுத்தத் தேவையில்லை எனும் நிலை உருவானது. இது தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதும், அவை செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே அமைந்தன. இறுதியில் ஒருவாறு 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை வரி விசேட ஏற்பாடுகள் மூலம் மீண்டும் வடக்கு, கிழக்குக்கென தனியாக குறிப்பிட்ட வங்கிக் கணக்குக்கு செலுத்தும் முறை உருவாகியதுடன், உள்ளூராட்சி மன்றங்களுக்கான மீளளிப்பும் தொடர்ந்து செய்யப்பட்டது. ஆயினும் 2010 இல் கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டதும், மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது. வடக்கை மறந்த திறைசேரியால், வடக்கில் முத்திரை வரி அறவிடப்பட்டபோதும், மீளளிப்புச் செய்வது நிறுத்தப்பட்டது.

ஆயினும் வடக்கு மாகாணசபை உருவாகிய பின்னர், அது தனக்கென நிறைவேற்றிய நியதிச் சட்டத்துக்கமைய 2015 ஜூலை முதல், வடக்கு மாகாணசபைக்கென மக்கள் வங்கியில் இதற்கெனத் திறக்கப்பட்ட கணக்கின் மூலம் முத்திரைவரி சீராக அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், 1979 முதல் மாநகர மற்றும் நகர சபைகளும், 1988 முதல் பிரதேச சபைகளும் முத்திரை வரியைப் பெற்றே வந்துள்ளன. முதலாவதாக 2002 முதல் 2006 வரை முத்திரை வரியை உள்ளூராட்சிசபைகள் இழந்துள்ளன. இரண்டாவதாக 2010 முதல் 2015 ஜூன் வரை முத்திரைவரி அறவிடப்பட்ட போதும், உள்ளூராட்சி சபைகளுக்கு மீளளிக்கப்படவில்லை. (இதனை மீளப்பெற வடமாகாணசபை உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது) 2015 ஜூலை மாத முதல் மாகாண சபையூடாக ஒழுங்காகப் பெற்று வருகின்றன.

கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டு இரண்டு மாதத்துக்குள் நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு முத்திரைவரி மாகாணக் கணக்குக்கு வைப்பிடும் நடைமுறை உருவாக்கப்பட்டது. ஆனால் வடக்கில் இதற்கு வருடக்கணக்கில் தேவைப்பட்டது. 2015 இன் ஆரம்பத்திலே வடக்கு மாகாண இறைவரி அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு, அவ்வாண்டு ஜூலை மாதம் முதலே இந்த நடைமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு, முத்திரை வரி மாகாணசபைக்கு வரவு வைக்கக் கூடியதாக இருந்தது.

“
வடக்கில் மாகாண சபை ஆரம்பிக்கப்படாத முன்னைய காலங்களில் உள்ளூராட்சிச் சபைகளுக்கு திறைசேரியிலிருந்து பதிவாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்படும் பட்டியலுக்கமைவாக நேரடியாக மீளளிப்பு நடை பெற்றே வந்தது. ஆனால், 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, இலங்கையில் மாகாண சபை அமைக்கப்படாத வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உள்ளன என்பதை மத்திய அரசு கவனத்தில் கொள்ளத்தவறியதால், வடக்கு கிழக்கைப் பற்றி முடிவேதும் செய்யாததால், வடக்கு, கிழக்கில் உறுதிகள் மீதான முத்திரைவரி கேள்விக்குள்ளாகி, செலுத்தத் தேவையில்லை எனும் நிலை உருவானது. இது தொடர்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதும், அவை செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகவே அமைந்தன. இறுதியில் ஒருவாறு 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை வரி விசேட ஏற்பாடுகள் மூலம் மீண்டும் வடக்கு, கிழக்குக்கென தனியாக குறிப்பிட்ட வங்கிக் கணக்குக்கு செலுத்தும் முறை உருவாகியதுடன், உள்ளூராட்சி மன்றங்களுக்கான மீளளிப்பும் தொடர்ந்து செய்யப்பட்டது. ஆயினும் 2010இல் கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டதும், மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது.

### முத்திரை வரியை முறையாக அறவிடும் வடக்கு மாகாண இறைவரித் திணைக்களம்

எது எப்படியிருப்பினும், வடக்கு மாகாண இறைவரித்திணைக்களம் இந்த முத்திரை வரியை காலம் தவறாது, சீராக, சரியாக, அறவிட நடவடிக்கை எடுத்துள்ளமை, பாராட்டத்தக்கது. இந்த முத்திரைக் கட்டணமானது, உள்ளூராட்சி சபைகளுக்கு எதிர்காலத்தில் சீராக நிரந்தரமான ஒரு வருமானமாக கிடைக்கவுள்ளது. வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகமும், முக்கியமாக மாகாண இறைவரித்திணைக்களமும் முக்கியமாக பதிவாளர் நாயக திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இதில் மிகுந்த அக்கறையோடு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இதனால் உள்ளூராட்சிச் சபைகள் தடையற்ற நிதி வருமானத்துடன் தமது எதிர்கால வேலைத்திட்டங்களை திட்டமிட்டுச் செய்யமுடியும்.

**பதிவாளர் நாயகம் திணைக்களம்,** காலத்தின் தேவைக்கேற்ப நவீனத்துவமான முறையில் உறுதி தொடர்பாக உரித்துப்பதிவு, இலத்திரனியல் பதிவு முறை என்பவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது. பரீட்சார்த்த பதிவு முறைகள் இலங்கையில் ஐந்து அலுவலகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் யாழ்ப்பாணம், மன்னார் அலுவலகங்கள் உள்ளடங்கியுள்ளன. இந்த நடவடிக்கைகளின் காரணமாக முத்திரைவரி அறவிடலும், எதிர்காலத்தில் நவீனமயப்படும் வாய்ப்புள்ளது.

### நாம் செலுத்தும் முத்திரை வரியால் எமது பிரதேசமே பயனடைகிறது

நாம் செலுத்தும் வரி, எமது பிரதேசத்துக்கே நலம் சேர்க்கும் என்பதால், முத்திரைவரியை உரிய முறையில் கணக்கிட்டுச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குதல் பிரசித்த நொத்தாரிசுமார் மற்றும் பொதுமக்களது கடமையாகும். முத்திரைவரி வருமான இலக்கை அடுத்த ஆண்டு 1000 மில்லியனாக மேம்படுத்த உள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் குறிப்பிட்ட தாக பத்திரிகை வாயிலாக அறியமுடிந்தது. முத்திரைவரி வருமானமானது, பங்குச்சந்தை போன்றது.

அது நாட்டின் நிலைமைக்கேற்ப ஏறும் இறங்கும். அதனை எம்மால் தீர்மானிக்கமுடியாது. உதாரணமாக 2012இல் வெளி நாட்டவர்களுக்கு காணி விற்க முடியாது என அரசு மேற்கொண்ட தீர்மானத்தால், முத்திரைவரியில் கணிசமான இறக்கம் ஏற்பட்டது. இதனை நீக்கினால் வடமாகாணத்தில் புலம்பெயர்ந்தோர் காணி கொள்வனவு செய்ய முடியும். அதனால் முத்திரை வரி அதிகரிக்க வாய்ப்புண்டு. அதேபோல் வடக்கில் அமைதியான சூழலும், நல்ல நிர்வாகமும், ஒற்றுமையான பலம் வாய்ந்த தமிழர் தரப்பும் இருந்தால், தொழிற்சாலைகளும் கைத்தொழில், கமத்தொழில் பெருகவும். அதனால் காணி மாற்றம் அதிகரிக்கவும், காணிகளின்பெறுமதி கூடவும் வாய்ப்புண்டு. இலங்கையில் எழுதப்படும் உறுதிகள் தொகையின் அடிப்படையில் பார்த்தால் இலங்கை யில் உள்ள 45 காணிப் பதிவகங்களில் யாழ்ப்பாணம் காணிப்பதிவகம் 11ஆம் இடத்தில் உள்ளது. வடக்கில் உள்ள ஏனைய 5 காணிப் பதிவகங்களும் 40ஆம் இடத்துக்குப் பின்தான் உள்ளன. ஆதலால் முத்திரைவரி சரியாக கணக்கிடப்படுகிறதா என்பதில் அக்கறைகாட்டி முறையான வருமான அதிகரிப்பைப் பெறக்கூடியதாக்கலாம்.

அதே நேரத்தில், எடுத்த எடுப்பில் கயிற்றை இறுக்கிப் பிடிக்காமல், விழுந்து எழும்பியிருக்கும் மக் களை நோகச் செய்யாமல் பார்த்துக் கொள்வதுடன், வடக்கில் முதலிடுபவர்களின் முக்கியமாக, சிறு முதலீட்டாளர்களின் மனம் சலிக்காமலும், வடக்கு மாகாண சபையின் அதிகாரிகள் முக்கியமாக, மாகாண இறைவரி ஆணையாளர் மற்றும் அரசியல் வழியில் மாகாண நிதிக்குப் பொறுப்பான முதலமைச்சரும் பார்த்துக் கொள்வர் என் நம்புவோம்.

■



# வாசகர் திருமுகம்

## பொருத்துவீடும், இரும்பு இதயம் படைத்த அமைச்சரும்

ஐயா, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடக்கைத் தவிர வேறு எந்த மாவட்டத்திலும் இந்தப் பொருத்துவீட்டுத் திட்டக் கதை இல்லை. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வாரம் ஒரு வீட்டுத் திட்டத்துக்கு அமைச்சர் சஜித் பிரேமதாச அடிக்கல் நட்டு வருகிறார். இந்தப் பொருத்துவீடுகளை அங்குள்ள மக்களுக்கு அமைத்துக் கொடுக்க என்ன தடை?மீள்குடியேற்ற அமைச்சருக்கு வல்லமை இருந்தால் அங்கும் இதைச் செயற்படுத்தலாமே? அங்கே இந்தத் திட்டத்தைக் கொண்டு சென்றால், மீள்குடியேற்ற அமைச்சரது அமைச்சுப் பதவியே பறிபோய்விடும் நிலை ஏற்படலாம். எனவே இந்த இதயமற்ற அமைச்சர் அவற்றைத் தமிழர் தலைகளில் சுமத்த முயற்சிக்கிறார். இத்தகைய தமிழ் அரசியல்வாதிகள் தமிழினத்தைப் பீடித்துள்ள சாபக் கேடே.

*தே.மாயன், கிளிநொச்சி*

## இலவச வைத்திய சிகிச்சை வாய்ப்பு பெறுமதி மிக்கது

யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில், கண்வில்லை பொருத்தப் பரிந்துரைக்கப்படும் நோயாளர்களில் ஒரு தொகையினர், தமக்கான கண் வில்லைகளை வெளியில் பணம் செலுத்திப் பெற்று வைத்தியசாலையில் ஒப்படைக்கக் கோரப்படும் வழக்கம் நடைமுறையிலுள்ளது.

கண்வில்லை பொருத்துவதற்காக வட மாகாணத்தின் சகல மாவட்டங்களிலிருந்தும் பெருந்தொகையான நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நிலையில், சுகாதார அமைச்சால் நோயாளர்களுக்கு இலவசமாகப் பொருத்தவென மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கண்வில்லைகள் விநியோகிக்கப்படுவதால் வசதி குறைந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவசமாகக் கண்வில்லைகள் பொருத்தப்படுவதாகவும், ஏனையோர் பணம் செலுத்திக் கண் வில்லைகளை வாங்கித் தருமாறும் கோரப்படுவதாகக் கூறப்படுகிறது.

அத்தகைய நடைமுறையைத் தடைசெய்யச் சுகாதார அமைச்சு தீர்மானித்திருப்பதாக அறிவித்திருப்பதன் மூலம், இனிவரும் காலத்தில் கண் வில்லைகள் பொருத்திக் கொள்ள வேண்டிய நோயாளர்கள் எத்தகைய செலவுமின்றி அவற்றைப் பொருத்திக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுவரென நம்பலாம்.

*ப.பிரதீபன், கைதடி*



### மாற்றம்

நாம் மனிதர் என்ற முறையில், எங்கள் திறன் உலகை மாற்றி அமைப்பதில் தங்கியிருக்கின்றது - நாங்கள் உலகில் விரும்பும் மாற்றத்தை, நாங்களே வாழவேண்டும்

*- மகாத்மா காந்தி*



## அன்போடு பழகிடு

அன்போடு பழகிடு
ஆசானை வணங்கிடு
இயற்கையை விரும்பிடு
ஈகைக் குணம் கொண்டிடு
உறவினரை மதித்திடு
ஊருக்கு உதவிடு
எளிமையாக வாழ்ந்திடு
ஏறு நடை நடந்திடு
ஐயம் அகற்றிடு
ஒற்றுமையை வளர்த்திடு
ஓடி விளையாடிடு
ஔவை மொழியைப் பயின்றிடு



## அறிவாற்றல் எம்மைக் காப்பாற்றும்

அடர்ந்த காட்டுப் பகுதியில் குளம் ஒன்று இருந்தது. அந்தக் குளத்தில் மீன்களும் ஒரு நண்டும் நெருங்கிய நட்புடன் வாழ்ந்து வந்தன. குளத்தின் அருகே கழுகு ஒன்றும் வாழ்ந்து வந்தது. அந்தக் கழுகுக்குப் பல நாள்கள் உணவு கிடைக்காமல் தவித்தது. ஒவ்வொரு முறையும் வேட்டையாட முயற்சிக்கும்போது அதனுடைய இறக்கைகள் வேகமாக இயங்குவதில்லை.

குளத்தில் உள்ள மீன்களைப் பார்த்தது. கழுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. அருகிலிருந்த பாறையின்மேல் அமர்ந்தது. அதைப் பார்த்த மீன், "என்ன நிகழ்ந்தது கழுகாரே? ஏன் சோகமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டது. "எனதருமை மீனே, நான் துயரம் தரக்கூடிய தகவலைக் கேட்டேன்" என்றது.

கழுகாரே, என்ன கேள்விப்பட்டீர்கள், கூறுங்கள்" என்றது மீன். கழுகு தயக்கத்துடன், "இனிமேல், எமது வாழிடத்தில் மழை பொழியாது; வறட்சி ஏற்பட்டுக் குளம் வற்றிப்போகுமாம். ஒவ்வோர் உயிருக்கும் தண்ணீர் முக்கியமல்லவா? இந்தக் குளம் தண்ணீர் இல்லாமல் வற்றிப்போனால் நீங்கள் இறந்து விடுவீர்கள்" என்றது.

"நாங்கள் என்ன செய்வது கழுகாரே?" என்று கேட்டது மீன். "இந்த இடத்துக்கு அருகேயே ஓர் ஏரி உள்ளது. அது ஒருபோதும் வற்றாது. என்னுடைய அலகால் ஒவ்வொரு மீனாகக் கொண்டுபோய் அந்த ஏரியில் விடுகிறேன்," என்றது கழுகு. அடுத்த நாள் முதல் கழுகு தினமும் ஒரு மீனைத் தன்னுடைய அலகால் கொத்திக்கொண்டு செல்வதுபோல் தின்று வந்தது.

ஒருநாள் நண்டு, "கழுகாரே என்னையும் அங்கு அழைத்துச் செல்லுங்கள்" என்றது. கழுகு சம்மதித்தது. நண்டை முதுகில் தூக்கிக் கொண்டு பறந்து கொண்டிருந்தபோது பாறைகளின் அருகே மீன்களின் எலும்புகள் கிடப்பதை நண்டு பார்த்தது.

தன் நண்பர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்டது. உடனே, தன்னுடைய கூரிய கொடுக்குகளினால் கழுகின் கழுத்தை இறுக்கிப் பிடித்தது. வலி தாங்க முடியாத கழுகு நண்டைக் கீழே போட்டுவிட்டுப் பறந்தது.

*நீதி - அறிவாற்றல் எந்தச் சூழ்நிலையிலும் காப்பாற்றும்*



## வரலாற்றில் இன்றைய தினம்

1994 - சூரியகந்த புதைகுழி பூரண விசாரணை நடத்த அமெரிக்க அரசு வலியுறுத்து.

1995 - ஜப்பானில் பூகம்பம் 1600 பேர் சாவு. வானுயர் கட்டடங்கள் புதையுண்டன. 4 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயம். 7.2 றிக்டர் அளவில் பூகம்பம்.

2004 - பொங்கு தமிழ் 3ஆம் ஆண்டு நினைவு பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெற்றது.

2008 - பயணிகள் பஸ் மீது கிளைமோர் தாக்குதல் மொனறாகல புத்தல பகுதி தாக்குதலுக்கு பன்னாடுகள் கண்டனம்.

2009 - வன்னி மக்களின் பாதுகாப்புக்கு அமைதி வலயங்கள் உடன் தேவையென ஜனாதிபதியிடம் ஆயர்கள் கூட்டாக வலியுறுத்து.


- முரசுமோட்டையில் மீட்கப்பட்ட சிப்பாய்க்கு சத்திரசிகிச்சை அவசியம் என மருத்துவர் சத்திய மூர்த்தி ஏற்பாட்டுக்குக் கோரிக்கை.

2016 - 13ஆவது திருத்தத்தைத் தாண்டாமல் புதிய அரசமைப்பில் அதிகாரப்பகிர்வுவேண்டுமென்கிறார் மகிந்த ராஜபக்ச.




## தகவல் களஞ்சியம்

1. சாலைச் சந்திப்பில் குறியீடாக பச்சை விளக்கு எரிந்தால் என்ன செய்ய வேண்டும்?
   சாலையைக் கடக்க வேண்டும்
2. காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டது?
   சீனா
3. பால் பதனிடும் முறையைக் கண்டுப்பிடித்தவர் யார்?
   லூயி பாஸ்ரர்
4. சரிவிகித உணவில் அதிக அளவில் எடுத்துக் கொள்ள வேண்டிய உணவுப் பொருள்கள் எவை?
   தானியங்கள், முளை கட்டிய பயறு வகைகள்
5. கரம் விளையாட்டின் தொடக்கத்தில் எத்தனை கறுப்புக் காய்கள் இருக்கும்?
   9
6. உலகில் வெவ்வேறு மொழிகள் பேசப்படுவதற்கான காரணம்?
   புதுப் புது ஒலிக் குறியீடுகள் அமைந்ததால்
7. தேசிய வனவிலங்கு வாரம் முதன்முதலாக எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
   1955
8. தேசிய அறிவியல் தினம் எந்நாளில் கொண்டாடப் படுகிறது?
   பெப்ரவரி 28 ஆம் நாள்



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# நட்சத்திரப் பலன்கள்

**விசாகம் நட்சத்திரப் பலன்கள்**

தமிழ்க் கடவுளாம் குமரன் என்று அழைக்கப்படும் முருகப் பெருமான் அவதரித்த இந்த நட்சத்திரத்தின் அதிபதி குருபகவான் ஆவார். இதில் பிறந்தவர்கள் தாய் தந்தையர்களுக்கு பிரியமானவராக விளங்குவார்கள். நல்ல திடபுத்தியும், திடமான சிந்தனையும் உள்ளவர்கள். எந்தவித காரியத்தையும் எந்தச் சூழலிலும் திறம்படச் செய்து முடிக்கும் இவர்கள், நல்ல அழகான கண்களும், எடுப்பான மூக்கும், நல்ல கேசமும் உள்ளவர்கள். மற்றவர்களை மதிக்காமல் யாரையும் மனம் நோகும் விதத்தில் பேசும் குணம் உடையவர்கள். இவர்களை உற்றார், உறவினர், நண்பர்களை ஏமாற்றுவார்கள்.

**விசாகம் : 1ஆம் பாதம்**

நல்ல கலை ஆர்வம் உள்ள இவர்கள், சாஸ்திர சம்பிரதாயங்களை நன்கு அறிந்தவர்களாக இருப்பார்கள். செய்யத்தகாத காரியங்களைச் செய்வதற்கு அஞ்ச மாட்டார்கள். தங்கள் குடும்பத்துக்காக எந்தவித தியாகத்தையும் செய்யத் தயங்க மாட்டார்கள். நல்ல மதிப்பும்-மரியாதையும் மற்றவர்களிடமிருந்து பெறுவர்.

**விசாகம் : 2ஆம் பாதம்**

விடாமுயற்சியுடன் எக் காரியத்திலும் ஈடுபடுவர். எல்லாவித இங்கிதங்களையும் தெரிந்து, அதற்கு தகுந்தபடி வாழ்வார்கள். பெண்கள் மீது சற்று சபலபுத்தி உடையவர்கள். சட்டம் ஒழுங்கிற்குக் கட்டுபட்டு வாழும் விருப்பம் உடையவர்கள். அடிக்கடி வயிற்று வலியால் கஷ்டப்படுபவராக இருப்பர்.

**விசாகம் : 3ஆம் பாதம்**

நல்ல நடத்தை உள்ள இவர்கள், உயர்பதவிகளை அடைய தகுதி உள்ளவர்கள். நீதிக்கு கட்டுப்பட்டு வாழும் வாழ்க்கையை உடைய இவர்கள், மற்றவர்களுக்கு நல்ல புத்தி சொல்பவராக விளங்குவர். தங்களுடைய மதம், சாதி, இவற்றை உயர்வாக பேசித் திரியும் விருப்பம் உடையவர்கள், நரம்பு சம்பந்தமான வியாதியால் அவதியுறுவார்கள்.

**விசாகம் : 4ஆம் பாதம்**

நல்ல குணவதியான மனைவியை அமையப்பெறுவர். நல்ல மனதும், நல்ல ஆத்மாகவும் உடையவராக மற்றவர்ளுக்கு விளங்குவர். வெளிநாட்டில் நல்ல பெயர் புகழ் பெறுவர். ஓவியத்தில் நல்ல பற்றும் ஆர்வமும் உடைய இவர்கள் எப்பொழுதும்சற்றுசிடுசிடுப்புடன் வாழ்வர். வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தேடி அனுபவிப்பர்.

## நாளை

**தை-05**

புதன்கிழமை -18.01.2017
திதி:ஷஷ்டி பி.ப.04.10
நட்சத்திரம்: அத்தம் பி.இ.05.38
ராகுகாலம்:12.35-02.05 வரை
சுபநேரம்:05.05-06.35 வரை

## ஜல்லிக்கட்டு சரியா? தவறா?

ஜல்லிக்கட்டு சரியா? தவறா? என்ற விவாதங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கும்போது, இன்னொரு பக்கத்தில் ஜல்லிக்கட்டு நடக்கத்தான் செய்கின்றது. ஜல்லிக்கட்டின் தடைக்கு குறிப்பிடும் பிரதான காரணம் மிருக வதை என்பதுதான். மிருக வதைக்கு எதிராக உள்ள உணர்வு ஏன் மனித வதைக்கு எதிராக எழவில்லை? ஜல்லிக்கட்டில் சீறிப்பாயும் காளைகளைச் சிலபேர் சேர்ந்து அடக்குவது வீரவிளையாட்டு என தொன்று தொட்டு பேசப்பட்டு வருகின்றது. ஜல்லிக்கட்டுக்கான சட்ட திட்டங்கள் வீரர்களின் தகுதிகள், காளைகளின் உடற் பலன் என்பன கருத்தில் கொள்ளப்படுகின்றன.

ஆனாலும், ஜல்லிக்கட்டில் கலந்து கொள்ளவுள்ள ஆண்களுக்கு பிரத்தியேக பயிற்சிகள், பாதுகாப்பு விதி முறைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பது குறித்து வெளிப்படையான தகவல்கள் இல்லை. அதேபோன்று காளை வளர்க்கப்பட்ட விதம், போட்டியின்போது காளைக்கு கொடுக்கப்படும் உணவுகள் தொடர்பான விவரங்களும் பகுதிக்குப் பகுதி வேறுபட்டுள்ளன. பொதுவாக நாம் பார்வையிட்ட காண் ஒலிகளில் பல ஆண்கள் காளையை அடக்க முயல்வது காண்பிக்கப்பட்டிருக்கும். இவ்வாறன ஒரு தெளிவில்லாத பின்னணியில் மிருக, மனித வதைக்குரிய விளையாட்டாகக் கருதப்படுகிறது. உதாரணமாக: காளைக்கு கொம்பு வளர்க்கப்பட்டிருக்க வேண்டுமா? எந்தளவில் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும்? போன்ற விதிமுறைகள் ஜல்லிக்கட்டுக்காளைகளுக்கு விதிக்கப்பட்டுள்ளனவா? இவற்றை மீறி காயமடையும் வீரர்களுக்கு மருத்துவ உதவி அல்லது சிகிச்சை வழங்கக் கூடிய வசதிகள் களத்தில் நிறுவப்பட்டுள்ளனவா போன்ற விதிமுறைகள் பரிசோதிக்கப்படுகின்றனவா? இவ்வாறான பல கேள்விகளுக்கு முன்பின் முரணான பதில்கள் வழங்கப்பட்டதன் விளைவுதான் ஜல்லிக்கட்டுக்கான தடை.

உலகில் தமிழ்நாட்டைத் தவிர, ஸ்பெயினில் நடைபெறும் காளை அடக்கும் போட்டி மிகவும் பிரபல்யமானதாகும். அங்கு பேட்டியில் கலந்துகொள்ளும் காளைகளின் எடை, வயது, உடற்தகுதி என்பன நன்கு சோதனையிடப்பட்டிருக்கும். அத்துடன், போட்டிக்கான பயிற்சிகள் நிபுணர்களால் வழங்கப்படுவது மேலும் சிறப்பாகும். அவ்வாறே வீரர்களின் வயது, எடை, உடற்தகுதி என்பன சோதனையிடப்பட்டு, பயிற்சி மூலம் தரவரிசைப் படுத்தப்படும். இவ்வாறான செயற்பாடு மூலம் இரு தரப்பின் உளவியல் நிலைகளும் வலுப்பெறுவதுடன், போட்டியை எதிர்கொள்ளும் ஆற்றலும் அதிகரிக்கப்படும்.





அத்துடன் போட்டிக்கான மைதானம் மிகவும் பரந்துபட்ட அளவில் அமைக்கப்பட்டதுடன், ஒரு காளைக்கு ஒரு வீரர் என்ற வகையில் களமிறங்கப்படுவர். களமிறங்கும் வீரர்கள் ஒவ்வொருவரையும் பாதுகாக்க உதவிக்குழு தயார் நிலையில் இருப்பது இன்னொரு விசேட விடயமாகும். இருந்தாலும் கூட உலக அளவில் ஸ்பெயின் காளை அடக்கும் போட்டிகளுக்கு தடைக் குரல்கள் எழுந்தவண்ணம் உள்ளன.

ஆனால், தமிழ்நாட்டு ஜல்லிக்கட்டில் இவ்வாறான சிறப்பம்சங்கள் விலகலடைந்திருப்பது கவலைக்குரியது. கலாசார வீரவிளையாட்டை விளையாடுவதற்கு சட்டத்துக்குட்பட்ட வகையில் எம்மை நாம் வளர்த்துக் கொள்வதும் அவசியம்.

அனைத்து விடயத்திலும் உலகமயமாதலைப் புகுத்திய நாம், ஜல்லிக்கட்டில் மட்டும் இன்னனும் தொய்வான விதிமுறைகளைக் கொண்டுள்ளோம். கலாசாரத்தை பேணுவதும், பாதுகாப்பதும் மிக அவசியம். ஆனால், தற்கால தேவையையும், புதிய சந்ததியின் வாழ்க்கை தரத்தையும் உணர்ந்து விளையாட்டை நடத்துவது சிறப்பாக இருக்கும். ஒரு காலத்தில் காளையை அடக்க ஓடுவது வீரமாக இருந்திருக்கலாம், ஆனால் இப்போது, ஏன்? எதற்காக? விளைவுகள் என்ன? என்றெல்லாம் ஆராயும் தலைமுறையில் இருக்கிறோம்.

கேள்விக்குரிய பதில் எட்ட முடியாத சூழ்நிலையில், எந்த விடயமுமே தவிர்க்கப்படும் விடயமாக மாறும் அபாயமும் உள்ளது. அதன் ஒரு பிரதிபலிப்பே ஜல்லிக்கட்டுக்கு மத்திய அரசு விதித்த தடை. தற்போது தடையை அகற்றும் போராட்டங்கள் அரங்கேற்றப்பட்டாலும், மீண்டும் மீண்டும் விதிமுறைகளுக்குரிய விடயங்கள் மீளாய்வு செய்யப்படும் என்பது தான் உண்மை.



மர்ஹும் அஷ்ரபினால் 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அடிக்கல் நடப்பட்ட இந்தக் கட்டடத்தை மூன்றுமாடிகளைக் கொண்டதாக அமைக்கவும், மூன்றாவது மாடியில் அஷ்ரப் தொடர்பானதும், பிரதேச முஸ்லிம்கள் தொடர்பானது மான ஆவணக் காப்பகம் ஒன்றை நிறுவவும் தீர் மானித்து பிரகட னப்படுத்தப்பட்டது.

# அஷ்ரப் வரவேற்பு மண்டபம் ஒரு புராதன சின்னமல்ல!

- ஏ.எல்.எம்.சலீம் -

வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகள், கல்விச் சுற்றுலா மேற்கொள்ளும் பாடசாலை மாணவர்கள் பொலனறுவை, அநுராதபுரம், சிகிரியா போன்றபிரதேசங்களுக்குச் சென்று புராதன கட்டடங்கள் மற்றும் சிற்பங்களைப் பார்வையிடுவதுவழக்கமாகும்.

இத்தகையவர்கள் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நிந்தவூர் பிரதேசத்திற்கு வருகைதந்தால், இங்குள்ளஆயிரம்கால் மண்டபம் போன்ற கட்டடமொன்றைப் பார்த்து இங்கும் புராதன சின்னங்கள் உள்ளனவோவென மூக்கில் விரலை வைக்கவும், குழப்பமடையவும் தவறமாட்டார்கள்.

ஆம், நிந்தவூரில்பொதுமண்டபமொன்றில்லாக் குறையைத் தீர்க்கும் நோக்குடன் கடந்த சுமார் 25 வருடங்களுக்குமுன்னர் அடிக்கல் நடப்பட்ட கட்டடமே இன்னும் பூர்த்தி அடையாதநிலையில் புராதனமன்னர்கள் காலத்துகட்டட சிதைவுகள், அல்லது புராதன சின்னம் போன்றுகாட்சியளிக்கின்றது.

**அஷ்ரப் வரவேற்பு மண்டபம்**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர்-இலங்கை முஸ்லிம்களுக்கு முகவரிபெற்றுக் கொடுத்தபெரும் தலைவர் மர்ஹும் எம்.எச்.எம்.அஷ்ரப்பைக் கௌரவித்து இந்த மண்டபத்திற்கு அஷ்ரப் வரவேற்பு மண்டபம் என அப்போதிலிருந்தே பெயரிடப் பட்டுமுள்ளது.

மர்ஹும் அஷ்ரப்பினால் 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் அடிக்கல் நடப்பட்ட இந்தக் கட்டடத்தை மூன்றுமாடிகளைக் கொண்டதாக அமைக்கவும், மூன்றாவது மாடியில் அஷ்ரப் தொடர்பானதும், பிரதேச முஸ்லிம்கள் தொடர்பானதுமான ஆவணக் காப்பகம் ஒன்றை நிறுவவும் தீர்மானித்து பிரகடனப்படுத்தப்பட்டது.


மர்ஹும் அஷ்ரப் கைப்பட எழுதிய கடிதங்கள், அவருடைய நூல்கள், ஆக்கங்கள், உரைகள், புகைப்படங்கள் போன்ற அவர் தொடர்பாகச் சேகரிக்கப்படும் ஆவணங்கள் இந்தக் காப்பகத்தில் வைக்கப்படவும் திட்டமிடப்பட்டது.

இந்தக் கட்டடத்தின் ஆரம்பவேலைகள் அப்போது 80 இலட்சம் ரூபாஅரசநிதியில் ஆரம்பிக்கப்பட்டதோடு, அஷ்ரப்பின் மறைவின் பின்னர் கட்டடநிர்மாணம் தொடரப்படவில்லை.

எனினும் இடையில் முஸ்லிம் காங்கிரஸ் செயளாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அரசிடமிருந்து கிடைத்த இரண்டரைக் கோடி ரூபா நிதியை இக் கட்டட வேலைக்கு ஒதுக்கி சற்றுத் துளிர் விட வைத்தார்.

ஆனாலும் இந்தக் கட்டடம் பூர்த்திசெய்யப்படாதும், கட்டாக் காலிகளின் உறைவிடமாகவும் ஆயிரம் கால் மண்டபம்





போன்றுகாட்சியளிக்கின்றது.

தலைவர் அஷ்ரபின் பாசறையில் வளர்ந்தவர்கள் எனமார் தட்டிக் கொண்டுஅரசியல் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோர் இங்கு உள்ளவர்கள் என்பதுடன் முழுமைப்படுத்தப்படாத இந்த அஷ்ரப்வரவேற்புமண்டபத்தை-அதன் அவலத்தை நேரில் அறிந்தும் வைத்துள்ளனர்.

எமது தலைவரால் அடிக்கல் நடப்பட்ட, அவர் பெயரைக் கொண்ட இந்தக் கட்டடத்துக்கு நிதி வழங்கி நிறைவு செய்துவிட வேண்டுமென்ற உணர்வு இவர்களுக்கெல்லாம் எப்போது வருமோவெனமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இப்போது மண்டபத்தை முழுமைப்படுத்த பெரு முயற்சிகளை மேற்கொண்டுவரும் பொது அமைப்பான நிந்தவூர் நெஸ்கா எனும் கல்வி, சமூக சேவைகள், கலாசார அமைப்பின் தலைவரும், ஓய்வுபெற்ற அதிபருமான எஸ். அகமது கருத்துத் தெரிவிக்கையில்;

"நாமும் எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டோம், பல அரசியல்வாதிகளையும் அணுகினோம். இன்னும் தான் கட்டடத்தை முழுமைப்படுத்திக் கொள்ளமுடியவில்லை. நிந்தவூரில் வாழும் ஐம்பதாயிரம் மக்களின் ஏக்கமிக்கவிடயமிது. பிரதேசஅரசியல்வாதிகளின் கண்கள் திறக்கவேண்டும்" என்றார்.

நிந்தவூரைச் சொந்தஊராகக் கொண்ட பிரதிஅமைச்சர் எம்.பைஸால் காசீமை இது தொடர்பாக வினவியபோது,

"நிந்தவூரில் பொதுமண்டபமில்லாக் குறை அவசியம் தீர்க்கப்பட வேண்டும். 25 வருடகாலமாக நிறைவுறாதிருக்கும் இந்தப் பொது மண்டப நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படவேண்டும். இதற்கென 2017இல் அரசிடம் நிதி பெறுவதற்கு முயற்சிக்கவுள்ளேன்" என்றார். சுமார் 25 வருடங்கள் கடந்தும் இந்தக் கட்டம் புராதனசின்னம் போல் காட்சியளிக்கத்தான் வேண்டுமா? நிந்தவூர் மக்களின் பொதுமண்டபமில்லாக் குறைதீரும் நாள் எந்நாளோ? கண்கள் திறக்குமா?காரியம் நடக்குமா? பிரதேசஅரசியல் முக்கியஸ்தர்களே! மக்களின் இந்த ஆதங்கம் உங்கள் முன் சமர்ப்பணம்.













# அப்பா - மகன் பாசத்தைக் கூறும் யாகன்



மாப்பாணர் புரொடக்சன்ஸ் சார்பில் யோகராசா சின்னத்தம்பி தயாரிக்கும் படம் யாகன். இதில் சஜன் ஹீரோவாக அறிமுகமாகிறார். மற்றும் அஞ்சனா கீர்த்தி, ஜெயராஜ், முனீஸ் ராஜா, தவசி, பாவா லட்சுமணன், ராஜேந்திர நாத் உட்பட பலர் நடிக்கிறார்கள். மகேஷ்.டி ஒளிப்பதிவு செய்கிறார். நிரோ பிரபாகரன் இசை அமைக்கிறார். வினோத் தங்கவேலு இயக்குகிறார். படம் பற்றி அவர் கூறும்போது, 'புரிந்துகொள்ளாமல் மோதுவதும், அதனால் ஏற்படும் இழப்பும் எத்தகையது என்பதை சொல்லும் படம் இது. தான் சம்பந்தமே படாத அவமானம் வில்லனுக்கு நிகழ்கிறது. அதற்கு ஹீரோவின் குடும்பமே காரணம் எனப் புரிந்து கொள்ளப்படுவதால் ஹீரோ குடும்பம் சிதைந்து போகிறது. இழப்புகளைச் சந்திக்க நேர்கிறது. அதற்கு ஹீரோ என்ன தீர்வு காண்கிறான் என்பது கதை. அப்பா மகனுக்கான நெருக்கத்தை, அன்பை, அன்னியோன்யத்தை சொல்லும் படமாக இது இருக்கும். விரைவில் பாடல் வெளியீடு இருக்கிறது' என்றார்.



உண்ணாமல் கூட என்னால் இருக்க முடியும் ஆனால் உழைக்காமல் என்னால் இருக்க முடியாது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 7 | | | 1 | 3 | |
| | 4 | | | 6 | | | | |
| | | 3 | | | | | 9 | |
| 6 | 3 | | | 7 | | | 5 | |
| 2 | | 1 | | | | | | |
| | 5 | | | | | | | |
| | | | 1 | | | 6 | | 7 |
| | | | 6 | 3 | | 4 | 1 | |
| | | | | | 4 | | | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 7 | 9 | 1 | 3 | 8 | 6 | 2 |
| 3 | 6 | 1 | 2 | 8 | 4 | 7 | 5 | 9 |
| 2 | 9 | 8 | 7 | 6 | 5 | 3 | 1 | 4 |
| 5 | 1 | 3 | 6 | 9 | 7 | 4 | 2 | 8 |
| 7 | 8 | 4 | 1 | 3 | 2 | 5 | 9 | 6 |
| 6 | 2 | 9 | 4 | 5 | 8 | 1 | 7 | 3 |
| 1 | 3 | 2 | 5 | 4 | 9 | 6 | 8 | 7 |
| 8 | 7 | 5 | 3 | 2 | 6 | 9 | 4 | 1 |
| 9 | 4 | 6 | 8 | 7 | 1 | 2 | 3 | 5 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறு வனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல் யமானது.



**மேடம்:** சிலர் உங்களின் நற்செயலை பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெண் கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**இடபம்:** தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். பேச்சில் நிதானத்தைக் கடைபிடிக்கவும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்கலாம்.

**மிதுனம்:** தேவை அனைத்தும் குறைவின்றி நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் லாபம் வரும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி உருவாகும். லாபம் சுமாராக இருக்கும். உறவினரால் உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் உண்டாகும்.

**சிங்கம்:** கடந்த கால உழைப்பிற்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். கடனில் ஒரு பகுதி அடைபடும். அக்கம் பக்கத்தினரிடம் இணக்கம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** அடுத்தவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். குடும்பத் தேவை பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறை தாமதமின்றி சரிசெய்வது நல்லது. நண்பரின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கையளிக்கும்.

**துலாம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். குடும்பத்தினருடன் விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** சிரமங்களை சமயோசிதமாக சரிசெய்வீர்கள். குடும்பத்தில் நிம்மதி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** முயற்சிக்கான பலன் உடனடியாகக் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெற்று மகிழ்வர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**மகரம்:** சிலர் அளித்த வாக்குறுதிக்கு மாறாக செயற்படுவர். தொழில் வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்கள் கௌரவத்திற்காக செலவு செய்ய நேரிடும். சுபவிடயத்தில் தாமதம் உண்டாகும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வருவீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். லாபம் உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் சுதந்திரமாக செயற்படுவர்.

**மீனம்:** மதிநுட்பத்துடன் பணியாற்றி வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் லாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு சமூகத்தில் அந்தஸ்து உயரும். நண்பரால் உதவி கிடைக்கும்.

# உள்ளி முறுக்கு



### தேவையான பொருள்கள்

கடலை மா - 2 கப்
அரிசி மா - 1 கப்
பெருங்காயம் - கால் தேக்கரண்டி
சீரகம் - 1 தேக்கரண்டி
எள் - 1 தேக்கரண்டி
உப்பு - சிறிது
காய்ந்த மிளகாய் - 5
உள்ளி - 8
வெண்ணெய் - 1 தேக்கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு

### செய்முறை

காய்ந்த மிளகாய், உள்ளி ஆகியவற்றை தண்ணீர் சேர்த்து நன்றாக மசிக்கவும். இப்போது ஒரு கிண்ணத்தில் கடலை மா எடுத்து அதனுடன் அரிசி மா, பெருங்காயம், சீரகம், எள், உப்பு சேர்த்து கலக்கவும். பின் வெண்ணெய் சேர்த்து பிசைந்து அரைத்த உள்ளி, மிளகாய் சேர்த்து கலந்து வைக்கவும். ஒரு சிறிய சட்டியில் எண்ணெய் ஊற்றி சூடானபின் மாவில் ஊற்றி பிசிறவும். இப்போது உங்களுக்குப் பிடித்த அச்சை எடுத்து அதில் மாவை வைத்து பிழிந்து எண்ணெயில் போட்டு பொன் நிறமாகப் பொரிக்கவும்.

# ஆண்களே! அடம்பிடிக்கும் பொடுகுக்கு இதை முயலுங்கள்



**இஞ்சி**

இஞ்சியை அரைத்து-சாறு எடுத்து, அந்தச் சாற்றை தலை மேற்பரப்பில் படும்படி பருத்தித் துணி பயன்படுத்தி தடவி, ஒரு மணிநேரம் கழித்து, ஷாம்பு பயன்படுத்தி தலைமுடியை அலச வேண்டும். இப்படி வாரத்துக்கு 3 முறை என 2 வாரம் தொடர்ந்து பின்பற்றினால், பொடுகு முற்றிலும் போய்விடும்.

**கற்றாழை**

கற்றாழை மற்றும் எலுமிச்சைசாறு கற்றாழை ஜெல்லுடன், பாதி எலுமிச்சையைப் பிழிந்து சேர்த்து கலந்து, தலை மேற்பரப்பில் படும்படி தடவி மசாஜ் செய்து 30 நிமிடம் கழித்து மைல்டு ஷாம்பு (செறிவு குறைந்த) பயன்படுத்தி தலைமுடியை அலச வேண்டும். இப்படி செய்வதன் மூலம் பொடுகு விரைவில் நீங்கும்.

**ஆப்பிள் சீடர் வினிகர்**

ஆப்பிள் சீடர் வினிகர் மற்றும் நீரை சரிசம அளவில் எடுத்துக் கொண்டு, தலைக்கு ஷாம்பு பயன்படுத்தி அலசியபின், ஆப்பிள் சீடர் கலவையால் தலைமுடியை அலசி, 10 நிமிடம் கழித்து, குளிர்ந்த நீரில் அலச வேண்டும். இப்படி ஒரு நாள் விட்டு ஒரு நாள் செய்து வந்தால், பொடுகு போய்விடும்.

**புதினா மற்றும் வேப்பிலை**

20 வேப்பிலையுடன், 10 புதினா இலைகளை எடுத்து, 4 கப் நீரில் போட்டு, பாதியாக நீர் குறையும் வரை கொதிக்க வைத்து இறக்கி, அந்த இலைகளை அரைத்து, தலை மேற்பரப்பில் படும்படி மசாஜ் செய்து, 30 நிமிடம் கழித்து, நீரில் அலச வேண்டும்.

**பேக்கிங் சோடா**

2 ஸ்பூன் பேக்கிங் சோடாவை நீரில் கலந்து பேஸ்ட் செய்து, தலை மேற்பரப்பில் படும்படி தடவி 3-5 நிமிடம் மென்மையாக மசாஜ் செய்து, பின் குளிர்ந்த நீரில் தலைமுடியை அலச வேண்டும். இந்த சிகிச்சையை வாரத்திற்கு ஒரு முறைமட்டும்தான் செய்ய வேண்டும்.

**உள்ளி**

5-6 உள்ளி பற்களை எடுத்து அரைத்து சாறு எடுத்து, தலை மேற்பரப்பில் படும்படி தடவி 15-20 நிமிடம் கழித்து, மைல்டு ஷாம்பு பயன்படுத்தி அலச வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், பொடுகுத் தொல்லையில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

**புளித்த தயிர்**

3-4 ஸ்பூன் புளித்த தயிரை தலை மேற்பரப்பில் படும்படி மசாஜ் செய்து, நன்கு 30-60 நிமிடம் ஊற வைத்து, பின் மைல்டு ஷாம்பு கொண்டு தலைமுடியை அலச வேண்டும். இப்படி வாரத்திற்கு 3 முறை பின்பற்றினால், பொடுகு வேகமாய் போய்விடும்.

# மேசைப் பாய்கள்





**இது புதுசு**

இயற்கை பொருள்களால் ஆன மேசைப் பாய்கள் அறிமுகமாகியுள்ளன. உணவு மேசையின் சுத்தத்தைப் பேணும் இவை, உணவு மேசைக்குரிய அழகையும் கொடுக்கக் கூடியன ஆகும். சாப்பாட்டு கோப்பை, சிறிய கோப்பை, தேநீர்க் கோப்பைகளை வைக்கக் கூடிய விதம்விதமான அளவுகளில் கிடைக்கப் பெறுகின்றன. இவை 50 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# பயனுள்ள சில உணவு மருத்துவக் குறிப்புகள்

- நீரிழிவு உள்ளவர்கள் சக்கரை கொல்லி எனப்படும் சிறுகுறிஞ்சா இலையை உண்பதாலும் நிவாரணம் பெறலாம். இது இன்சுலின் என்னும் ஓமோன் சுரக்கப்படுவதைத் தூண்டி குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிப்பதைக் கட்டுபடுத்த உதவுகிறது. சிறுகுறிஞ்சா 2,3 இலையைக் காலையில் பச்சையாகச் சப்பிச் சாப்பிடலாம். கறியாக அல்லது வறை செய்தும் உண்ணலாம்.
- மழைக்காலம் அல்லது பனிக் காலதில் வரும் தொய்வு, முட்டு நோய்க்கு மந்தாரகாசம் என்று பெயர். இதனால் அவதியுறுபவர்கள் மொசுமொசுக்கை இலையை ரொட்டியாக அல்லது அரையலாகச் செய்து சாப்பிடுவதன் மூலம் நிவாரணம் பெறலாம்.
- இருமல், சளியுள்ளவர்கள் தூதுவளை இலையை அரையல் செய்து உண்பதால் பயன் பெறலாம்.
- செவ்வரத்தம்பூவைப் பச்சடி செய்து உண்டு வந்தால் சலக் கடுப்பு, கால்வீக்கம் என்பன நீங்கும். உடற்சூடு தணியும்.
- இதரை வாழைப் பூவைக் கறி சமைத்து உண்டு வந்தால், கருத்தரிக்கும் வாய்ப்பு ஏற்படும். குழந்தை இல்லாத பெண்கள் தமது உணவில் இதனைச் சேர்த்து வரலாம்.
- குழந்தையில்லாத தம்பதியர் செவ்வாழைப் பழத்தைத் தினமும் சாப்பிட்டு வந்தால் குழந்தைப்பேறு ஏற்படவாய்ப்புண்டு.
- பொன்னாங்கண்ணியை நெய்யில் வதக்கிக் கறி சமைத்து உண்டு வந்தால், கண்பார்வை தெளிவுறும், உடல் பலம் பெறும்.
- மஞ்சள் கரிசலாங்காணிக் கீரையை கறி சமைத்து உண்டு வந்தால் பித்த சம்பந்தமான நோய் நீங்கும்.
- வேப்பம்பூ பச்சடியாக, வடக மாக உண்டு வந்தால் குருதியில் கொலஸ்ரோலின் அள வைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும்.





# கிட்டிவேக்.!

## தீவிரமான ஏகபத்தினி விரதன்

மனிதர்களிடையேயான இனப்பெருக்கச் செயற்பாட்டைப் பொறுத்தவரையிலே அண்ணன், தங்கை போன்ற நெருங்கிய இரத்த உறவுகளில் பாலுறவு தவிர்க்கப்பட்டுள்ளது. அதேபோன்றே சிலவகையான பறவை, எலி, பல்லி இனங்களிலும் நெருங்கிய இரத்த உறவுகளுக்கிடையேயான பாலுறவு தவிர்க்கப்படுகிறது என்பது ஆய்வுகளின் மூலம் தெரியவருகிறது. குறிப்பாக கறுப்புக்கால்களை உடைய கிட்டிவேக் என்னும் கடற்கரை வாழ் பறவையானது நெருங்கிய இரத்த உறவுகளில் பாலுறவு வைத்துக் கொள்வதில்லை என்பதை பி.எம்.சி. இவாலுவேசனறி பயலொஜி (BMC Evolutionary Biology) என்னும் ஆய்வு சார்ந்த இதழ் ஒரு கட்டுரையாகவே வெளியிட்டுள்ளது.

மனிதர்களிடையே ஒருதார மணத்தை பின்பற்றுபற்றுகின்றவர்கள், பலதாரமணத்தை ஏற்றுக்கொண்டவர்கள் என்றெல்லாம் பாகுபாடும் கருத்துக்களின் தொனிப்பும் இருப்பது நாம் அறிந்த விடயம். இதைப்போன்று பறவைகள்கூட ஒரே நேரத்தில் பல பறவைகளுடன் பாலுறவு கொள்ளுதல் அல்லது ஒரு சமயத்தில் ஒரு பறவையுடன் மட்டுமே பாலுறவு கொள்ளுதல் என்ற கோட்பாடுகள் கடைபிடித்து வருவதாக அறிவியலாளர்களால் ஆய்வு அடிப்படையான தகவல் தரவுகள் சொல்லப்படுகிறது.

இந்த நிலையிலே கறுப்புக் கால்களை உடைய கிட்டிவேக் என்னும் இந்தக் கடற்கரையோரம் வாழக்கூடிய தான பறவை மிகத்தீவிர மான ஏகபத்தினி விரதன் எனக் கூறப்படுகிறது.

இவை ஒருபோதும் நெருங்கிய இரத்த உறவுகளில் பாலுறவு கொள்வதில்லை என்பதுதான்பிஎம்.சி. இவாலுவேசனறி பயலொஜி இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரையின் சாரமாகக் காணப்படுகிறது. பல ஆய்வாளர்கள் கூட்டிணைவாக மேற்கொண்டுள்ள ஆய்வில் இருந்து பலதகவல்கள் வெளிப்பட்டுள்ளன.

கிட்டிவேக் பறவைகள் நெருங்கிய இரத்த உறவுகளில் பாலுறவு கொள்வதில்லை என்பதும், அவ்வாறு பாலுறவு கொள்ள நேரிட்டால் உயிர் பிழைக்கும் குஞ்சுகளின் எண்ணிக்கை குறைந்து போகிறது என்பதும் ஆய்வில் கிடைத்துள்ள மேலதிகமான அறிவியல்சார் ஆச்சரியம் கொள்ளும் செய்தி. கிட்டிவேக் பறவைகள் தங்களுடைய இரத்த உறவுகளை எத்தனை பெரிய பறவைக் கூட்டத்திலும் கண்டுபிடித்து விடுவதாகவும் தவறுதலாக இவற்றிடையே பாலுறவு ஏற்பட்டாலும்கூட முட்டைகள் குஞ்சு பொரிப்பதில்லை அல்லது பொரித்த குஞ்சுகளும் இறந்துபோய்விடுவதாகக் கூறப்படுகிறது.

மேலும், இவை குஞ்சுகளைப் பொரித்தவுடன் அவற்றின் பெற்றோர் நெருங்கிய இரத்த உறவில் வந்த குஞ்சு என்பதான அடையாளப்படுத்தலை இனங்கண்டுகொள்வது மட்டுமன்றி குஞ்சுகளை வெறுத்து ஒதுக்கத் தொடங்குகின்றன. இவற்றின் வளர்ச்சி என்பதும்மெதுவாக இருப்பதன் காரணமாக ஏனைய பறவைகளுடன் போட்டியிட்டு தப்பித்து வாழமுடிவதில்லை.

கிட்டிவேக் பறவைகள் வாழ்க்கை முழுவதும் சேர்ந்தே வாழுகின்றன என்பதும் அவற்றிடையே மணமுறிவு என்பது எக்காலத்திலும் ஏற்படுவதில்லை என்பதும் இன்னுமோர் ஆச்சரியமான செய்தி.

இந்தச் சந்தர்ப்பத்திலே உடல் வாசனையைக் கொண்டு நெருங்கிய இரத்த உறவுகளை இந்த கிட்டிவேக் பறவைகள் அடையாளம் காண்கிறதா என்பது தொடர்பிலான ஆய்வுகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதான தகவல்கள் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

---

### மரண அறிவித்தல்

**திருமதி தேவி சிவஞானம்**

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.01.2017 திங்கட் கிழமை பிற்பகல் 5மணிக்கு லண்டனில் நடை பெற்றது.

குடும்பத்தினர்.

---

### மரண அறிவித்தல்



## திருமதி அன்னம்மா சின்னத்துரை

சக்கலாவத்தை கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கல்லுவம் கரணவாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சின்னத்துரை 15.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் சந்தானலக்ஷ்மி(ஜேர்மனி), இராஜ்குமார்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலசேகரம் (ஜேர்மனி), நவநீதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விதுஷன், சதுஷன், றக்ஹிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தங்கராசா செல்லம்மா வின் அன்புச் சகோதரியும் விஜயலக்ஷ்மி காலஞ்சென்றவர்களான இராசம்மா(தேவி), சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சிறியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2017) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக் காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கல்லுவம், கரணவாய் மேற்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**

---

### மரண அறிவித்தல்



மண்ணில் 01.07.1925 — விண்ணில் 14.01.2017

## பொன்னுத்துரை சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற பிரதமலிகிதர் - வவுனியா கச்சேரி)

பொற்பதி வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல.01 தலங்காவற் பிள்ளையார் வீதி, தபால்பெட்டிச்சந்தி, திருநெல் வேலி தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் இல:15/2A, சிறீகுணா னந்த மாவத்தை, கொட்டாஞ்சேனையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சுப்பிரமணியம் 14.01.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற வர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரரும் சந்திராணி, சிவக்கொழுந்து, அமிர்தநாயகி ஆகியோரின் மைத்துனரும் சிவஞானம்(ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் சகலனும் சுமித் திரா, தயாபரன், கிருபாகரன், கார்த்திகா, ஹரிகரன், வாசுகி, சுமதி, நிரஞ்சலா(ஹரே கிருஸ்ணா இசைக்கல்லூரி - ஆசி ரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரபாலன், சசி, ஜெயலக்ஷ்மி, நித்தியாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுபாலினி, சுதர்சினி, சுகந்தினி, சுதாகினி, பிரதீபன், ரஞ்சனி, லோசனி, உதயா, ஜெயா, மாலி, கலா, விஜி ஆகியோரின் பெரியப்பாவும் சந்திரிக்கா, சாமினி, மேனன், அக்சயா, ஆதிரன், சதுர்ணா, ஹரினி, ஜனனி, விஸ்ணவன், அபிரா, ராம்சே, ஜெதுசன், ஜென்சிகா, அர்வின், ராகவி, கௌதமன், அபிசேகன், சாங்கவி, கிருசிகேசன், பிரணவி, வைஷ் ணவி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.01.2017 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் தற்காலிக வசிப்பிடமான கொட்டாஞ்சேனை இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.15/2A,
சிறீகுணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை, கொழும்பு -13.**


**தகவல்:
திருமதி சு.ஜெயராணி
(மனைவி)**

(J 7713) (14,17,18,)

**077 628 3351/ 011 242 3379**

---

### மரண அறிவித்தல்



## ஜேம்ஸ் ஜோசப் (பெரியதம்பி)

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜேம்ஸ் ஜோசப் 15.01.2017 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் - அருளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான தம்பு - றோஸ்மேரி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லூத்தம்மாவின் அன்புக் கணவரும் ரதி, ஜெயா, கெனடி, சோமா, மெரினா, ஜஸ்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வர்களான மாகிறேற், துரைரட்ணம் மற்றும் ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாபு, ஆனந்தன், டயானா, ரவி, காலஞ்சென்ற லோர்மன் லடிஸ் மற்றும் கொலின் ஆகியோரின் மாமனாரும் மொறின்.சுஜி, பாமினி, சிந்து, வினி, நோர்மன், நிலான், டிலான், ஜென்சியா,செல்சியா, ஜெனிபர், லிதியா, சொப்னா,இவோன், கெனற், மீனா, அஜித் ஆகியோரின் பாசமிகு பேரனும் வென்சஸ் பெர்னாண்டோ, பெபியோ பெர்னான்டோ, அபினயா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.01.2017) செவ்வாய்க் கிழமை யாழ். புனித மரியன்னை பேராலயத்திற்கு பிற்பகல் 3 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப் படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.498,கடற்கரைவீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

(C 2165)(2.17.18.)

# கிழக்கு சிரியாவில் மோதல் உக்கிரம்

கிழக்கு சிரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகள் மற்றும் அரச படைகள் இடையே கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற கடும் மோதல்களில் 80க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தியர் எல்-சௌர் நகரில் ஐ.எஸ் மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றை தொடங்கியதை அடுத்து நகரின் உள்ளேயும் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் மோதல் தொடங்கியதாகப் பிரிட்டனை சேர்ந்த சிரியாவுக்கான மனித உரிமை கண் காணிப்பகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தீவிரவாதிகள். ஆனால், அரசு ஆதரவு பெற்ற படையை சேர்ந்த சுமார் 30 உறுப்பினர்கள் இந்த மோதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களைத் தவிர்த்து பத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தியர் எல்-சௌர் நகரின் பாதிக்கும் மேற்பட்ட பகுதியை தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். தற்போது, அரசகட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தீவிரவாதிகள் முற்றுகையிட்டு வருகின்றனர். (வ)

## அபிவிருத்தி இலட்சாதிபதி

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 45
சீட்டிழுப்பு திகதி 2017.01.16

வெற்றி இலக்கங்கள்: 08 27 45

6

1,280,560/=

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1332
சீட்டிழுப்பு திகதி 2017.01.16

வெற்றி இலக்கங்கள்: 15 30 36 51 Z

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 16,135,420/-

## SUPER BALL சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 603
சீட்டிழுப்பு திகதி 16.01.2017 திங்கட்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 02 04 22 64 Z

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.47,519,240/=

## பேரவைச் செயலகம், வடக்கு மாகாண சபை.

மதிய உணவு (Lunch), கனிம நீர் (Mineral Water), காகிதாதிகள் ( Stationery Items), சுத்திகரிப்புப் பொருள்கள் (Sanitary Items) மற்றும் பிரதியெடுக்கும் மை (Toners)

### விநியோகத்துக்கான கேள்வி கோரல் - 2017

01. வடக்கு மாகாண பேரவைச் செயலக பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான மற்றும் தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றார்.
02. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் 17.01.2017 தொடக்கம் 07.02.2017 வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரையான அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் (021 205 7081). பேரவைச் செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. விலைக்கேள்விகள் 07.02.2017 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ இச் செயலகத்தில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்விகள் அனைத்தும் 08.02.2017 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும்.
04. "மதிய உணவு விநியோகம் - 2017" "கனிம நீர் விநியோகம் - 2017" "காகிதாதிகள், சுத்திகரிப்புப் பொருள்கள் விநியோகம் - 2017" "பிரதியெடுக்கும் மை விநியோகம் - 2017" என்ற விவரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விவரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
05. எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.
06. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்குப் பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

க.தெய்வேந்திரம்,
தலைவர், பேரவைச் செயலக பெறுகைகள் குழு.
வடக்கு மாகாணசபை, A-9 வீதி, கைதடி.

(சி/23835)(11.17)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், பிரதம சித்த வைத்திய அதிகாரி, யாழ். மாநகரசபை வைத்தியர் **Dr. சு. அருந்ததி** அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி பங்கஜவதி இராசையா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம், இலங்கை.

## கட்டடம் வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி றோட் 137, 139, 141 இலக்க 72 அடி அகலமும் 75 அடி நீளமும் உள்ள இரு மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு. முழுமையாகவோ அல்லது பகுதி பகுதியாகவோ கொடுக்கப்படும்.
தொடர்பு:- 077 691 4229, 021 222 4103

## வீடு விற்பனைக்கு

205/3, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 459 2915

## நாயைக் காணவில்லை

நாவலர் வீதியில் கறுப்பு நிறமும், கழுத்தில் வெள்ளை நிறமும், கறுப்பு நிற பட்டி (பெல்ற்) அணிவிக்கப்பட்டதுமான ஆண் நாயை சென்ற சனிக்கிழமை 14.01.2017 முதல் காணவில்லை. கண்டு இருப்பின் அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு - 077 9543 968

## கண்ணீர் அஞ்சலி



**நாகலிங்கம் தவமணிநாயகம்**
(மூத்த நிர்வாகசபை உறுப்பினர்-கலைஞர்)

எமது துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நீண்டகாலமாக நிர்வாகசபை உறுப்பினராக இருந்து சேவையாற்றிய மல்லாகத்தைச் சேர்ந்த **நாகலிங்கம் தவமணிநாயகம்** அவர்கள் 15.01.2017 அன்று அமரத்துவம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளை பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகசபை,
துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1932.03.21
இறப்பு 2016.01.28

**நமசிவாயம் மாசிலாமணி**

அன்பு நெறி காட்டி
ஆதரவாய் எமக்கிருந்து
இங்கிதமாய் பேசி
ஈடின்றி வாழ்ந்தீர் ஐயா!
உங்களை நாம் பிரிந்து - இன்று
ஓராண்டு ஆனாலும்
உங்கள் நினைவு ஒரு போதும் மாறாது

2ஆம் வட்டாரம்,
(அம்மன் கோயிலடி) மண்டைதீவு. **குடும்பத்தினர்.**

## தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சியிலுள்ள கிளைகளில் 30.11.2016க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளை 28.01.2017ம் திகதி காலை 10.30 மணி முதல் இல.56/22/B, ஸ்டென்லி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி அலுவலகத்தில் 85வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

உதவி பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் கனகரத்தினம் விஜயகுமார்**

19.12.2016 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் கனகரத்தினம் விஜயகுமார் அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இத் தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் நாளை (18.01.2017) புதன்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். **குடும்பத்தினர்.**

தென்மராட்சி சாவகச்சேரி நகரில்
கொமர்சல் வங்கிக்கு
அருகாமையில் 18.01.2017 அன்று புதிதாக உதயமாகிறது
என்பதை அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்



## வேலையாள்கள் தேவை

**கிப்ற் சென்ரருக்கு பெண் வேலையாள்கள் தேவை.**

**தொடர்பு - 077 619 6136**

## மரண அறிவித்தல்கள்

### இராசேந்திரம் மதிவாணன் (மதி)



மலர்வு 1987.01.28 உதிர்வு 2017.01.16

செம்பியன்பற்று தெற்கைப் பிறப்பிடமாகவும், கேவில் - முள்ளியானை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் மதிவாணன் (மதி) நேற்று (16.01.2017) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாதன் - கிளி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலினி (சுசி) இன் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: ரகுநாதன்**
**077 869 0807, 077 720 9528**

### சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்



யாழ். புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், மெல்பேர்ன் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் கடந்த 06.01.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - யோகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் கார்த்திகாயினி, வான்மதி ஆகியோரின் அன்புத்தந்தையும் பார்பதிப்பிள்ளை காலஞ்சென்றவர்களான பசுபதி, கணேசமூர்த்தி, மகேஸ்வரி மற்றும் திலகவதி, தனலட்சுமி, மங்கையற்கரசி, விக்னேஸ்வரமூர்த்தி, உமாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.01.2017) செவ்வாய்க்கிழமை மெல்பேர்னில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சகோதரர்கள்,**
**பிள்ளைகள்.**

**புலோலி தெற்கு,**
**புலோலி.**

### திருமூர்த்தி கிருஷ்ணபிள்ளை (அப்புஅண்ணை)



பிறப்பு 13.11.1947 இறப்பு 12.01.2017

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ். உரும்பிராய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமூர்த்தி கிருஷ்ணபிள்ளை 12.01.2017 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை(மலேசியன் பென்சனியர்)- பவளரத்தினம் தம்பதியரின் பாசமிகு புத்திரரும் ஞானசக்தி (கனடா), காலஞ்சென்ற ஞானலிங்கம், பத்மா தேவி(லண்டன்.) தனாம்பிகா(கனடா), ஈசன்கிருஸ்ணா (Sun Life-கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சகாதேவன் (ஆசிரியர்), இரத்தினசிங்கம்(லண்டன்), இராஜகுலேந்திரன் (கனடா), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் துஷ்யந்தன் (கனடா), கிருஷாந்தன்(பவன் ஆஸ்திரேலியா), கிருஷாந்தி (கனடா), வினோதர(லண்டன்), தர்மதா(லண்டன்), Dr.தனுசன் (கனடா), தனரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவன் (கனடா) அவர்களின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**ஈசன்கிருஷ்ணா**
**வே.சிவதாசன் (077 651 0420)**


**உரும்பிராய் தெற்கு,**
**உரும்பிராய்.**

### யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எதிர்வரும் சனிக்கிழமை 21.01.2017 மாலை 4.30 மணிக்கு **பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்** பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற உள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**அதிபர்,**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்.**

## மரண அறிவித்தல்



மலர்வு 28 10 1958

உதிர்வு 16 01 2017

### இராசதுரை இராசேந்திரம் (பெரியண்ணா)

நாவற்காடு,அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை இராசேந்திரம் நேற்று(16.01.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் இராசமணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற குணராசா-துரையம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சர்வகுணேஸ்வரியின் பாசமிகு கணவரும் இராசவரஉதயம்(மாவட்ட நீதி மன்றம்-யாழ்ப்பாணம்),சகுந்தலா காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் சசிகலா(மருந்தாளர்-நெதேன் சென்றல் மருத்துவமனை -திருநெல்வேலி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2017)செவ்வாய்க்கிழமை காலை 8.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் அச்சுவேலி தெற்கு முழுக்கன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாவலம்பதி வீதி,**
**நாவற்காடு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**த.இரத்தினசிங்கம்**
**(மெக்கானிக் சித்தப்பா)**

## மரண அறிவித்தல்

### திருமதி கமில்ரன் கெலன் றொக்ஸ் (யாழ்ப்பாணம்)

**யாரிடம் செல்வோம் இறைவா**
**வாழ்வு தரும் வார்த்தை எல்லாம்**
**உம்மிடம் அன்றோ உள்ளது**



மலர்வு 1948 .03. 26 உதிர்வு 2017.01.16

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமில்ரன் கெலன் றொக்ஸ் 16.01.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் எட்மன்ட் பேணாட் கமில்ரன் இன் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜேக்கப் நல்லையா - கொலஸ்ரிகா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான எட்மென்ட் - பூமணி தம்பதியரின் அன்புமருமகளும் இன்னோசன் ஜோசப் (லண்டன்), அன்றாஜேஸ் (மணி), லோறமன்ட் (சின்ராசா - இத்தாலி) காலஞ்சென்ற அன்ரன் யோகராசா மற்றும் திருமதி மொனிக்கம்மா (றதி - மானிப்பாய்), Dr.நிக்சன் டொறக்ஸ் (மானிப்பாய்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் லிஸ்ரன் ஜோய் (பிரான்ஸ்), பற்றீசியன், றெமிங்ரன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற யூட்கில்ரன் மற்றும் சாள்ரன் றோய் (யாழ்ப்பாணம்), ஜேர்மின் சுவீற்றி (சுவிஸ்), பொலின் சிபோறா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் மரீனா (பிரான்ஸ்), பிரியா (பிரான்ஸ்), மாலினி (யாழ்ப்பாணம்), நியூட்டன் (சுவிஸ்), ஜொனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் அல்ரன், செறின், சொபியா (பிரான்ஸ்), டொறிங்ரன், பிறிங்ரன் (பிரான்ஸ்), கபிஷன், கபினா, கபினயா (யாழ்ப்பாணம்), அனா (சுவிஸ்), ஜொலின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17/1 கோயில் வீதி முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இருந்து (18.01.2017) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி இடம் பெற்று பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 17/1. முதலாம் ஒழுங்கை கோயில் வீதி. யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**கமில்ரன் (கணவர் -077 944 9934)**

## வறட்சி நிவாரணமாக டில்லி அரசிடமிருந்து ரூபா 39,565 கோடியை கேட்கிறது தமிழ்நாடு

சென்னை, ஜன. 17

புதுடில்லி அரசிடம் இருந்து 39 ஆயிரத்து 565 கோடி ரூபாவை வறட்சி நிவாரண நிதியாகக் கேட்கிறது தமிழ்நாடு அரசு. பருவமழை பொய்த்ததால் தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது. விளைச்சல் இல்லாமல் பயிர்கள் கருகியதைக் கண்டு பல விவசாயிகள் உயிரை மாய்த்துக் கொண்டனர். எனவே, தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று புதுடில்லி அரசுக்கு பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. தமிழகம் எதிர்கொண்டுள்ள பாதிப்புத் தொடர்பான விரிவான விளக்கம் அடங்கிய முறைப்பாடு புதுடில்லி அரசுக்கு நேற்று வழங்கப்பட்டது. அதில் வறட்சி நிதியாக 39 ஆயிரத்து 565 கோடி ரூபா தமிழ் நாட்டுக்கு வழங்க வேண்டும் என்றும் அவற்றில் ஆயிரம் கோடியை உடனடியாக வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

எஸ்.மல்லிகா

# மறைந்தும் மறையாத மக்கள் தொண்டன்

## இன்று அன்னாரின் நூறாவது பிறந்ததினம்

தமிழக மக்கள் மனங்களில் மட்டுமன்றி, உலக மக்கள் மனங்களிலும் அழுத்தமாகப் பதிந்த பெயர் எம்.ஜி.ஆர். அவர் உண்மையான மக்கள் தொண்டனாக வாழ்ந்தமைதான் அதற்குக் காரணம். பொது வாழ்க்கையிலும் சரி, அரசியலிலும் சரி- இவரது இடத்தை யாராலும் நிரப்ப முடியாது.

**செல்வாக்குக் குறையாத தலைவர்**

எந்தத் தலைவர்களும் பதவிக்குச் சென்றால் செல்வாக்குக் குறைவதுதான் இயல்பு. ஆனால், எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரை பதவிக்குச் சென்ற பிறகுங்கூட அவர் செல்வாக்கு வளர்ந்த வண்ணம்தான் இருந்தது. அவர் ஆட்சியில் இருந்தவரை யாராலும் அவரைத் தோற்கடிக்க முடியவில்லை. அவர் மறைந்து 30ஆண்டுகள் சென்றபிறகும் அவரது செல்வாக்குச் சரியவில்லை என்று கருத்துக்கணிப்புக்கள் கூறுகின்றன.

இருந்த பொழுது மட்டுமல்ல, மறைந்த பின்னரும் மக்களின் இதயத்தில் நீங்காத இடத்தை எவ்வாறு எம்.ஜி.ஆர். பெற்றார் என்பது வியப்புக்குரியது மட்டுமல்ல, ஆய்வுக்குமுரியது. அவருக்கும் மக்களுக்கும் இருந்த பிடிப்பு மகத்தானது. அவரோடு ஒப்பிட்டுக் கூறுவதற்கு இந்த அவனியில் எந்த மனிதனும் பிறந்ததில்லை, இனியும் ஒருவன் பிறப்பதில்லை என்றுதான் கூறவேண்டும்.

**விழிப்புணர்ச்சி ஊட்டிய நடிகன்**

தனது புரட்சி நடிப்பினால் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் எம்.ஜி.ஆர். இவர் திரையில் தோன்றி நடித்தார் என்பதை விட, வாழ்ந்து காட்டினார் என்றுதான் கூற வேண்டும். வாழ்வியல் விழுமியங்கள், அறக் கருத்துக்கள், பெரியோரை மதிக்கும் பாங்கு முதலானவற்றால் நிறைந்த அவருடைய திரைப்படங்கள், அர்த்தம் செறிந்தனவாக இருக்கும். மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டும். இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டும்.

திரையுலக வாழ்க்கையில் அவர் பட்ட துன்பங்கள் எண்ணற்றவை. அவர் சந்தித்த சத்தியசோதனைகள் கணக்கற்றவை. அவர் ஏறி இறங்கிய இமயக் கொடுமுடிகள் பல்லாயிரம். அவர் கடந்து வந்த பாதை ரோஜா மலர்களால் தூவப்பட்ட மென்மையான பாதையல்ல. அது கற்களும் கூரிய முட்களும் நிறைந்த கரடு முரடான பாதை. அதில் பயணித்து அவர் ஈட்டிய வெற்றிகள் ஏராளம்.

**சவால்களை முறியடித்த மன்னன்**

எம்.ஜி.ஆரின் வளர்ச்சியைக் கண்டு பொறுக்க மாட்டாதவர்கள்- அவரை வேரோடு அறுத்தெறியக் காத்திருந்தவர்கள் பல்லாயிரக் கணக்கானோர். தன் வாழ்க்கையில் பட்ட அத்தனை சவால்களையும் முறியடித்து வெற்றிவாகை சூடிய மன்னாதி மன்னன் எம்.ஜி.ஆர். மூன்று முறை கொடிய நோயினால் பீடிக்கப்பட்டுத் தப்பியவர்- இவ்வுலகில் முப்பிறவி எடுத்தவர்.

எம்.ஜி.ஆர். மக்களை எவ்வாறு நேசித்தாரோ, அதேபோல மக்களும் அவரை நேசித்தார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. குறிப்பாக, அவர் நோய் வாய்ப்பட்டிருந்த பொழுது சாதி, மதம், மொழி பேதம் பாராமல் அனைத்துத் தரப்பு மக்களும் இறைவழிபாடு நடத்தியமை இதற்கு நல்ல சான்று.

இது வரலாற்றில் எந்த ஒரு தலைவனுக்கும் கிடைத்திராத மக்கள் பிரார்த்தனை. 'நீங்க நல்லாயிருக்க வேண்டும் நாடு முன்னேற, இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற' என்ற பாடல் ஒலி அன்று நாடு முழுவதும் கேட்காத நாளில்லை.

**மக்களின் நலனறிந்த முதல்வர்**

1984ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தல் நடைபெற்றது. அப்பொழுது தேர்தலில் போட்டியிட்ட எம்.ஜி.ஆர்.- அவரது மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயில் திடீரென அடைப்பு ஏற்பட்டு உடல்நலம் குன்றியிருந்தார். அவர் உயிருடன் இருக்கிறாரா, உணர்வுடன் இருக்கிறாரா என்ற சந்தேகங்கள் அரசியல்வாதிகள் மத்தியில் எழுப்பப்பட்டன. ஆனால், தமிழக மக்கள் சிறிதும் தயக்கமின்றி அவருக்கு வாக்களித்து அவரை மாபெரும் வெற்றி பெறச் செய்தனர். அந்தளவுக்கு எம்.ஜி.ஆர். மக்கள் இதயமென்னும் சிம்மாசனத்தில் கோலோச்சியிருந்தார்.

அமைச்சரவைக் கூட்டத்திலுங்கூட எந்தத் திட்டங்கள் ஆனாலும் பட்ஜெட்டுகள் போடுவது என்றாலும் பாமர மக்களை எந்தளவுக்குப் பாதிக்கும் என்று பார்த்தே எம்.ஜி.ஆர். ஒப்புதல் வழங்குவார். மத்திய-மாநில அரசுகளுக்கு வரவு-செலவில் பற்றாக்குறை ஏற்பட்டால், மக்களின் மீது வரி போடலாம் அல்லது வங்கிகள் மூலம் கடன் பெறலாம். ஆனால், குடும்பஸ்தனுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டால் அவன் எங்கே போவது? ஆகவே, அரசின் திட்டங்கள் பாமர மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வகையில் அமைய வேண்டும் என்று எம்.ஜி.ஆர். கூறுவார். இப்படிப்பட்ட கருணையுள்ளம் எம்.ஜி. ஆரைத் தவிர யாருக்கு வாய்க்கும்?

**அரசியல்வாதிகளுக்கு சிறந்த பாடம்**

அரிசி விலையையும் பஸ் கட்டணத்தையும் உயர்த்துவதற்கு அவர் ஒருபோதும் ஒப்புக் கொள்ளமாட்டார். ஏழைகள் வாழ்வு ஏற்றங்காண அவர் அல்லும் பகலும் உழைத்தார். குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டம், இலவச வேட்டி- சேலை வழங்கும் திட்டம், சிறு விவசாயிகளுக்குத் தண்ணீர் இறைக்கும் பம்பிகளுக்கு இலவச மின்சாரம் போன்ற பல திட்டங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை.

மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, அரசின் நிதி நிலை சரியானால் போதும் என்ற கொள்கையை அவர் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதேயில்லை. அதனாலே அவரது ஆட்சி ஏழைகளின் ஆட்சியாகவே திகழ்ந்தது. இவரிடமிருந்து அரசியல்வாதிகள் கற்றுக் கொள்வதற்கு ஏராளம் விடயங்கள் உள்ளன.

**அண்ணாவின் அருமைத் தம்பி**

ஒருமுறை அறிஞர் அண்ணாவுடன் எம்.ஜி.ஆர். சென்னையிலிருந்து திருச்சிக்குக் காரில் சென்றார். அண்ணா வழக்கம் போல் காரின் முன் இருக்கையில் அமர்ந்திருந்தார். எம்.ஜி.ஆர். பின் இருக்கையில் அமர்ந்திருந்தார். பெரம்பலூருக்கு அப்பால் சென்ற பொழுது காரை சாலையின் ஓரமாக நிறுத்தினார். அப்பொழுது அந்தப்பகுதியில் ஆடு, மாடு மேய்த்துக்கொண்டிருந்த இளைஞர்கள் காரிலிருந்த கொடியைப் பார்த்துவிட்டு, நேராக முன் இருக்கையில் அமர்ந்திருந்த அண்ணாவிடம்- அவர் அண்ணா என்று தெரியாமல், எம்.ஜி.ஆர். வந்திருக்கிறாரா? என்று கேட்டார்கள். அதற்கு அண்ணா கொஞ்சங்கூட முகம் சுளிக்காமல், அதோ பின்னால் இருக்கிறார் என்று கூறினார். அப்பொழுது எம்.ஜி.ஆர். என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப்போனாராம். அண்ணா எத்தகைய தலைவர் என்பதையும் தன்னோடு இருப்பவர்கள் தன்னைவிடச் செல்வாக்காக இருக்கும் பொழுது பொறாமைப்படுவதற்குப் பதிலாகப் பெருமைப்பட்டவர் என்றும் இச்சம்பவத்தை கூறி எம்.ஜி. ஆர். இறும்பூதெய்தினார்.

அண்ணாவின் நிழலில் அருமைத் தம்பியாக வளர்ந்த எம்.ஜி. ஆர், அவரின் பெயரை இறுதி வரை உச்சரித்தார். சினிமாப் பாடல்களில் ஒரு இடத்திலாவது அண்ணாவின் பெயரை உச்சரித்து, அவருக்கு இதயத்தால் துதிபாடினார். சான்றாக, 'தம்பி நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று, அதை நான் உனக்கு சொல்லட்டுமா இன்று, என்றும் நல்லவர்க்கு வாழ்வு வரும் நாளை, இது அறிஞர் அண்ணா எழுதி வைத்த ஓலை' என்று நேற்று இன்று நாளை திரைப்படத்தில் அவர் பாடி நடித்த பாடலைக் குறிப்பிடலாம். அண்ணாவிடம் ஆலோசனை கேட்காமல் எம்.ஜி.ஆர். எதுவுமே செய்ததில்லை. ஒரு தலைவருக்கு இலக்கணம் அறிஞர் அண்ணா என்றால், தகுதியான வாரிசுக்கு இலக்கணம் எம்.ஜி.ஆர். தான்.

**சத்துணவுத் திட்டத்தின் நாயகன்**

எம்.ஜி.ஆர். இளமையில் கொடிய வறுமையைச் சந்தித்தவர். பொதுவாக, வறுமை கொடிது. அதைவிடக் கொடிது இளமையில் வறுமை. தனது அண்ணனும் தானும் சிறுவயதில் கும்பகோணத்தில் இருந்த பொழுது மூன்று நாள்கள் பட்டினி கிடந்ததாகவும் பரிதாபப்பட்டு ஒரு வீட்டைச் சேர்ந்த ஒரு தாய் சிறிதளவு அரிசியை எம்.ஜி.ஆரின் அன்னையிடம் கொடுத்துக் குழந்தைகளுக் காவது கஞ்சி காய்ச்சிக் கொடுக்கும்படி கூறியதாகவும் எம்.ஜி.ஆர். தனது சுயசரிதை நூலில் குறிப்பிட்டுள்ளார். அன்று அந்த எதிர்வீட்டுத் தாய் செய்த உதவியால்தான் இன்று உங்களுக்கு ஒரு எம்.ஜி.ஆர். கிடைத்துள்ளார் என்று பின்னாள்களில் எம்.ஜி.ஆரே கூட்டங்களில் பேசினார்.

இந்த அனுபவத்தால்தான் தமிழ்நாட்டில் பிறக்கும் எந்தக் குழந்தையும் பட்டினி கிடக்கக்கூடாது என்றும் ஒரு வேளையாவது உணவுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் கருதியால்தான் 1982ஆம் ஆண்டு சிறுவர்களுக்கான சத்துணவுத் திட்டம் உதயமானது. இத்திட்டம் கொண்டுவரவேண்டும் என்ற கருத்தை அதிகாரிகள் ஏற்கவில்லை. அமைச்சரவைக் கூட்டத்தில் கூட சில அமைச்சர்களுக்குச் சந்தேகம் தீரவில்லை. இத்திட்டத்தால் பணம் செலவாகுமே தவிர, பயன் இருக்காது என்றே பெரும்பாலானவர்கள் கருத்துத் தெரிவித்தனர். இதனால் ஊழல் பெருகும் என்றும் கூறினார்கள். ஆனால், எம்.ஜி.ஆரைப் பொறுத்த வரை இத் திட்டத்தை எப்படியும் செயற்படுத்தியே தீர வேண்டும் என்று உறுதியாக இருந்தார். சத்துணவுத் திட்டம் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பொழுது அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.கருணாநிதி, பள்ளிகளில் நடைமுறைப் படுத்தும் சத்துணவுத் திட்டத்திற்குப் பதிலாக ஏழைகளின் குடும்பங் களுக்குக் குறிப்பிட்ட தொகையை உதவியாக வழங்கலாம் என்றார். அப்படி வழங்கப் பட்டால் குழந்தைகளுக்குச் சத்துணவு கிடைப்பதற்கான உத்தரவாதம் இல்லையே என்று அரசின் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர் இத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாடசாலைகளில் சத்துணவுத் திட்டத்தைச் செயற்படுத்தியதால் மூன்று நன்மைகள் ஏற்பட்டன. ஒன்று- அனைத்துப் பிள்ளைகளும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்டமையால், சமத்துவம் ஏற்பட்டது. இரண்டு- படிக்கின்ற காலங்களில் பாடசாலைகளில் பிள்ளைகளுடைய இடைநிற்றல் தவிர்க்கப்பட்டது.

மூன்றாவது- சவலைப் பிள்ளைகள் என்ற நிலையை மாற்ற இன்று முட்டை வழங்குவது வரை அது சத்துணவாக ஆக்கப்பட்டுள்ளது. 'ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி' என்று எம்.ஜி.ஆர். அரசிளங்குமரி திரைப்படத்தில் பாடி நடித்ததற்கிணங்க, இந்த இரண்டையும் வளர்க்க அரும்பாடுபட்டு அதில் மாபெரும் வெற்றியும் கண்டார்.

இன்று அன்னாருடைய நூறாவது பிறந்த தின நினைவு. இத்தினத்தையொட்டி, தமிழக அரசு சிறப்புத்தபால்தலை வெளியிடுகின்றது. அத்துடன், பொது விடுமுறையும் அறிவித்துள்ளது. 24.12.1987ஆம் ஆண்டு இப்பூவுலகை விட்டு அவர் மறைந்தாலும், மக்கள் மனங்களை விட்டு மறையாத தலைவராக இன்றும் வாழ்கிறார்.



## பேக்கரி...

போதிலும் நாம் இறுதித் தீர்மானத்தை இன்னமும் மேற்கொள்ளவில்லை. ஒரு கிலோ கிராம் மாஜரினுக்கு 185 ரூபாவும், ஒரு லீற்றர் பாம் ஒயிலுக்கு 120 ரூபாவும் வரியாக மாத்திரம் செலுத்துகின்றோம். அரசு உள்ளீட்டுப் பொருள்களுக்கான வரியைக் குறைக்கும் என்று நம்புகின்றோம்' என ஜெயவர்த்தன குறிப்பிட்டார். (த-5)

## காலம்

அவர் தெரிவித்ததாவது:

கொழும்பு அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையே அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் நியாயமான முடிவு எட்டப்பட வேண்டும். இந்த வழிமுறையானது இலங்கையில் நின்று நிலைக்கும் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் உறுதிப்படுத்தும் என்று நாம் நம்புகின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டமே பல்வேறு துன்பகரமான முறையற்ற நடவடிக்கைகள் இடம்பெறுவதற்கு வழிசமைத்தது. இதன் காரணமாகவே புதிய சட்டமானது பன்னாட்டு மனித உரிமைத் தராதரங்களுடன் ஒன்றியதாக அமையவேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம் - என்றார். (த-5)

## 40 ஆண்டுகளின்...

மாதங்களுக்கு மாத்திரமே குடிதண்ணீர்த் தேவைக்குப் பயன்படுத்த முடியும்.

நாட்டின் மொத்த மின்சார உற்பத்தியில், 36 வீத பங்களிப்பை வழங்கும் நீர்மின் உற்பத்தி கடுமையான சரிவைச் சந்திக்கவுள்ளது. இந்த நிலையைக் கருத்திற் கொண்டு, மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரச அலுவலகங்களில் வளிபதனி சீராக்கி (ஏசி) 26 பாகை செல்சியசுக்குக் கீழ் குறைக்கவேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சுற்றுஅறிக்கை அனுப்பவுள்ளார் என்று அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்தார். இதன் மூலம் மின்சாரத்தை ஓரளவு சேமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வறட்சியை எதிர்கொள்வதற்கான முழுமையான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

## டாவோஸ்...

போது பேச்சு நடத்தவுள்ளார்.

இதேவேளை, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சுவீடன் நாட்டு அயலுறவுத்துறை அமைச்சரின் அழைப்பில் அந்த நாட்டுக்கு இன்று பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பொருத்து...

நிகழ்வு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருத்து வீட்டுக்கு எதிராக அமைச்சுக்குள் இருந்து போராட்டம் நடத்தியவர் சிவஞானசோதி. தனது பதவியைத் துச்சம் என்று மதித்து, மக்களுக்குப் பொருத்தமில்லாத திட்டத்துக்கு எதிராகப் போராடினார். வடக்கு மக்களுக்கு வீட்டுத் திட்டம் என்ற பெயரில் பொருத்து வீடு- முன்நிர்மாணிக்கப்பட்ட வீடு என்ற இரும்புக் கூட்டை வழங்குவதற்கு சிலர் முயன் றனர். ஆனால் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளராக இருந்த சிவஞானசோதி அதனை எதிர்த்தார்.

பொருத்து வீடு தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபாலவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. எங்கள் நாட்டின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் மக்களுக்குப் பொருத்தமற்ற விடயங்களைச் செய்யமாட்டார். பொருத்து வீடு தொடர்பில் இருந்த அச்சம் நீக்கப்பட்டுள்ளது. எனினும் மக்கள் விரும்பும் பட்சத்தில் அதனை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவையும் உள்ளது.

எது எவ்வாறாயினும் பொதுமக்களுக்குப் பொருத்தமற்ற செயற்திட்டங்களைத் தற்போதைய அரசு செய்யாது என்று நம்புகின்றேன்.

ஆரம்பத்தில் நல்லிணக்கச் செயற்பாடுகளை வடக்கு - கிழக்கில் மட்டும் முன்னெடுக்கவேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் அரச தலைவர் நல்லிணக்க செயற்பாடுகள் வடக்கு-கிழக்கு மக்களுக்கு மட்டும் உரியது அல்ல. நாட்டின் அனைத்து மக்களுக்கும் அத்தியாவசியமானது. நாடு முழுவதும் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்ற கொள்கையை வகுத்தார். நல்லிணக்கச் செயற்பாடுகள் அதற்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (த-5-8)

## குடிதண்ணீர்...

என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டார்.

தற்போது நாட்டில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக 9 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 598 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஐ.நாவின்...

அபிவிருத்தித் திட்ட வதிவிடப் பிரதிநிதி, உலக உணவுத் திட்ட பிரதிநிதியும் இலங்கைக்கான பணிப்பாளருமான பிரண்டா பார்ட்டன் மற்றும் ஐ.நா. உலக உணவுத் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏர்தரின் கசின் ஆகியோர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர். நாட்டில் நிலவும் வறட்சி நிலை குறித்தும் அதற்கான நிவாரண ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடினர்.

வறட்சி நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக செயலணியொன்றை அமைத்தமை தொடர்பாக அரச தலைவருக்கு நன்றி தெரிவித்த ஐ.நா. உயர் அதிகாரிகள், இந்த இடர் நிலை குறித்து பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.

முதல் நடவடிக்கையாக வறட்சி நிலை தொடர்பான தொடர்பாடல், மதிப்பீடு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிபுணர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

வறட்சி காரணமாகத் தொழில்களை இழந்த கிராமிய மக்களுக்குத் தொழில்களைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு உணவு அல்லது பணத்தைத் தமது நிறுவனத்தால் வழங்கமுடியும் என்று உலக உணவுத் திட்டப் பிரதிநிதி தெரிவித்தார்.

உணவு அல்லது பணம் வழங்கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் பல மாவட்டங்களில் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது என்றும் அவர் கூறினார். இது ஏழை மக்கள் தனிப்பட்ட கடன் வழங்குநர்களிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன்களைப் பெறுகின்ற நிலையைத் தவிர்க்க உதவும் என்றும் அவர் தெரிவித்தார். இலகு கடன்களை வழங்கும் அரச முகவர் நிலையங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்ள மக்கள் ஊக்குவிக்கப்படவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

வறட்சியால் ஏற்படக்கூடிய முக்கிய பிரச்சினை குடிதண்ணீர்ப் பற்றாக் குறையாகும் என்றும், அது பல்வேறு நீண்ட கால சுகாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நீர் வழங்க போதுமானளவு பவுசர்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் வறட்சி நிலை குறித்து கரிசனை செலுத்திவரும் ஐ.நா. அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால நிலமைகளை மேலும் கண்காணிப்பதற்காக ஒவ்வொரு வாரமும் நடைபெறும் செயலணியின் கூட்டங்களுக்கு சமுகமளிக்குமாறு அவர்களுக்கு அழைப்பு விடுத்தார் - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## கடற்படை...

கடத்தப்பட்டுக் கப்பம் கோரப்பட்டு, காணாமற்போகச் செய்யப்பட்டிருந்தார். சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில், கடற்படை அதிகாரியான, லெப்.கொமாண்டர் அனில் தம்மிகவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கைது செய்தனர்.

இவரைக் கைது செய்வதற்கு, கடற்படையின் கடுமையான எதிர்ப்பை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்திக்க நேரிட்டது.

வான் ஒன்றுடன் கடத்தப்பட்ட இளைஞன், வெலிசறை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணாமற்போகச் செய்யப்பட்டிருந்தார். இளைஞனின் வான், பாகம் பாகமாகப் பிரித்து, விற்பனை செய்யப்பட்டதாக விசாரணையில் கண்டறியப்பட்டது. பிரிக்கப்பட்டு விற்கப்பட்ட வாகனத்தின் எஞ்சிய சில பகுதிகள், வெலிசறை கடற்படை முகாமில் இருந்து மீட்கப்பட்டன.

கடத்தப்பட்ட தமிழ் இளைஞனின் குடும்பத்தினரிடம் இருந்தும், இந்த கடற்படை அதிகாரி கப்பம் பெற்றுள்ளார் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. (த-5)

## 2021 ஆம்

சேனவே போட்டியிடுவார்.

இவ்வாறு அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

காலியில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் சந்திம வீரக்கொடி, அடுத்த அரசுத் தலைவருக்கான தேர்தல் 2021 ஆம் ஆண்டில் நடக்கும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே, அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு மிகவும் பொருத்தமானவர்.

மைத்திரிபால சிறிசேனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த அரசுத் தலைவருக்கான தேர்தல் வேட்பாளர் என்பதில், எந்த சந்தேகமும் இல்லை, என்று தெரிவித்தார். (த-5)

## எல்லை...

இன்று கையளிக் கப்படவுள்ளதாக, எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரி வித்தார்.

அறிக்கையில் ஆணைக்குழுவின் 5 உறுப்பினர்களுமே கையெழுத்திட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தாமதமடைவதற்கு, எல்லை நிர்ணய அறிக்கை வெளியிடப்படாமையே காரணம் என்று அரசு தரப்பினால் தெரிவிக்கப்பட்டு வந்தது. அறிக்கை கையளிப்பதற்குக் கடந்த மாதம் 23ஆம் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைச்சர் பைசர் முஸ்தபா திடீரென்று வெளிநாடு சென்றிருந்தார். அறிக்கை கையளிப்பை ஒத்தி வைக்காமல், இராஜாங்க அமைச்சரிடம் அறிக்கை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதுவும் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது. ஆணைக்குழுவின் அறிக்கை பூர்த்தியாகவில்லை என்று காரணம் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் அறிக்கை கையளிப்பதற்கு ஆணைக்குழு உறுப்பினர்கள் சென்றனர். அறிக்கையில் ஆணைக்குழுவின் 5 உறுப்பினர்களும் கையெழுத்திடவில்லை எனத் தெரிவித்து அமைச்சர் அதனை ஏற்க மறுத்திருந்தார்.

இதன் பின்னர் கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வைத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அறிக்கை கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினமும் அறிக்கை கையளிக்கப்படவில்லை.

இந்த நிலையிலேயே இன்றைய தினம் அறிக்கை கையளிக்கப்படவுள்ளது. ஆணைக்குழுவின் 5 உறுப்பினர்களும் கையெழுத்திட்டுள்ளனர். ஆணைக்குழுவின் தலைவர் அசோக பீரிஸ் நேற்று மாலை கருத்துத் தெரிவித்தபோது, இன்று அறிக்கை கையளிப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். இதுவரை அதில் மாற்றமில்லை என்றார். (த-5)

## மனித...

நாட்டின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டது.

மனித உரிமைகள் தேசிய வேலைத் திட்டம் அரசால் தயாரிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதற்குப் பெரும்பாலும் அனுமதி கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

நல்லிணக்கத்தை அடைவதற்குக் குறுக்கு வழியில்லை. உரிய வழியிலேயே அதனைச் சென்று அடைய முடியும். தமது அன்புக்குரியவர்கள் காணாமற்போனமையால் பலர் இப்போதும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் அறிவேன் - என்றார். (த-5)

## ஐ.நா.

குறிப்பிட்டார்.

இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

அமைச்சர் மனோ கணேசனுக்கும், ஐரோப்பிய ஒன்றியத் தூதுவருக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையைப் பெற, இன்னும் பல கடமைகளை இலங்கை அரசு கடக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஐரோப்பிய ஒன்றியம் இருக்கின்றது. தற்போது நிகழ்ந்திருப்பது இதுபற்றிய ஐரோப்பிய ஆணைக் குழுவின் ஒரு பரிந்துரையே தவிர, இறுதி முடிவு அல்ல. ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இது பற்றி விவாதிக்கப்பட்டு உரிய முடிவு இன்னமும் சுமார் நான்கு மாதங்களின் பின் அறிவிக்கப்படும்.

இப்போது அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு வரும் மனித உரிமை நடவடிக்கைத் திட்டம், ஜெனிவாவில் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள், பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம், காணாமற்போனோர் அலுவலக அமைவு, நல்லிணக்கக் கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கை ஆகிய விவகாரங்கள் தொடர்பில் இலங்கை அரசு எடுத்துவரும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளைப் பொறுத்தே வரிச் சலுகைகள் வழங்கப்படுவதில் இறுதி முடிவு தங்கியுள்ளது என்ற நிலைப்பாட்டிலேயே தான் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டுங் லை மார்க் தெரிவித்தார் - என்றுள்ளது. (த-5)

## விலகினார்...

தொடர்பில் அறிவிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பை அவர் நேற்று நடத்தினார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

தேசிய சபையொன்றை உருவாக்குவதற்காகவே நான் சுயாதீனமாக செயற்படவுள்ளேன். அந்தச் சபையில் இணைவதற்கு முன்வருமாறு நாட்டிலுள்ள புத்திஜீவிகளுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

அரசு எப்படிச் செயற்படவேண்டும் என்று ஆலோசனை வழங்கப்படும். கிராமங்களுக்குச் சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். என் மீது எவரும் கோபப்படத் தேவையில்லை. நான் அரசியல் எதிரியும் கிடையாது. மக்களுக்காகவே இந்த முடிவை எடுத்துள்ளேன்.

எதிரணிப் பக்கம் சென்றுவிடுவீர்களா என்று சிலர் கேட்கின்றனர். எதிர் பக்கம் இருப்பவர்கள் யார் என்று மக்களுக்குத் தெரியும். அதை நான் செய்ய மாட்டேன். புதிய கட்சியும் ஆரம்பிக்கமாட்டேன். தேசிய சக்தியொன்றை உருவாக்குவதே இலக்காகும் - என்றார்.

ஜாதிக ஹெல உறுமயவின் உ[illegible] பீடத்துடன் ஏற்பட்டுள்ள முரண்பாடு - அ[illegible]ன் செயற்பாடு உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டே அவர் சு[illegible]தீனமாகச் செயற்படும் முடிவை எடுத்து[illegible]ளார் என்று கொழும்பு அரசியல் வட்டார[illegible]ரில் பேசப்படுகின்றது. நாடாளுமன்றம் [illegible]வரும் 24 ஆம் திகதி கூடவுள்ளது. அ[illegible]றைய தினம் சிறப்பு அறிவிப்பொன்றை [illegible]ன தேரர் வெளியிடுவார் என்று எதி[illegible]ர்க்கப்படுகின்றது. (த-5)



# நரம்மல்லவை தோற்கடித்தது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், ஜன. 17
இலங்கை கிரிக்கெட் சபை தேசிய ரீதியில் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நரம்மல்ல அணியைத் தோற்கடித்தது யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி.
தம்புள்ள பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய நரம்மல்ல அணி 39 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 134 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. லோறன்ஸ் பெற்ற 31 ஓட்டங்களே அதிகபட்சம். அவரை விட தரனிக்க 30 ஓட்டங்களையும் குணதிலக 22 ஓட்டங்களையும், சம்பத் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் விதுசனன், தர்சன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் ஜேம்ஸ் ஜான்சன் 2 இலக்குகளையும் மயூரன் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.
135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணி 29.4 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக வினோத்குமார் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், எட்வேட் எடின் 37 ஓட்டங்களையும், கௌதமன்15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மாதவ 3 இலக்குகளையும் சந்துவான் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன.17
**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், சுயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது.
**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளது.
**குறிஞ்சிக்குமரனின் கால்பந்தாட்டம்**
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்துமன்னார் சென். ஜோசவ்வாஸ் ஐக்கிய அணி மோதவுள்ளது.
(ம-23-108)

## வலிகாமம் எவ்.ஏ. தொடர்; குறிஞ்சிக்குமரன் சம்பியன்

கரணவாய், ஜன .17
வலிகாமம் லீக்கின் எவ்.ஏ கிண்ணத்தை நியூவாரியஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி கைப்பற்றியது குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம்.
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வலிகாமம் லீக் கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான தொடரின் இறுதியாட்டம் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வலிகாமம் நியூவாரியஸ் விளையாட்டுக் கழகமும் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் 15 நிமிடங்கள் வரை எந்த அணியும் தனித்து ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் குறிஞ்சிக்குமரன் அணியின் கஜமுகன் முதர் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடங்களில் கஜந்தன் 34 ஆவது நிமிடத்தில் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய முதற் பாதியின் முடிவில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது குறிஞ்சிக்குமரன்.
இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் நியூவாரியஸ் முதற் கோலைப் பதிவுசெய்தது. எனினும் அந்தக் கோலே ஆட்டத்தின் இறுதிக் கோலாக அமைய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வலிகாமம் லீக்கில் சம்பியனானது குறிஞ்சிக்குமரன். (ம-108)

## சதுரங்க முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.17
நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நட்பு வருடத்துக்கான (இருபாலாருக்குமான) சதுரங்கத் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் உள்ளரங்கில் அண்மையில் இடம்பெற்றது. தொடரின் முடிவுகள் வருமாறு.
ஆண்கள்பிரிவில்முதலாம்இடத்தை மோ.அஜித்குமார் (கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம்), இரண்டாம் இடத்தை ப.மோகரூபன் (மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம்), மூன்றாம் இடத்தை க.கௌரிதாசன் (அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக் கழகம்) ஆகியோர் தமதாக்கினர்.
பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை ந.தனுஸ்பிரியா (நண்பர்கள் விளையாட்டுக் கழகம்), இரண்டாம் இடத்தை உ.சுமித்ரா தேவகி (நண்பர்கள் விளையாட்டுக் கழகம்), மூன்றாம் இடத்தை ரூ.அபிராமி (நண்பர்கள் விளையாட்டுக் கழகம்) ஆகியோர் தமதாக்கினர். (ம-23)

## வீனஸ் வென்றார்

ஆஸ்திரேலிய ரெனிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதல் சுற்று ஆட்டமொன்றில் வீனஸ் வில்லியம்ஸ் வெற்றிபெற்றார்.
அமெரிக்க வீராங்கனையான வீனஸை எதிர்த்து உக்ரைன் வீராங்கனை கேதரினா மோதினார். ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 7:6, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் வீனஸ் வில்லியம்ஸ். இதனையடுத்து அவர் நேர் செற் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார். (ம)



## விளையாடும் பதினொருவரில் வேண்டும் மக்ஸ்வெல்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டிருந்த மக்ஸ்வெல் மீண்டும் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் அவர் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமிலும் சேர்க்கப்பட வேண்டும் என்று ஆதரவு வலுக்க ஆரம்பித்துள்ளது.
இந்தத் தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இந்திய ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதகமானவை என்பதால் சுழல் பந்துவீச்சைக் கருத்திற் கொண்டே ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டது. நான்கு சுழல் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். மக்ஸ்வெல் சுழல்பந்துவீச்சை எதிர்த்தாடுவதிலும் வீசுவதிலும் திறன்படைத்தவர். இதனையடுத்தே அவருக்கு ஆதரவு பெருகி வருகிறது. (ம)

## சென். பற்றிக்ஸ் மூன்றாமிடம்



யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.
யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்த மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் இடம்பெற்றது. சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதியது. 9:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. (ம-23)

# பிரம்மிக்க வைத்தார் யாதவ்; கோக்லியிடமிருந்து பாராட்டு

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் கேதர் யாதவின் ஆட்டம் பிரம்மிக்க வைக்கும் படியாக அமைந்தது என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.





நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம் பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 350 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா 63 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, தவான், லோகேஸ்ராகுல், டோனி, யுவராஜ் போன்ற முக்கிய வீரர்களை இழந்தது. இதனையடுத்து கோக்லியும் கேதர் யாதவும் இணைப்பாட்டமாக 200 இற்கும் அதிகமான ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றிக்கு வித்திட்டனர். 76 பந்துகளில் 120 ஓட்டங்களை யாதவ் குவித்தார். அவர் ஆட்டநாயகனாகத் தெரிவானார். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

நான் பார்த்த தனிநபர் இன்னிங்ஸில் கேதரின் இன்றைய (நேற்றுமுன்தினம்) ஆட்டமும் முக்கியமானது என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# போராடி வென்றார் நிசிகோரி

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் போராடி வெற்றி பெற்றார் நிசிகோரி.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஐந்தாம் இடத்தில் உள்ள வீரரான நிசிகோரியை எதிர்த்து ரஷ்ய வீரர் குஸ்னெட் கோவ் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 5:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் நிசிகோரி. அடுத்த இரு செற்களையும் 6:1, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை வகித்தார். நான்காவது செற் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் குஸ்னெட் கோவின் வசமானது. இதனால் இறுதி செற்றில் வெற்றி பெறுபவரே அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறலாம் என்ற நிலையில் அந்த செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னேற்றம் கண்டார் நிசிகோரி. (ம)



# நியூசி. அணி திரில் வெற்றி

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இறுதிநாளான நேற்று பங்களாதேஷ் திலீ சரிவுகாண திரில் வெற்றிபெற்றது நியூசிலாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. சகிப் அல் சகனின் இரட்டைச் சதம், ரகிமின் சதம் ஆகியன கைகொடுக்க 595-8 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது பங்களாதேஷ். அதிகபட்சமாக சகிப் அல் ஹசன் 217 ஓட்டங்களையும், ரகிம் 159 ஓட்டங்களையும், கக்கியூ 64 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வாக்நெர் 4 இலக்குகளையும், போல்ட், சவுத்தி இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து 539 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக லாதம் 177 ஓட்டங்களையும், சான்நெர் 73 ஓட்டங்களையும், வில்லியம்சன் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ராபி 3 இலக்குகளையும், சகிப் அல் ஹசன், றோய், முகமதுல்லா மூவரும் தலா 2 இலக்குகளையும், ரஸ்கின் அகமட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 66-3 என்ற நிலையில் இருந்த போது நான்காம் நாள் முடிவுக்கு வந்தது. நேற்று பங்களாதேஷ் தொடர் சரிவுகண்டது. அந்த அணி 160 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் போல்ட் 3 இலக்குகளையும், சான்நெர், வாக்நெர் இருவரும் தலா 2 இலக்குகளையும், சவுத்தி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

நியூசிலாந்துக்கு இலக்காக 217 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. கிட்டத்தட்ட 45 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருந்தன. ஒருநாள் பாணியில் அடித்தாடிய நியூசிலாந்து மூன்று இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. (ம)



பங்களாதேஷ் அணியின் தலைவரான ரகிம் பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நியூசிலாந்துக்கு எதிராக நேற்று நிறைவடைந்த ஆட்டத்தில், இரண்டாவது இன்னிங்ஸிற்காக ரகிம் துடுப்பெடுத்தாடியபோது சவுத்தி வீசிய பவுன்சர் பந்து ரகிமின் தலைக் கவசத்தை பதம்பார்த்தது. இதனையடுத்து மைதானத்தில் வைத்து முதலுதவிகள் வழங்கப்பட்டு அவர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். (ம)

# நெருக்கடி!

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி நிலை இங்கிலாந்துக்கு ஏற்பட்டது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே தொடரைக் கைப்பற்றலாம் என்ற நெருக்கடி இங்கிலாந்துக்கு ஏற்பட்டது. மாறாக இந்த இரு ஆட்டங்களில் ஒன்றில் வென்றால்கூட கிண்ணத்தை இந்தியா கைப்பற்றுவது உறுதியாகும்.

அடுத்த இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்திய மண்ணில் வைத்து இந்தியாவை வீழ்த்திக் கிண்ணத்தைக் கைப்பற்ற கடும் முனைப்புக் காட்டுவோம் என்று இங்கிலாந்தின் சகலதுறை வீரர் ஸ்ரோக்ஸ் தெரிவித்தார். (ம)



# முக்கிய ஆட்டம்

ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் மூன்றாவது ஆட்டம் நாளைமறுதினம் இடம்பெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். இரண்டு ஆட்டங்கள் முடிந்துள்ளன. இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் சம நிலையில் உள்ளன.

இதனால் நாளைமறுதினம் நடைபெற வுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி தொடரில் ஆதிக் கம் செலுத்த ஆரம்பிக்கும். இந்த ஆட்டத்தில் தோல்வியடையும் அணி அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே கிண்ணத்தைக் கைப்பற்றமுடியம் என்ற நிலைக்குத் தள்ளப்படும். இதன் அடிப்படையில் இந்த ஆட்டம் முக்கிய ஆட்டமாகப் பார்க்கப்படுகிறது. (ம)

# ஆஸ்திரேலியத் தொடரில் கேலப் அதிர்ச்சித் தோல்வி

நடைபெற்றுவரும் ஆஸ்திரேலியத் தொடரின் முதலாவது சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார் கேலப்.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் 4 ஆவது இடத்தில் உள்ள வீராங்கனையான கேலப்பை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை செல்பி றொயேர்ஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் கேலப். அவர் அடுத்த செற்றையும் 1:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்ததை அடுத்து நேர்செற கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

ஆஸ்திரேலியத் தொடரின் முதலாவது அதிர்ச்சித் தோல்வியாக இது அமைந்தது.

கேலப், கடந்த வருடத்தில் இறுதிப் பகுதியில் ஆஸ்திரேலியத் தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# பல்மாஸை நொறுக்கியது பார்சிலோனா

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பல்மாஸை மிக இலகுவாகத் தோற்கடித்தது பார்சிலோனா.

ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவு செய்தார் சுவாரஸ். முதல் பாதியின் முடிவுவரை வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. இரண்டாம் பாதியில் பார்சிலோனாவின் ஆதிக்கம் இரட்டிப்பானது.

52ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். சுவாரஸ் 57 ஆவது நிமிடத்திலும், அர்டா 59 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவு செய்ய 4:0 என்று ஆதிக்கம் செலுத்தியது பார்சிலோனா. விடால் 80 ஆவது நிமிடத்தில் பிறிதொரு கோலைப் பதிவு செய்ய, முடிவில் அந்த அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)




# முகுருசா அபாரம்

ஆஸ்திரேலியத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நேர் செற் வெற்றியுடன் இரண்டாவது சுற்றுக்குள் கம்பீரமாக நுழைந்தார் முகுருசா.

பன்னாட்டு அந்தஸ்துபெற்ற ஆஸ்திரேலியத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்கள் ஒற் றையர் பிரிவு ஆட்டத்தில் ஸ்பெய்ன் வீராங் கனை முகுருசாவை எதிர்த்து நியூசிலாந்து வீராங்கனை மரின் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் போராடிக் கைப்பற்றினார் முருகுசா. அவர் இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து 2:0 என்று நேர்செற் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றார். (ம)

# சதங்களின் பட்டியலில் இருந்து விரைவில் சரிவடைவார் சனத்

## இன்னும் ஒரு சதமே கோக்லிக்குத் தேவை

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் ஒருநாள் ஆட்டங்களில் கோக்லி இன்னும் ஒரு சதம் பெற்றால் சனத் ஜெயசூரியவுக்கு அது பின்னடைவாகவே அமையும்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கோக்லி 122 ஓட்டங்களை விளாசி இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். இந்தச் சதம் கோக்லியின் 27ஆவது ஒருநாள் சதமாகும். இதன்மூலம் அதிக சதங்களைப் பதிவுசெய்தவர்களின் பட்டியலில் சனத் ஜெயசூரியவுக்கு அடுத்த இடத்துக்கு கோக்லி முன்னேறினார். சனத் இதுவரை 28 சதங்களைப் பெற்றுள்ளார். கோக்லி இன்னும் ஒரு சதத்தைப் பதிவுசெய்தால் சனத் ஜெயசூரியவைப் பின்தள்ளி மூன்றாவது இடத்துக்கு முன்னேறுவார். இந்தப் பட்டியலில் சச்சின் 49 சதங்களுடன் முதலிடத்திலும், பொண்டிங் 30 சதங்களுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். இதன் அடிப்படையில் ஓய்வை அறிவிக்காமல் தற்போது விளையாடும் வீரர்களில் அதிக சதம் விளாசியவர் என்ற பெருமையும் கோக்லிக்குக் கிடைத்துள்ளது.

இந்திய அணி இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடியபோது அதிக சதம் விளாசியவர்களின் வரிசையில் சச்சினுடன் முதலிடத்தைப் பகிர்ந்தார் கோக்லி. இருவரும் தலா 17 சதங்களைக் குவித்துள்ளனர். (ம)




# ரியல் மட்ரிட்டைத் தோற்கடித்தது செவில்லா

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பலம் வாய்ந்த ரியல்மட்ரிட்டைத் தோற்கடித்தது செவில்லா.



கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் ஆரம்பம் ரியல் மட்ரிட்டுக்குச் சாதகமாகவே இருந்தது. 62 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மட்ரிட் டின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 85 ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் தலைவரான ராமோஸ், சக இலக்குக் காப் பாளருக்கு என சாதாரணமாகத் தட்டிவிட்ட பந்தை இலக்குக் காப்பாளர் தவறவிட, மட்ரிட்டுக்கே வில்லங்கத்தனமான கோலாக முடிந்தது. ஜோவ்ரிக் 90 ஆவது நிமிடத்தில் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் செவில்லா வென்றது. (ம)

**அச்சக வேலைக்கு ஆள் தேவை**

புத்தகம் கட்டும் வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்களும். பழக விரும்புபவர்களும் தேவை. யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு - 0777918373

**BSc காமராசர் பல்கலைக்கழகம் மதுரை**

- A/L இல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- இப்பட்ட நெறிகளின் கால எல்லை மூன்று ஆண்டுகள் ஆகும்.
- பதிவுகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான புதிய உயர் கல்லூரியில் நடைபெறுகின்றன.
- விரிவுரைகள் ஆரம்பம்: - 21.01.2017 காலை 8 மணி

குறிப்பு: B.A,B.com இவற்றுக்குரிய பதிவுகளும், விரிவுரைகளும் மேற்குறிப்பிட்ட திகதியில் ஆரம்பமாகின்றன.

இப்பட்ட நெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.

- வெளிமாவட்ட மாணவர்களுக்கான (ஆண்/ பெண் இருபாலாருக்குமான) தங்குமிட வசதி இலவசம்.

யாழ்.இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம்
021 222 8148, 021 568 9477, 077 846 9721

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 21.01.2017

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

8 பாடப்புத்தகங்கள் மற்றும் வீடியோ DVD இலவசம்!

வாரநாள் பிரிவுகள் - காலை 08-10 (செவ்வாய் & வியாழன்)

SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 3313 077 1570 486

**புதியதோர் வேலைவாய்ப்பு**

அமெரிக்கன் நிறுவனமானது தனது இரண்டாவது கிளையை யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கவுள்ளது. இதற்காக உடனடியாக வேலையாள்களை இணைக்கவுள்ளது. ஆர்வமுடைய O/L, A/L படித்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 023 454 9788, 076 864 3505, 077 517 9034

**எழுதுனர் தேவை**

எமது ஆங்கிலமொழிப்பயிற்சி நிறுவனத்திற்கு எழுதுனர் (பெண்)உடனடியாகத் தேவை.

- O/L படித்திருத்தல் போதுமானது.
- சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
- தெளிவான கையெழுத்து உடையவராக இருத்தல் வேண்டும்
- யாழ் நகருக்கு அண்மையாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்!

ஆர்வமுடையோர் நாளை (18.01.2016) புதன்கிழமை காலை 10 மணிக்கு சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம் யாழ்நகர் 077 1570 486 077 320 3313

**வேலையாள்கள் தேவை**

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றிற்கு கணக்காளர், விற்பனையாளர் தேவை. ஆண்கள் மட்டும்.

021 222 2505

**பணியாள்கள் தேவை**

எமது நிறுவனத்தில் நிரந்தரமாகப் பணிபுரியக் கூடிய கணினி ரைப்பிங் செய்யத் தெரிந்த நல்லொழுக்கம், நற்பண்புள்ள பெண் பணியாள்கள் தேவை. தகுதியானவர்கள் மேலதிக விவரங்களுக்கு நேரில் வருகை தரவும்.

செல்வா கொமினிக்கேசன்
124, கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(வொல்கோ மாடசாலை சந்தி)

**வேலையாள்கள் தேவை**

சுன்னாகத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலைகளுக்காக வேலையாள்கள் தேவை.

- விற்பனைப் பிரதிநிதி (Sales representative)
- சாரதி (Drivers)
- கூலியாள்கள் (Labours)

சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக

தொடர்பு:-
021 224 0514, 077 386 7696

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.